*அத்தியாயம் 2*


# தேசிய உற்பத்தியும் செலவினமும்

## 2.1 பொதுநோக்கு

2004 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.4 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது கடந்த இரு தசாப்தங்களாகக் காணப்பட்ட ஆண்டிற்குரிய ஏறத்தாழ 5 சதவீதம் கொண்ட வளர்ச்சிப்போக்குடன் இது ஒத்ததாகக் காணப்பட்டபோதும், 2003 இல் பதிவு செய்யப்பட்ட 6 சதவீதத்திலும் பார்க்க ஓரளவிற்கு குறைவானதாக விளங்கி நடுத்தரகால இலக்குகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் வளர்ச்சி வீதத்தினை விரைவு படுத்தப்பட வேண்டிய தேவையினை எடுத்துக் காட்டியது. பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகள் முன்னைய ஆண்டினை ஒத்த வளர்ச்சி வீதத்தினைப் பேணியதுடன் பல துணைத்துறைகள் 2003 இலும் பார்க்க உயர்ந்த வளர்ச்சி வீதங்களை எய்தின. இதன் விளைவாக, 2004 இன் வளர்ச்சி குறைவடைந்தமைக்கு குறிப்பிட்ட சில வேளாண்மைத் துணைத் துறைகளிலும் மின்வலு உருவாக்கத்திலும் ஏற்பட்ட மோசமான செயலாற்றமே முக்கிய காரணமாக இருந்தது. மோசமான வானிலையானது குறிப்பிட்ட சில பிரதேசங்களில் பெருந்தோட்ட வேளாண்மையையும் அத்துடன் சிறுபோக மற்றும் பெரும்போக பயிர்ச்செய்கை பருவங்களில் நெல்லுற்பத்தியையும் நீர் மின்வலு உருவாக்கத்தினையும் பாதித்தது. வளர்ச்சியில் காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கானது வலுவான உயர் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு பொருளாதாரத்தில், குறிப்பாக வேளாண்மை மற்றும் வலுத்துறைகளில் ஆழமாக வேரூன்றியுள்ள அமைப்பியல் பலயீனங்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தின. வளர்ச்சிக்கு நுகர்வு மற்றும் முதலீடு ஆகியன அனுசரணையளித்ததுடன் இவையிரண்டும் முன்னைய ஆண்டிலும் பார்க்க மெதுவான வேகத்தில், ஆனால் ஆரோக்கியமான வளர்ச்சியைக் கொண்டிருந்தன. மொ.உ.உற்பத்தியின் பங்காக முதலீடுகள் 22 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு உயர்வடைந்தபோதும் உயர்ந்ததும் வலுவானதுமான வளர்ச்சியைப் பேணுவதற்குத் தேவையான மட்டத்தினை விட இன்னமும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது.

வரைபடம் 2.1

**ஆண்டு வளர்ச்சி வீதங்கள்**




2004 இன் முதற்காற் பகுதியில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் வரட்சி நிலைமைகள் காணப்பட்டபோதும், உறுதியான வெளிநாட்டுச் செலாவணிச்சந்தை, குறைந்த பணவீக்கம் மற்றும் தாழ்ந்த வட்டிவீத சூழல் என்பனவற்றின் காரணமாக பொருளாதாரம் 6 சதவீதத்திற்கு மேற்பட்ட வளர்ச்சியை எய்தியது. வலுவான உலகளாவிய கேள்வி ஏற்றுமதிகளைத் தூண்டியதுடன் முதலீட்டு வளர்ச்சியும் குறிப்பாக ஆண்டின் முதலரைப்பகுதியில் ஆரோக்கியமானதாகக் காணப்பட்டது. எனினும், மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக இவ்வுயர்ந்த வளர்ச்சியின் வேகம் நீடித்துக் காணப்படாததுடன் மொ.உ. உற்பத்தியின் வளர்ச்சி வீதமும் அதன் பின்னர் ஓரளவு குறைவடைந்தது. குறிப்பாக நான்காம் காலாண்டில் காணப்பட்ட குறைந்த வளர்ச்சி வீதமானது, முன்னைய ஆண்டின் உயர்ந்த தளத்தின் விளைவாக எழுந்த தாக்கத்தினைப் பிரதிபலித்தது. அதேவேளை, இடைநிலைப் பொருட்களில் குறிப்பாக, எண்ணெய்யின் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட உயர்வு மற்றும் இலங்கையின் ரூபாவில் ஏற்பட்ட தேய்மானம் மற்றும் கூலிகளின் அதிகரிப்பு என்பனவற்றுடன் இணைந்து உள்நாட்டு உற்பத்திச் செலவினை உயர்த்தின. இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் உயர்ந்த பன்னாட்டு விலைகளின் முக்கிய காரணமாக வர்த்தக மாற்று விகிதம் 5 சதவீதத்தினல் தேய்வடைந்து, பொருளாதார வளர்ச்சிக்கான வெளிநாட்டு வர்த்தகத்தின் விரிவாக்கத்திலிருந்து கிடைக்கும் பங்களிப்பினை மட்டுப்படுத்தியதுடன் நாட்டின் உற்பத்தியாக்கத்தினை உயர்த்துவதற்கான தேவையினையும் வலியுறுத்தியது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, பணிகள் துறை உயர்ந்த வளர்ச்சியை (7.6 சதவீதம்) பதிவு செய்ததுடன் மொத்த வளர்ச்சியில் 77 சதவீதத்திற்கும் பங்களித்தது. தொலைத்தொடர்பூட்டல், இறக்குமதி வர்த்தகம் மற்றும் நிதியியல் பணிகள் இத்துறையின் பொதுவான வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களித்த

வேளையில், சுற்றுலாவுடன் தொடர்பான பணிகள், சரக்குக் கையாளல் மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் என்பனவும் நன்கு செயலாற்றின. கைத்தொழில் துறை 5.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, வளர்ச்சியில் 26 சதவீதத்திற்குப் பங்களித்தது. இத்துறையில் உள்நாட்டு, அதேபோன்று ஏற்றுமதி சார்ந்த தொழிற்சாலைக் கைத்தொழில்களில் வலுவான செயலாற்றம் பதிவு செய்யப்பட்டமைக்கு உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சியும் கட்டுமானத் துறையில் காணப்பட்ட செழிப்பும் இவ்வளர்ச்சிக்கு உதவின. குறிப்பிட்ட சில மாவட்டங்களில் நிலவிய வரட்சி வானிலை நெல் மற்றும் தெங்கு பயிர்ச்செய்கைகளைப் பாதித்தமையின் காரணமாக வேளாண்மைத்துறை எதிர்க்கணிய வளர்ச்சியைக் கொண்டிருந்தபோதும், கிடைக்கத்தக்க நீரைப் பயன்படுத்தி உச்சமட்ட பயனைப் பெறும் விதத்தில் நெல்லிலும் பார்க்க குறைந்த நீர் தேவைப்படும் பயிர்களுக்கு வேளாண்மையாளர் மாறிக்கொண்டமையின் காரணமாக சில உள்நாட்டு வேளாண்மைத்துணைத் துறைகள் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன.

செலவினப் பக்கத்தில், 2004 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி ரூ.2,029 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டு 15.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. உண்மைப் பொருளாதார வளர்ச்சியில் வீழ்ச்சிப்போக்கு காணப்பட்டபோதும், இவ்வுயர்ந்தவீத அதிகரிப்பிற்கு பொதுவான விலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மொ.உ.உற்பத்திச்

அட்டவணை 2.1

**நிலையான (1996) விலைகளில் மொத்தத் உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் (அ)**

| துறை | அதிகரிப்பு வீதம் (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு(%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதப் பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2003(ஆ) | 2004(இ) | 2003(ஆ) | 2004(இ) | 2003(ஆ) | 2004(இ) |
| **வேளாண்மை** | 1.6 | -0.7 | 5.4 | -2.5 | 19.0 | 17.9 |
| **1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில்** | 1.6 | -0.7 | 5.4 | -2.5 | 19.0 | 17.9 |
| 1.1 வேளாண்மை | 3.2 | -1.4 | 8.0 | -3.7 | 14.7 | 13.8 |
| தேயிலை | -2.2 | 1.6 | -0.5 | 0.4 | 1.3 | 1.3 |
| இறப்பர் | 0.3 | 3.3 | 0.0 | 0.2 | 0.4 | 0.3 |
| தெங்கு | 8.0 | -1.6 | 1.7 | -0.4 | 1.3 | 1.2 |
| நெல் | 7.5 | -15.1 | 3.9 | -9.0 | 3.2 | 2.6 |
| ஏனையவை | 1.9 | 3.2 | 2.9 | 5.1 | 8.6 | 8.4 |
| 1.2 காட்டுத்தொழில் | 1.4 | 1.3 | 0.4 | 0.4 | 1.8 | 1.7 |
| 1.3 கடற்றொழில் | -6.9 | 1.6 | -3.1 | 0.7 | 2.4 | 2.3 |
| **கைத்தொழில்** | 5.5 | 5.2 | 24.3 | 25.7 | 26.5 | 26.5 |
| **2. சுரங்கத் தொழிலும் கல்லுடைத்தலும்** | 5.7 | 7.9 | 1.6 | 2.5 | 1.7 | 1.7 |
| **3. தயாரிப்புத் தொழில்** | 4.2 | 5.1 | 11.5 | 15.5 | 16.3 | 16.3 |
| 3.1 தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் பதனிடல் | -0.1 | 1.2 | 0.0 | 0.4 | 1.8 | 1.7 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 4.6 | 6.1 | 10.3 | 15.3 | 13.3 | 13.4 |
| 3.3 சிறு கைத்தொழில் | 6.1 | -0.6 | 1.3 | -0.1 | 1.2 | 1.2 |
| **4. மின்வலு, நீர்** | 21.6 | -2.5 | 4.9 | -0.7 | 1.6 | 1.5 |
| 4.1. மின்வலு | 25.2 | -3.5 | 4.9 | -0.9 | 1.4 | 1.3 |
| 4.2. நீர் | 1.3 | 4.7 | 0.0 | 0.2 | 0.2 | 0.2 |
| **5. கட்டடவாக்கம்** | 5.5 | 6.6 | 6.3 | 8.5 | 6.9 | 7.0 |
| **பணிகள்** | 7.9 | 7.6 | 70.3 | 76.8 | 54.5 | 55.7 |
| **6. மொத்த சில்லறை வர்த்தகம், சுற்றுலாவிடுதி,உணவகங்களும்** | 7.8 | 6.0 | 28.4 | 24.9 | 22.2 | 22.3 |
| 6.1 இறக்குமதி வர்த்தகம் | 11.2 | 9.0 | 17.5 | 16.6 | 9.9 | 10.2 |
| 6.2 ஏற்றுமதி வர்த்தகம் | 3.5 | 7.7 | 1.4 | 3.4 | 2.4 | 2.5 |
| 6.3 உள்நாட்டு வர்த்தகம் | 4.5 | 1.7 | 7.0 | 2.9 | 9.3 | 8.9 |
| 6.4 சுற்றுலாவிடுதி, உணவகங்கள் | 26.4 | 15.9 | 2.4 | 2.0 | 0.7 | 0.7 |
| **7. போக்குவரத்து,களஞ்சியப்படுத்தல்,தொடர்பூட்டல்** | 10.6 | 13.7 | 22.7 | 34.4 | 13.5 | 14.6 |
| 7.1 போக்குவரத்து | 4.6 | 4.2 | 6.3 | 6.5 | 8.2 | 8.1 |
| 7.2 சரக்குக்கையாளல் களஞ்சியப்படுத்தல், பண்டகசாலை | 9.8 | 12.3 | 1.4 | 2.0 | 0.9 | 0.9 |
| 7.3 தபால், தொலைத் தொடர்பூட்டல் | 23.9 | 31.3 | 15.1 | 25.9 | 4.4 | 5.5 |
| **8. நிதியியல்பணிகள், உண்மைச்சொத்து, வியாபாரப் பணிகள்** | 8.8 | 5.7 | 16.6 | 12.3 | 11.7 | 11.7 |
| 8.1 நிதியியல் பணிகள் | 10.6 | 6.6 | 15.6 | 11.4 | 9.2 | 9.3 |
| 8.2 உண்மைச்சொத்து, வாடகைக்கு விடல் மற்றும் வியாபாரப் பணிகள் | 2.4 | 2.0 | 1.0 | 0.9 | 2.5 | 2.4 |
| **9. பொது நிருவாகம், ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும், ஏனைய சமூகங்கள், சமூக தனியாள்ப் பணிகள்** | 2.1 | 3.9 | 2.6 | 5.2 | 7.2 | 7.1 |
| 9.1 பொதுநிருவாகம்,ஏனையஅரச பணிகளும் பாதுகாப்பும் | 0.6 | 2.0 | 0.5 | 1.7 | 4.5 | 4.4 |
| 9.2 ஏனையசமூகங்கள், சமூக், தனியாள் பணிகள் | 4.7 | 7.1 | 2.1 | 3.5 | 2.6 | 2.7 |
| **10. மொத்த உள்நாட்டு உற்பத்தி** | 6.0 | 5.4 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| **11. வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருவாய்** | -32.2 | 19.3 | - | - | - | - |
| **12. மொத்த தேசிய உற்பத்தி** | 6.6 | 5.2 | - | - | - | - |

(அ) இந்த அட்டவணையில் உள்ள பணிகள் துறை 1993 தேசிய கணக்கு முறையில் விதந்துரைக்கப்பட்ட பன்நாட்டு நியமக் கைத்தொழில் பகுப்பினைப் பின்பற்றி திருத்தப்பட்டுள்ளது (சிறப்புக்குறிப்பு 5 இனைப் பார்க்கவும்).

(ஆ) திருத்தியமைக்கப்பட்டது

(இ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறப்புக் குறிப்பு -5

## மொத்தத் தேசிய உற்பத்திக் கணக்கின் மீள் வகைப்படுத்தல்

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது (மொ.உ.உ வளர்ச்சி வீதம்) ஓர் ஆண்டினுள்ளோ அல்லது ஒரு காலாண்டினுள்ளோ நாடொன்றின் பொருட்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியின் பொதுவான செயலாற்றத்தை அதனையொத்த முன்னைய காலப்பகுதியுடன் தொடர்புபடுத்தி எடுத்துக் காட்டுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது பொருளாதாரத்தின் ஒவ்வோர் துறைகளுக்கும் அவ்வாறான சகல உற்பத்திச் செயற்பாடுகள் மீது தனித்தனியாக திரட்டப்பட்ட சுருக்கமானதொரு கூற்றாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி செயலாற்றமானது பரந்தளவிலான வகைகளுக்குப் பகுக்கப்பட்ட அவ்வாறான பொருளாதார நடவடிக்கைகள் மீதான வெளிப்படுத்துகையாக வழமையாக வெளியிடப்படுகிறது. இத்துறை வாரியான பகுப்பு எத்துறைகள் விரைவாக வளர்ச்சியடைந்து பொருளாதார வளர்ச்சிக்கு கூடியளவில் பங்களிப்புச் செய்தன மற்றும் எத்துறைகள் பின் தங்கியிருந்தன ஆகிய விபரங்களை எடுத்துக்காட்டுவதற்கு முக்கியமானதாக விளங்குகின்றது. கொள்கை வகுப்போர் எத்துறைகள் புதிய வாய்ப்புக்களை உருவாக்கக்கூடியவை மற்றும் எத்துறைகள் பாதிப்புக்குள்ளாகும் தன்மையுடன் அவதானத்தினை வேண்டி நிற்பவை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படக் கூடியவர்களாக இருப்பதால், இத் தகவல் அவர்களுக்கு மிக முக்கியமானதாகும். எனவே, காலம் காலமான மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவுத் தொடர்கள் வரலாற்று ரீதியான வளர்ச்சி போக்குகளின் பதிவை வழங்குவது மட்டுமன்றி பொருளாதாரத்தில் ஏற்பட்ட அமைப்பு ரீதியிலான மாற்றங்களையும் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையின் தேசியக் கணக்குகளை மதிப்பிடுவதற்கு, மத்திய வங்கி "தேசிய கணக்குகள் முறைமை" என்ற பிரசுரத்தில் உள்ள விதந்துரைப்புக்களைப் பின்பற்றியதுடன் தேசிய கணக்குகளின் முறைமை 1968 இல் விதந்துரைக்கப்பட்ட சில திருத்தங்களுடன் 1964 ஆம் ஆண்டுப் பதிப்பைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் துணை அட்டவணைகளையும் பயன்படுத்துகின்றது. எவ்வாறாயினும், இன்று அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அநேகமானவை தேசிய கணக்குகள் முறைமை 1968 இன் திருத்தியமைக்கப்பட்ட பதிப்பான தேசிய கணக்குகள் முறைமை 1993 இல் எடுத்துக் காட்டப்பட்டுள்ள முறைமைகளையும் நியமங்களையும் பின்பற்றுவதுடன் இவற்றால் வழிநடத்தப்படுகின்றன. தேசிய கணக்குகள் முறைமை 1993, ஏனைய பன்னாட்டு புள்ளிவிபர நியமங்களுடன் தேசிய கணக்குகள் முறைமையை ஒருங்கிணைக்கும் வகையில் பன்னாட்டு ரீதியான கைத்தொழில் நியமங்கள் வகைப்படுத்தல்கள் பகுப்பாய்வின் திருத்தம் 3 இனைப் பயன்படுத்தி குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்யும் சகல பொருளாதார நடவடிக்கைகளையும் உற்பத்திக் கணக்கின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டுமென விதந்துரைக்கின்றது. இது தேசிய கணக்குகள் தரவுகளின் பன்னாட்டு ரீதியான ஒப்பீட்டையும் தற்போதைய நிலைமையில் பொருளாதாரத்தின் பரந்தளவானதும் பெருமளவு அர்த்தமுள்ள தோற்றப்பாட்டையும் இயலச் செய்யும்.

இதுகாலம் வரை, நாட்டின் சகல பொருளாதார நடவடிக்கைகளும் தேசிய கணக்குகள் முறைமை 1964 இல் விதந்துரைக்கப்பட்டவாறு பதினொரு முக்கிய துறைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு தொழிற் படுத்தப்பட்டன. பன்னாட்டு நியம கைத்தொழில் பகுப்பாய்வின் மூன்றாம் திருத்தமானது சகல பொருளாதார நடவடிக்கைகளையும் சில முக்கிய துணைத் துறைகளின் விரிவான வெளிப்படுத்தலுடன் ஒன்பது முக்கிய துறைகளுக்கு வகைப்படுத்துகின்றது. இவை முன்னைய வகைப்படுத்தலில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை (அட்டவணை I). ஒன்பது துறைகளுள் ஐந்து துறைகள் முன்னைய பதிப்பில் உள்ளவாறு வேளாண்மை மற்றும் கைத்தொழிலைச் சார்ந்ததாகும். பணிகள் துறை முன்னைய பதிப்பிலுள்ளவாறான ஆறு துறைகளுக்குப் பதிலாக எஞ்சிய நான்கு துறைகளை உள்ளடக்கியுள்ளது. இம் மீள் வகைப்படுத்தலானது ஏற்கனவே பிரசுரிக்கப் பட்ட மற்றும் எதிர்காலத்துக்கு எறிவு செய்யப்பட்ட துறை ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகள் மீது தாக்கத்தைக் கொண்டிராது. இது இன்றைய நிலை ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டதன் பெருமளவு கருத்துமிக்கதொரு மீள் ஒழுங்கு படுத்தலாகும். பணிகள் துறையின் இம் மீள் வக்கப்படுத்தலானது இலங்கையின் தேசிய கணக்குகளுக்காக தேசிய கணக்குகள் முறைமை 1993 இன் நடைமுறைப்படுத்தலை நோக்கி மத்திய

**சிறப்புக் குறிப்பு 5 (தொடர்ச்சி)**

வங்கியால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது படிமுறை ஆகும். முதலாவது படிமுறையாக நோக்கத்தின்படியான தனியாள் நுகர்வு வகைப்படுத்தலுக்கு இணங்க தனியார் நுகர்வுச் செலவினம் மீளவகைப்படுத்தப்பட்டு 2002 ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டது. தேசிய கணக்குகள் முறைமை 1993 இலும் இது விதந்துரைக்கப்பட்டுள்ளது.

வதிவிடங்களின் சொத்துரிமை மற்றும் வேறெங்கும் குறிப்பிடப்படாத பணிகள் என்பவற்றை ஏனைய நான்கு முக்கிய துறைகளுடன் ஒருங்கிணைத்தமையால் மீள் வகைப்படுத்தலானது பணிகள் துறையின் விரிவான துறைகளை மாற்றமுற செய்கிறது. வதிவிடங்களின் சொத்துரிமை துறையின் சொத்துரிமையிலான பெறுமதி கூட்டலானது, சகல வீடுகளினதும் இடைநிலை உள்ளீடுகளுக்காக சீராக்கஞ் செய்யப்பட்ட வாடகைப் பெறுமதியாகும். இங்கு வீடுகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கலாம். அல்லது சொந்தக்காரர் குடியிருக்கலாம். இது உண்மைச் சொத்து, வாடகைக்குவிடல் மற்றும் வியாபாரப் பணிகள் துணைத் துறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னைய வகைப்படுத்தலில் வேறெங்கும் உள்ளடக்கப்பட்டிராத சகல பணிச் செயற்பாடுகளையும் உள்ளடக்கியிருக்கும் பணிகள் துறையானது, சமுதாய, சமூக மற்றும் பிரத்தியேகப் பணிகள் (தனியார்க் கல்வி மற்றும் நலப்பணிகள், திருத்த வேலைகள், பொழுதுபோக்கு மற்றும் களியாட்டம், தைத்தல், சலவை செய்தல், சிகை அலங்காரம், சூதாட்டம் மற்றும் அதிஸ்டலாபச் சீட்டுக்கள் போன்றவை) வியாபாரப் பணிகள் (பொறி மற்றும் கருவியை வாடகைக்கு விடல், விளம்பரப்படுத்தல், தனியார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பணிகள், கணனி மென்கல அபிவிருத்தி, தொழில் முகவர்கள், கணக்கியல், முகாமைத்துவம், சட்டம் மற்றும் செயலகப் பணிகள் போன்றவை); சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும்; தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்புப் பணிகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. தொடக்கத்தில் பொருளாதாரச் செயற்பாடுகளிடையேயான அவற்றின் குறைவான நுழைவு மற்றும் சார்பு ரீதியில் குறைவான முக்கியத்துவம் காரணமாக அவை முதன் முறையாக தோற்றம் பெற்ற போது வேறெங்கும் குறிப்பிடப்படாதவையாக ஆரம்பத்தில் வகைப்படுத்தப்பட்ட இப்பொருளாதாரச் செயற்பாடுகளில் அநேகமானவை, உலகம் முழுவதும் பொருளாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட பன்முகப்படுத்தலில் கடந்த மூன்று தசாப்தங்களாக விரைந்து வளர்ச்சியடைந்தன. எனவே, பன்னாட்டு ரீதியான கைத்தொழில் நியமங்களில் வகைப்படுத்தலின் திருத்தம் 3, இத்துணைத்துறைகளின் முக்கியத்துவம் காலம் காலமாக அதிகரித்துச் செல்வதனைக் கருத்திற் கொண்டு, இத் துணைத்துறைகளை வகைப் படுத்தப்படாத பணிகளிலிருந்து பிரதான வகைப்படுத்தலுக்குள் உள்வாங்குவதற்கு வசதியளிக்கின்றது. மீள்வகைப்படுத்தலின் கீழ், சமுதாயம், சமூக மற்றும் பிரத்தியேகப் பணிகள் என்பன பொது நிருவாகம் மற்றும் ஏனைய அரச பணிகளுடன் பொதுவாக சமுதாயத்துடன் மீள் தொகுதிப்படுத்தப்படுகின்றன; வியாபாரப் பணிகள் நிதியியல் பணிகளுடனும் உண்மைச் சொத்துக்களுடனும் மீள்தொகுதிப்படுத்தப்படுகின்றன; சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத்துறை தற்போது மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துடன் தொகுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பு என்பன மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணைத் துறையின் கீழ் வருகின்றன.

இதேவேளை, தேசிய கணக்குகள் முறைமையின் கீழ் வகைப்படுத்தலில் நெகிழ்வுதன்மை அனுமதிக்கப்பட்டுள்ளதால் பரந்தளவிலான பொதுமைப் படுத்தலில் ஒவ்வொரு தேசிய அடையாளமும் முழுமையாக இழக்கப்பட மாட்டாது. உதாரணமாக, திருத்தியமைக்கப்பட்ட பன்னாட்டு கைத்தொழில் நியமங்கள் வகைப்படுத்தலில் உந்து ஊர்திகள், உந்து ஈருருளிகள் மற்றும் தனிப்பட்ட பாவனை மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்களின் திருத்த வேலை துணைத்துறை அபிவிருத்தியடைந்த அநேக நாடுகளிலுள்ளவாறு மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துறையுடன் தொகுதிப்படுத்தப்பட்டதுடன் வர்த்தகம் செய்தல், விற்பனைக்குப் பின்னரான திருத்த பணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கையில் நிலைமை அவ்வாறானதல்ல. இலங்கையில் அநேகமான திருத்தப் பணிகள் வாகனம் திருத்துமிடங்கள், திருத்தும் கடைகள் அல்லது தனி ஆட்களால் வழங்கப்படுகின்றன. எனவே, இலங்கைக்கான புதிய வகைப்படுத்தலில் இத்துணைத்துறை ஏனைய சமுதாயம், சமூக மற்றும் பிரத்தியேகப் பணிகள் துணைத்துறையுடன் தொகுக்கப்பட்டுள்ளது.

ஆண்டறிக்கை 2004 திருத்தியமைக்கப்பட்ட வகைப்படுத்தலை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முன்னைய வகைப்படுத்தல் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட வகைப்படுத்தல் ஆகிய இரண்டையும் அறிமுகப்படுத்தும். 2005 யூன் 30 இல் வெளியிடுவதற்கு நிரற்படுத்தப்பட்டுள்ள 2005 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் வெளியீட்டுடன் துறை வாரியான மொத்த உள்நாட்டு உற்பத்தி செயலாற்றம் புதிய வகைப்படுத்தலின் கீழ் மட்டும் வெளியிடப்படும்.

**சிறப்புக் குறிப்பு 5 (தொடர்ச்சி)**

மொத்த தேசிய உற்பத்தி மீள்வகைப்படுத்தல்- பணிகள் துறை

| முன்னைய வகைப்படுத்தல் | முன்மொழியப்பட்ட வகைப்படுத்தல் |
|---|---|
| **6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல்**<br>6.1 துறைமுகப் பணிகள்<br>6.2 தொலைத்தொடர்பூட்டல்<br>6.3 போக்குவரத்து<br><br>**7. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்**<br>7.1 இறக்குமதிகள்<br>7.2 ஏற்றுமதிகள்<br>7.3 உள்நாட்டு<br><br>**8. வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து**<br>8.1 வங்கித்தொழில்<br>8.2 காப்புறுதி, உண்மைச் சொத்து மற்றும் நிதியியற் பணிகள்<br><br>**9. வதிவிடங்களின் சொத்துரிமை**<br>**10. பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு**<br>**11. பணிகள் (வே.எ.கு)**<br>11.1 சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும்<br>11.2 ஏனையவை | **6. மொத்த விற்பனையும் சில்லறை வர்த்தகமும், சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும்**<br>6.1 இறக்குமதி வர்த்தகம்<br>6.2 ஏற்றுமதி வர்த்தகம்<br>6.3 உள்நாட்டு வர்த்தகம்<br>6.4 சுற்றலா விடுதிகளும் உணவகங்களும்<br><br>**7. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல்**<br>7.1 போக்குவரத்து<br>7.2 சரக்கு கையாளல் மற்றும் களஞ்சியப்படுத்தல்<br>7.3 தபால் மற்றும் தொடர்பூட்டல்<br><br>**8. நிதியியற் பணிகள், உண்மைச் சொத்து மற்றும் வியாபாரப் பணிகள்**<br>8.1 நிதியியற் பணிகள்<br>வங்கித்தொழில்<br>காப்புறுதி மற்றும் ஏனைய நிதியியற் பணிகள்<br>8.2 உண்மைச் சொத்து வாடகைக்கு விடல் மற்றும் வியாபாரப் பணிகள்<br><br>**9. பொது நிருவாகம், ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும், ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனியாள் பணிகள்**<br>9.1 பொது நிருவாகம் ஏனைய அரச பணிகள் மற்றும் பாதுகாப்பு<br>9.2 ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனியாள் பணிகள் |

சுருக்கியினால் அளவிடப்பட்டவாறான பொதுவான விலைப் பணவீக்கம் 2003 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 9.2 சதவீதமாகக் காணப்பட்டது. சுருக்கியில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பிற்கு அரச துறைக் கூலிகளிலும், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் போன்ற இடைநிலைப் பொருட்களின் விலைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களும், ஐ.அ.டொலருக்கெதிராக, இலங்கை ரூபா சராசரியாக, ஏறத்தாழ 5 சதவீதத்தினால் தேய்வடைந்தமையுமே காரணங்களாகும். 2004 இல் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ரூ.104,347 ஆக மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டினைவிட 14.1 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாக இருந்தது. ஐ.அ.டொலர் நியதிகளில், தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2003 இன் ஐ.அ.டொலர் 948 இலிருந்து 2004 இல் ஐ.அ.டொலர் 1,031 இற்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் 2001 இல் சுருக்கமடைந்த பொருளாதாரம் 2002 இலும் 2003 இலும் மீட்சியடைந்தமைக்கு நுகர்வோர் நம்பிக்கை பெருமளவு ஆதரவளித்ததுடன் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மீட்சியும் உதவியது. 2002 இன் தொடக்கத்திலிருந்து காணப்பட்ட தொடர்ச்சியான யுத்தநிறுத்தம், அதன் விளைவாக நாட்டில் நிலவிய சமாதான சூழல் என்பன நுகர்வினால் உந்தப்பட்ட வளர்ச்சிக்கு வழியமைத்ததுடன் இது முடக்கி வைக்கப்பட்டிருந்த கேள்வியினால் மேலும் வலுவடைந்தது. முதலீட்டாளர்களின் பிரதிபலிப்பு விரைந்த அளவில் காணப்படாததுடன் 2002 மற்றும் 2003 இன் தொடக்கப்பகுதியில் "பொறுத்திருந்து பார்க்கும்" கொள்கையையே பின்பற்றினர் முதலீட்டாளர் நம்பிக்கையிலானதொரு மேம்பாடானது 2003 இன் பின்னரைப் பகுதியில் முதலாவதாக அவதானிக்கப் பட்டது. 2004 இல் முடக்கி வைக்கப்பட்டிருந்த கேள்வி பூர்த்தி செய்யப்பட்டவுடன் நுகர்வோர் செலவினம் குறை வடைந்த வேளையில் முதலீட்டுப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டவாறு குறிப்பாக முதலரைப்பகுதியில், முதலீட்டு வேகம் உண்மை நியதிகளில் முதற்காலாண்டில் 55 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் பின்னர் இரண்டாம் காலாண்டில் 30 சதவீதத்தினால் அதிகரித்தது. உயர்ந்த முதலீட்டாளர் நம்பிக்கை கொழும்பு பங்குச் சந்தையில் பல சந்தைக் குறிகாட்டிகளில் அடையப்பட்ட உச்ச மட்டங்களிலும் பிரதிபலிக்கப்பட்ட வேளையில், முன்னைய ஆண்டில் கையெழுத்திடப்பட்ட முதலீட்டு


உடன்படிக்கைகள் நடைமுறைக்கிடப்பட்டதன் காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் நியதிகளில் 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவ்வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2005 இல் பல்நூழிலை உடன்படிக்கை கட்டம் கட்டமாக அகற்றப்படுவதனை ஈடுசெய்யும் விதத்தில் ஆடைக் கைத்தொழில்களின் இயலளவு விரிவாக்கம் மற்றும் உற்பத்தியாக்க அதிகாரிப்பு என்பனவற்றிற்கு முதலீடுகளை வழங்கவும், சுற்றுலா மற்றும் தொடர்பூட்டல் கைத்தொழில்களுக்கு வளர்ந்துவரும் கேள்வியை பூர்த்தி செய்வதற்கான முதலீடுகளை வழங்கவும் வழிவகுத்தது. ஆண்டு முழுவதும் தனியார் துறைக் கொடுகடனின் விரிவாக்கத்தில் காணப்பட்ட விரைவும் முதலீட்டாளர் நம்பிக்கைக்கு சான்று பகன்ற வேளையில், தாழ்ந்த உண்மைவீத வட்டி அமைப்பும் இவ்வளர்ச்சிக்கு உதவியிருக்கிறது. தொடர்ச்சியான யுத்த நிறுத்தத்தின் காரணமாக மேம்பட்ட பொருளாதார தோற்றப்பாடு, நிதியாண்டின் இறுதியில் காணப்பட்ட கம்பனிகளின் குறிப்பாக உயர்ந்த சுற்றுலா வருகையைத் தொடர்ந்து சுற்றுலாவிடுதித் துறையிலுள்ள கம்பனிகளின் ஐந்தொகை வலுவடைந்து காணப்பட்டமை என்பன உயர்ந்த மூலதன செலவிடல்களைத் தூண்டியிருக்கக் கூடும். எனினும், இவ்வளர்ச்சி 2004 இன் பின்னரைப் பகுதியில் குறைவடைந்தது. 2004 இல் முதலீடு பெயரளவு நியதிகளில் 30.5 சதவீதத்தினால் அதிகரித்தமை 11.7 சதவீத உண்மை வளர்ச்சியினதும் விலைகளில் ஏற்பட்ட 16.8 சதவீத அதிகரிப்பினதும் இணைந்த விளைவாகும். இதன் விளைவாக, 2004 இல் உண்மையான முதலீட்டு வளர்ச்சி முன்னைய ஆண்டினைக் காட்டிலும் குறைவானதாக காணப்பட்டது. 2003 இல் கணிசமாக வீழ்ச்சி யடைந்திருந்த இறக்குமதி செய்யப்படும் முதலீட்டுப் பொருட்களின் விலைகள் 2004 இல் குறிப் பிடத்தக்களவிற்கு அதிகரித்திருந்தன. 2003 இலிருந்து 2004 வரை முதலீட்டு வேகத்தில் காணப்பட்ட வீழ்ச்சி முதலீட்டுச் சபையின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீடுகளில் அவதானிக்கப்பட்டது. இவை ஆண்டின் தொடக்கத்தில் காணப்படட நிச்சயமற்ற அரசியல் நிலைமைகளினால் ஓரளவிற்கு பாதிக்கப்பட்டன. இவ்வாறிருந்துங்கூட, 2004 இல் முதலீட்டு விகிதம் (மொத்த முதலீடு/ மொ.உ.உ) 3 சதவீதப் புள்ளிகளினால் 25 சதவீதத் திற்கு அதிகரித்தது. அதேவேளை முதலீட்டுச் செலவினம், உண்மை நியதிகளில், நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் இருமடங்கிலும் பார்க்கக் கூடுதலான அளவில் வளர்ச்சியடைந்தது.

2004 இல் நுகர்வுச் செலவினம், உண்மை நியதிகளில் 4.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2002 மற்றும் 2003 ஆகிய இரு ஆண்டுகளிலும் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி உண்மை பொருளாதார வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டதுடன் பொருளாதார மீட்சியினையும் தூண்டியது. 2004 இலும் கூட, நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி முன்னைய இரு ஆண்டுகளிலும் காணப்பட்டதனை விடக் குறைவாக இருந்தபோதும் ஆரோக்கியமானதாக இருந்தது. 2004 இல் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி, யுத்த நிறுத்தத்தினை தொடர்ந்து முடக்கி வைக்கப்பட்ட கேள்வி படிப்படியாக பூர்த்தி செய்யப்பட்டமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்தது. அதேவேளை, அண்மையில் இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள், பொருளாதார அபிவிருத்தியுடன் குடியிருப்பாளர்களது நுகர்வுச் செலவினம் தொடர்பான உள்ளமைப்பு கடந்த தசாப்த காலத்தில் முதன்மை நுகர்வு விடயங்கள் அல்லாதனவற்றை நோக்கி மாற்றமடைந்து செல்கின்ற மையினை எடுத்துக்காட்டின. மனிதனின் அடிப்படைத் தேவையான உணவு மற்றும் குடிபானத்தின் முக்கியத்துவம் குடியிருப்பாளர் நுகர்வுக் கூடையில் படிப்படியாக வீழ்ச்சியடைந்து விருப்பத்தெரிவுச் செலவின வகைகளுக்கு குறிப்பாகப் பணிகளுக்கு முக்கியத்துவம் மாறிவருகிறது. கல்வி, களியாட்டம் மற்றும் பொழுதுபோக்கு, சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள், தொடர்பூட்டல் போன்ற பணிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்திருக் கிறது. இவ்வமைப்பு ரீதியான மாற்றம் தேசிய உற்பத்தித் தரவுகளிலும் பிரதிபலிக்கப்பட்டிருப்பதுடன், பணிகள் துறை தற்பொழுது மிக ஆற்றல் வாய்ந்த துறையாக தெளிவாக தோற்றம் பெற்றிருக்கிறது.


வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திற்காகச் சீராக்கம் செய்யப்பட்ட மொ.உ. உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்படும் மொத்தத் தேசிய உற்பத்தி 2003 இன் 6.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், உண்மை நியதிகளில் 5.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் வழமைபோன்று எதிர்க்கணியமாக இருந்தபோதும் கடந்த சில ஆண்டுகளில் காணப்பட்ட முன்னேற்றங்களுடன் ஒப்பிடுகையில், 2004 இல் 19.3 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது. இதற்கு வெளிநாட்டு ஒதுக்குகள் குறைவடைந்து காணப் பட்டபோதும் உயர்ந்த பன்னாட்டு வட்டி வீதங்களினால் 2004 இல் வட்டி வருமானத்தில் அதிகரிப்பொன்று ஏற்பட்டதற்கு மத்தியிலும் படுகடன் பணிக் கொடுப்பனவுகள், மற்றும் இலாபங்களும், பங்கிலாபங்களும் தாய்நாடுகளுக்கு அனுப்பப்படல் என்பன பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் முக்கியமாக அதிகரித்ததனால் ஏற்பட்டதாகும்.

வரைபடம் 2.2
**2004 இல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)**

**பொருட்கள் பணிகளின் நிரம்பல்**
**(ரூ. 2,953 பில்லியன்)**




**பொருட்கள் பணிகளுக்கான கேள்வி**
**(ரூ. 2,953 பில்லியன்)**




2004 இல் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த வழங்கலில் 65 சதவீதம் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைளினால் வழங்கப்பட்ட வேளையில் மீதி இறக்குமதி செய்யப்பட்டது. உள்நாட்டு வழங்கலில் பணிகளின் வழங்கல், பொருட்களின் வழங்கலை விட விஞ்சிச் செயலாற்றியவிடத்து வர்த்தக நடவடிக்கைகள் போக்குவரத்து, தொடர்பூட்டல் மற்றும் நிதியியல் பணிகள் இதற்குப் பெருமளவிற்குப் பங்களித்தன. இறக்குமதிகளின் வழங்கல் இடைநிலைப் பொருட்கள், (53 சதவீதம்), முதலீட்டுப் பொருட்கள் (18 சதவீதம்), நுகர்வுப் பொருட்கள் (16 சதவீதம்) மற்றும் பணிகள் (13 சதவீதம்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. கூட்டுக் கேள்வியில் நுகர்வு 57 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் இதில் ஏறத்தாழ 90 சதவீதம், தனியார் நுகர்வாக இருந்தது. மூலதனமாக்கல் கூட்டுக் கேள்வியில் 18 சதவீதத்திற்கு வகைகூறியதுடன், இதில் தனியார் மூலதனமாக்கல் ஏறத்தாழ 91 சதவீதத்திற்கு பங்களித்தது. ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கேள்வியான வெளிநாட்டுக் கேள்வி எஞ்சிய 25 சதவீதத்திற்குப் பங்களித்தது. ஏறத்தாழ 79 சதவீதமான ஏற்றுமதிகள் பொருட்களாக இருந்தன. வெளிநாட்டு வழங்கலுக்கும் கேள்விக்கு மிடையிலான வேறுபாடானது பயன்பாட்டிற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்கள் உள்நாட்டு உற்பத்திகளை விஞ்சியிருப்பதை அழுத்தியுரைக்கிறது.

இப்பின்னணியில், பொருளாதாரத்திற்கான வளர்ச்சி வாய்ப்புக்களை, 2004 திசெம்பர் 26 ஆம் நாளன்று இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஏறத்தாழ 85 சதவீதத்தினை பாதித்த சுனாமி ஆழிப் பேரலையின் விளைவுகளின் அடிப்படையில் மீளாய்வு செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. மனித அவலம் மிகப்பெரியது. ஏறத்தாழ 30,000-40,000 மனித உயிர்கள் இழக்கப்பட்டிருப்பதுடன் ஏறத்தாழ 100,000 வீடுகள் அழிவுற்று அல்லது சேதமடைந்து ஏறத்தாழ அரை மில்லியன் மக்கள் (குடித்தொகையில் 2-3 சதவீதத்தினர்) இடம்பெயரவும் தமது ஜீவனோபாயங்களை இழப்பதற்கும் காரணமாகி யிருக்கிறது. பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட பொருளாதாரத் துறைகளாக மீன்பிடி, சுற்றுலா, சிறுகைத்தொழில் மற்றும் சிறிய அளவு மொத்த விற்பனை, மற்றும் சில்லறை வர்த்தகம் என்பன காணப்பட்டன. தெற்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளுடன் சேர்ந்த கரையோரங்கள் அழிக்கப் பட்டமையானது சுற்றுலாக் கைத்தொழிலின் கடற்கரைச் சுற்றுலாத் தலங்களை உடனடியாகப் பாதித்த வேளையில், மீன்பிடித் துறையும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், சிறியளவுக் கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் மற்றும் மொத்த சில்லறை வர்த்தக நிறுவனங்கள் அழிக்கப்பட்டு அல்லது சேதமாக்கப்பட்ட வேளையில், அப்பகுதி யிலிருந்த தொலைத்தொடர்பூட்டல்கள், மின்வலு மற்றும் நீர்வழங்கல் பணிகளும் தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டன.

2004 ஆம் ஆண்டில் இப்பாதிப்புக்கள் சிறிதாக இருந்தபோதும், 2005 இல் பொருளாதார நடவடிக்கை மீதான தாக்கம், இத்துறைகள் அவற்றின் பின்னடைவுகளிலிருந்து எவ்வளவு விரைவாக மீண்டும் எழுச்சி பெறுகின்றன என்பதிலும் மீள்கட்டுமானம் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றின் வேகம் மற்றும் வினைத்திறனிலுமே பெருமளவிற்கு தங்கியிருக்கும். உண்மையில், கட்டுமானம், இறக்குமதி வர்த்தகம் மற்றும் துறைமுகப் பணிகள் போன்ற குறிப்பிட்ட சில துறைகள் புத்தாக்க மற்றும் மீள்கட்டுமான செயற் றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலுடன் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், மோசமாகப் பாதிக்கப்பட்ட துறைகள்

அனர்த்தத்திற்கு முன்னர் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி வீதங்களை அடையும் என எதிர்பார்க்கப்படவில்லை. எனினும், வலுவான கடப்பாட்டுடன் நாட்டிற்கான நன்கு திட்டமிடப்பட்ட மீள்கட்டுமான மற்றும் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களை வினைத்திறனுடனும் உரிய நேரத்திலும் நடைமுறைப்படுத்தப்படுமிடத்து பொருளாதாரம் இன்னும் சிறந்த முறையில் செயலாற்ற முடியும்.

## 2.2 துறைவாரியான கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

2004 இல் தனியர் துறை பங்கேற்பினை ஊக்குவித்தல், பொருளாதார வாய்ப்புக்களில் காணப்படும் கடுமையான பிரதேச ஏற்றத்தாழ்வுகளைக் களைவதில் கவனம் செலுத்தல் மற்றும் துறைவாரியான உற்பத்தி யாக்கத்தினை மேம்படுத்துகின்ற வேளையில், குறிப்பாக ஆண்டின் பின்னரைப்பகுதியில், செலவினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தம் விரைவடைந்தமையின் காரணமாக, சந்தைப் பங்கேற்பாளர்களுக்கும் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் இருவருக்கும் வழங்கப்பட்ட பாதுகாப்பில் சமநிலையினைப் பேணுகின்ற கொள்கைகளினூடாக அரசாங்கம் அனைத்து மூன்று துறைகளிலுமுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்கான அதன் ஆதரவினைத் வெளிக்காட்டியிருக்கிறது. அரசாங்கம் அதன் கொள்கை ஆவணங்களில், உணவுப் பாதுகாப்பினை எய்துகின்ற பரந்த குறிக்கோளுடன் வேளாண்மைத் துறையினை புதுப்பிக்கும் அதேவேளையில் நாட்டின் பெரும்பாலான வேளாண்மைத்துறையில் காணப்படுகின்ற சிறுஉடமையாளர் தன்மையில் காணப்படுகின்ற பின்னணியினைக் கருத்திற்கொண்டு வேளாண்மையாளர்களின் வருமான மட்டத்தினை உயர்த்துவதற்கான அதன் கடப்பாடுகளைத் தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் புதிய கைத்தொழில் கொள்கையின் முக்கிய அம்சம் யாதெனில் உலகளாவிய போட்டித்தன்மையினையும், இயக்க ஆற்றலுள்ள கைத்தொழில் துறையினையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் முதலீட்டிற்கான முன்னுரிமை கொண்டதொரு நாடாக இலங்கையினை முன்னிலைப்படுத்துவதேயாகும். இதனை வலுவானதும் சமூகப் பொறுப்பாண்மை கொண்டதுமான தனியார்துறையின் பங்கேற்பினை ஊக்குவிப்பதன் மூலமும் அரச துறையின் வலுவான வசதியளிப்புக்களின் மூலமும் எய்த திட்டமிடப் பட்டுள்ளது. புதிய கைத்தொழில் கொள்கையானது அனைத்து பிராந்தியங்களிலும் பயன்படுத்தப்படாத உள்நாட்டுச் சந்தை வாய்ப்புக்களை பயன்படுத்துவத னூடாகவும், உள்ளூர் மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக் கைத்தொழில்களைத் தொடக்குவதனூடாகவும் வருமான உருவாக்க நடவடிக்கைகளை உள்ளடக்கி தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான தேவைகளை வலியுறுத்துகிறது. பொதுவான கொள்கைகள் கட்டமைப்பானது வலுவான முறையில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சட்ட ரீதியான கட்டமைப்பொன்றின் மூலம் ஆதரவளிக்கப்படும் சந்தைச் சார்ந்த ஏற்றுமதி சார்ந்த உபாயங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். அரசாங்கமானது சந்தைக்குள் நுழைவதனையும் போட்டித் தன்மையினையும் அதிகரிப்பதற்கு வசதிகளை வழங்குவதில் முக்கிய பங்கினை வகிக்கவுள்ள அதேவேளையில் வியாபார சூழலையும் ஆளுகை களையும் மேம்படுத்தும்.

## வேளாண்மைக் கொள்கையும் நிறுவன ரீதியான ஆதரவும்

இப்பரந்த கொள்கைக் கட்டமைப்பின் பின்னணியில், அரசாங்கத்தின் வேளாண்மைக் கொள்கையானது அதன் முதன்மைக் குறிக்கோளுடன் ஒத்துச்செல்லும் குறித்துரைக்கப்பட்ட கொள்கை களினூடாக இத்துறையினை ஊக்குவித்த அதேவேளையில், அரசதுறைக்கும் முக்கிய பங்கு வழங்கப்படுகிறது. இதனை அடையும் விதத்தில், அரசாங்கம் கொள்கைகளை மீளவடிவமைத்தல், உள்ளீடுகளுக்கு உதவு தொகை வழங்கல், குளங்களை புத்தாக்கம் செய்தல், புதிய தொழில் நுட்பங்களை வழங்குதல், வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சியினை நவீனமயப்படுத்தல் மற்றும் வேளாண்மையில் தனியார்த் துறைப் பங்கேற்பினை ஊக்குவித்தல் என்பனவற்றிற்காக நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் தொழில்வாய்ப்பிற்கான உள்ளார்ந்த வளம் என்பன வற்றைக் கருத்திற்கொண்டு வீட்டுப் பயிர்ச்செய்கை மற்றும் மலர் பயிர்ச்செய்கை ஆகிய இரு துறைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை அளிப்பதற்கு வலியுறுத்தப்பட்டது.

2004 இல் பொதுவான வர்த்தக கொள்கை வழிமுறைகள், குறிப்பாக வேளாண்மை மீதான இறக்குமதித் தீர்வைகள் வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல், உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல் ஆகிய இரு குறிக்கோள்களை எய்தவதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டன. சமகாலத்தில் இதனை அடைவது கடினமானதாகும். வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்காக 2004 பெப்புருவரி 1 ஆம் நாள் தொடக்கம் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் மிளகாய் என்பன மீதான இறக்குமதித் தீர்வைகள் கி.கிறாமிற்கு முறையே ரூ.1.50 இனாலும், ரூ.5.00 இனாலும், ரூ.10.00 இனாலும் முறையே கி.கிறாமிற்கு ரூ.18.50 இற்கும், ரூ.3.00 இற்கும் ரூ.20.00 இற்கும்

குறைக்கப்பட்டன. எனினும் வேளாண்மையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அறுவடைக்காலம் தொடங்கியதுடன் 2004 செத்தெம்பர் 16 ஆம் நாள் தொடக்கம் பெரிய வெங்காயத்தின் மீதான குறித்துரைக்கப்பட்ட தீர்வை மீண்டும் கொண்டு வரப்பட்டது. பன்னாட்டுச் சந்தைகளில் அதிகரித்துச்செல்லும் விலைகளின் காரணமாக நுகர்வோருக்கு நிவாரணங்களை வழங்கும் பொருட்டு 2004 மார்ச்சு 19 ஆம் நாள் தொடக்கம் சீனி இறக்குமதியின் மீது கிலோகிறாம் ஒன்றிற்கான ரூ.4.50 கொண்ட சிறப்புத் தீர்வை தளர்த்தப்பட்டது. எனினும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மீதான தாக்கத்தினைக் குறைக்கும்பொருட்டு 2004 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து பழுப்புச் சீனி மீதான தீர்வை மீண்டும் விதிக்கப்பட்டது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக உயர்வடைந்த உள்நாட்டு அரிசி விலைகளை குறைக்கும் பொருட்டு அரிசி இறக்குமதி மீது காணப்பட்ட கி.கிறாமிற்கான ரூ.9 கொண்ட குறித்துரைக்கப்பட்ட தீர்வை 2004 செத்தெம்பர் 22 ஆம் நாளிலிருந்து 2005 சனவரி 15 ஆம் நாள் வரையான காலப்பகுதி வரை தளர்த்தப்பட்டது. நுகர்வோரிடையே உள்ளூர் பழவர்க்கங்களின் நுகர்வினை ஊக்குவிக்கும் பொருட்டு 2004 நவெம்பர் 4 ஆம் நாள் தொடக்கம் இறக்குமதி செய்யப்பட்ட பழவர்க்கங்களின் பெறுமதி மீது 20 சதவீத அல்லது கிலோகிறாமிற்கு ரூ.15 கொண்ட தீர்வையை அரசாங்கம் விதித்தது.

நியாயமான மட்டங்களில் நெல்லின் விலைகளை உறுதிப்படுத்தும் நோக்குடன் நெல்லினைக் கொள்வனவு செய்யும் திட்டத்தினை அரசாங்கம் முதலில் 2004 சிறுபோகத்திற்கும் பின்னர் 2004/05 பெரும்போகத் திற்கும் அறிவித்தது. இதன் கீழ் அரசாங்கம் வேளாண்மையாளர்களிடமிருந்து தரமான நெல்லினை நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொள்வனவு செய்யும். எனினும், வழங்கல் பற்றாக்குறையின் காரணமாக சிறுபோக காலத்தின்போது இத்திட்டம் பயனற்றதாக காணப்பட்டது.

உற்பத்தி விரிவாக்கத்தினை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் பயிர் உதவுதொகைகளையும் பல்வேறு வடிவங்களிலமைந்த மற்றைய உதவிகளையும் நேரடியாகவும் மற்றைய முகவர்களூடாகவும் தொடர்ந்தும் வழங்கியது. தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை தேவையான மதியுரைகள், விரிவாக்கப் பணிகளை வழங்குதல் மற்றும் புதுநடுகை மற்றும் மீள்நடுகை உதவுத்தொகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன மூலமாக சிறுஉடமையாளர்களுக்கு தொடர்ந்தும் உதவி வருகின்றது. உதவுதொகைத் திட்டம் தேயிலை ஏற்றுமதிகளின் மீது விதிக்கப்படும் கி.கிறாமொன்றிற்கான ரூ.2.50 கொண்ட தீர்வை மூலம் நிதியிடப்படுகிறது. ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ ரூ.750 மில்லியன்களைப் பெறும் தீர்வை நிதியம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தேயிலை தொழிற்சாலை அபிவிருத்தி மற்றும் தேயிலை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. அண்மைய ஆண்டுகளில் இயற்கை இறப்பருக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட கவர்ச்சிகரமான விலைகளைக் கருத்திற்கொண்டு இறப்பர் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு முக்கியமாக புதிய பயிரிடல், மீள்பயிரிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான உதவு தொகைகளை வழங்குவதற்குத் தேவையான நிதிகளைத் திரட்டுவதற்காக 2004 ஒத்தோபரில் இறப்பர்த் தீர்வை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இறப்பர் மீள்நடுகைக்கான உதவுதொகை எக்டேயரொன்றிற்கு ரூ.49,000 இலிருந்து ரூ.100,000 இற்கு மேல்நோக்கி திருத்தப்பட்டமையும் உதவுதொகைத் திட்டங்கள் பெருந்தோட்டக் கம்பனிகளையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டமையும் இறப்பர் பயிர்ச்செய்கையினை விரிவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தெங்கு தீர்வை நிதியத்தினை வலுப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய் மீது தீர்வையொன்றினை அறிமுகப்படுத்த அரசாங்கம் எண்ணுகிறது. தெங்கு நிலம் துண்டாடப்படுவதனை தடுப்பதற்காக, தெங்கினையும் உள்ளடக்கும் விதத்தில் தேயிலை, இறப்பர் துண்டாடல் மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம், வாசனைத் திரவியங்களை பயிர் செய்வதற்கும், பதனிடுவதற்குமாக உதவுதொகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் தேவையான உள்ளீடுகள், தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் விரிவாக்கல் பணிகளை வழங்குவதன் மூலம் ஏற்றுமதி வேளாண்மைத் துறையின் அபிவிருத்தியில் மிக முக்கியமான பங்கினை தொடர்ந்தும் வகித்தது.

சிறிய அளவில் தொழில்படும் கடற்றொழிலாளர்களின் அபிவிருத்தியினை முக்கிய நோக்கமாகக் கொண்டு உள்ளூர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்துகின்ற நோக்குடன் தேசிய கடற்றொழில் கொள்கைச் சபையினால் புதிய தேசிய கடற்றொழில் கொள்கையானது வரையப்பட்டது. இவ்வபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் கரையோர மீன் வளங்களை அபிவிருத்தி செய்தல், புதிய மீன்பிடி தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் வசதிகளை மேம்படுத்தல் மற்றும் ஏற்கனவேயுள்ள துறைமுக வசதிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் பல நாள் படகுகளை மேம்படுத்தல் என்பனவற்றின் மூலம் கடல்

மீன்பிடி உற்பத்தியினை அதிகரிப்பதற்கான வசதிகளை உள்ளடக்கியிருந்தன. நன்னீர் மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்பு அபிவிருத்தியினை தரமுயர்த்துவதற்கான செயற்றிட்டமொன்று கொடையாளர்களின் உதவியுடன் தேசிய நீரியில் அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டது. இறால் வளர்ப்பில் உறுதியான அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக, உடனடியான உட்கட்டமைப்பு புத்தாக்கம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்காக 2005 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் நிதிகளை ஒதுக்கியுள்ளது.

தற்பொழுது, உள்ளூர் பால் நிரம்பலானது கேள்வியில் ஏறத்தாழ 20 சதவீதமாக மாத்திரமேயுள்ளது. எனவே, நாட்டில் பால் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் சிறப்பான முறையில் கவனம் செலுத்தியது. அரசாங்கம் பயிற்சி வழங்கல், சந்தைப்படுத்தலில் உதவுதல், விலங்குகளுக்கான விலங்கியல் மருந்தகங்களை நடத்துதல் என்பனவற்றிற்காக பாற்பண்ணை வேளாண்மையாளர் அதிகார அளிப்பு செயற்றிட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. மேலும், ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது 20 பாற்பண்ணையாளர்களைக் கொண்ட 50 பாற்பண்ணைக் கிராமங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விலங்கு வளர்ப்பு கைத்தொழிலான உற்பத்திச் செலவினைக் குறைக்கும் பொருட்டு விலங்குத்தீன் மீதான பெறுமதிசேர் வரி அகற்றப்பட்டது. பாற்பண்ணைத் துறையினை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு வளர்ப்பு விலங்குகளின் வழங்கலை விரிவாக்குவதற்கும், விலங்கு மருத்துவ பணிகளை மேம்படுத்தவும், விலங்கு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உதவி வழங்குவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேளாண்மையில் தனியார் துறையின் பங்கேற்பினை ஊக்குவிக்கும் நோக்குடன், 2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கியது. இவை வேளாண்மையிலிருந்தான வருமானங்களுக்கும், இலாபங்களுக்கும் 5 ஆண்டுகளுக்கு வரிகளிலிருந்து விலக்களித்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவில் மலர்ச்செடிகளை வளர்ப்போருக்கு தொழில்நுட்ப அறிவினையும் விரிவாக்கப் பணிகளையும் வழங்குதல் மற்றும் தனியார் துறையினால் மாதிரிப் பண்ணைகளாக பயன்படுத்துவதற்கேற்ற நிலங்களை அடையாளம் காணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. விதைகள் மற்றும் மரக்கன்றுகளின் இறக்குமதிகள் பெறுமதிசேர் வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டன. சிறப்பான தனி ஏற்றுமதிச் சந்தைகளைக் கொண்டுள்ள சேதன வேளாண்மையினை மேம்படுத்தும் நோக்குடன் சான்றுப்படுத்தும் முறையொன்றினை ஏற்படுத்துவதற்கும் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளைப் பாதுகாக்கப்பட்ட சேதன உற்பத்திகள் வலயங்களாக பிரகடனப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கறுவாக் கைத்தொழிலில் ஆராய்ச்சியையும் உற்பத்தி அபிவிருத்தியையும் மேம்படுத்துவதற்காக கறுவா ஏற்றுமதிகள் மீதான தீர்வையின் மூலம் நிதியிடப்படக்கூடிய கறுவா அபிவிருத்தி நிதியத்தினை ஏற்படுத்தவும் நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவு நெல்குற்றும் ஆலையாளர்கள் தமது ஆலைகளை நவீனப்படுத்திக் கொள்வதற்காக அரசாங்கம் சிறப்புக் கொடுகடன் திட்டத்தினை முன்மொழிந்திருக்கிறது.

## கைத்தொழில் கொள்கையும் நிறுவன ரீதியான ஆதரவும்

தற்போதைய கைத்தொழில் கொள்கை, தீர்வைப் பிரிவுகளின் எண்ணிக்கையினைக் குறைக்கும் நோக்குடன் தற்போதுள்ள தீர்வை அமைப்பினை ஒழுங்கு முறைப்படுத்தி இலகுபடுத்துவதனை முக்கியமாக வலியுறுத்துகின்றது. இம்முயற்சிகளின் நீண்டகால குறிக்கோள் யாதெனில், ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் நோக்குடன் மூலப்பொருட்கள் மற்றும் பொறிகளின் தீர்வை வீதங்களை பூஜ்ய மட்டத்திற்கு கொண்டுவருவதேயாகும். 2003 இல் முன்னைய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட தீர்வைக் குழுவானது 2004 இல் புதிய அரசாங்கத்தின் கீழ், பொருளாதார அபிவிருத்தி மீதான தேசிய குழுவின் வர்த்தக மற்றும் தீர்வைக் கொத்தணியாக மாற்றம் பெற்றிருக்கிறது. இக்கொத்தணியிடம் தற்போது தீர்வையிலுள்ள முரண்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட வர்த்தக சம்மேளனங்களினாலும், வர்த்தக சங்கங்களினாலும் எழுப்பப்பட்ட மற்றைய கரிசனைகள் பற்றி ஆய்வு செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவ்வாண்டில் கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் தீர்வை முரண்பாடுகள் பற்றி புலனாய்வுகளை நடத்தியதுடன் அத்தகைய திரிபுகளின் எதிர்க்கணிய தாக்கத்தினைக் குறைப்பதற்கான விதந்துரைப்புக்களையும் செய்தது.

2004 இல் அரசாங்கம் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கியமான கைத்தொழில்களின் போட்டித் தன்மையினை அதிகரிப்பதற்கு சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டது. இலக்கிடப்பட்ட முக்கிய கைத்தொழில்களாக புடவை, அணியும் ஆடைகள், காலணி, தோல் உற்பத்திகள், மட்பாண்டம், இறப்பர் மற்றும் மரம் மற்றும் மரத்தினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் காணப்பட்டன. 2004 இல் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட

முக்கியமான நிகழ்ச்சித் திட்டங்கள், உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், தொழிற்சாலை விரிவாக்கம், மற்றும் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வியாபார அபிவிருத்திப் பணிகளை வழங்குபவர்களது இயலளவினைக் கட்டியெழுப்புகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. ஆடைகள் சங்கங்களின் இணை மன்றத்தின் ஒத்துழைப்புடன் கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு இத்துறைக்காக பல உற்பத்தியாக்க மேம்பாடுகள், தேர்ச்சி அபிவிருத்திகள் மற்றும் நற்பெயரை கட்டியெழுப்புகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றை நடைமுறைப்படுத்தியது.

தொழில் வாய்ப்பினையும், வருமான உருவாக்க நடவடிக்கைகளையும் அளிக்கக்கூடிய உள்ளார்ந்த வளத்தினை சிறிய மற்றும் நடுத்தர அளவுத் தொழில்முயற்சிகள் கொண்டுள்ளமையினை அங்கீகரிக்கின்ற விதத்தில், பல்முனை ஆதரவுப் பொறி முறையினை உருவாக்குவதனூடாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளது. நிருவாக நடைமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், பெறுமதிசேர் வரி நிருவாகம், சுங்க ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள் என்பனவற்றை ஒழுங்குமுறைப்படுத்தவும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களூடாக பயிற்சிகளை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. தொழில்நுட்ப இயலாற்றல்களை மேம்படுத்தல், தரமுகாமைத்துவம், உற்பத்தியாக்க மேம்பாடு, இணையத்தள வசதிகள் மற்றும் பன்னாட்டு நியம அமைப்பின் 9000/14000 சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் என்பனவற்றிற்கு நிறுவன ரீதியான ஆதரவு வழங்கப்படும் துணிகர மூலதன நிதியங்களையும், கடன்களையும் போட்டித்தன்மை மிக்க வட்டி வீதங்களில் அவர்கள் பெற்றுக்கொள்வதனை அதிகரிப்பதற்கான வழி முறைகளை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. இது சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கென புதிய வங்கியொன்றினை நிறுவுவதன் மூலம் அடையப்படும். இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர ஆடைக் கைத்தொழில்களின் உற்பத்தியாக்கத்தினையும் போட்டித் தன்மையினையும் மேம்படுத்துவதற்காக 2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொழில்நுட்ப ரீதியான மேம்பாடுகளுக்கு நிதியிடல்களை வழங்குதல், இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி பிரயோகங்கள், உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான உள்ளீடுகளையும் மூலப்பொருட்களையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் வகையில் பின்னணி கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்குமான ஊக்குவிப்புக்கள் என்பன வற்றை உள்ளடக்கிய பல ஊக்குவிப்புக்களை வழங்கியது. 2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டமானது, தொழில்பயிற்சி நிறுவனங்களுக்கான அனுமதியினை 50,000 இற்கு அதிகரித்தல், புதியதொரு தொழில் சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினை நிறுவுதல், "தருண அருண" நிகழ்ச்சித் திட்டத்தினை தேர்ச்சி அபிவிருத்தி நிதியமாக மீளமைத்தல் மற்றும் உற்பத்தி யாக்கத்தினை உயர்த்துவதனையும் போட்டித் தன்மையினை மேம்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டு சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதனை ஊக்குவிப்பதற்கான புதிய ஊக்குவிப்புத் திட்டத்தினை நிறுவுதல் என்பனவற்றினூடான மனித மூலவள அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி அபிவிருத்திக்காக ஏனைய பல ஊக்குவிப்புக்களையும் முன்மொழிந்துள்ளது.

## 2.3 வெளியீடு

### வேளாண்மை

கூட்டப்பட்ட பெறுமதி நியதிகளில் முன்னைய, ஆண்டில் 1.6 சதவீதத்தினால் விரிவடைந்த வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்துறை முக்கிய சில பயிர்கள் மழைவீழ்ச்சி மீதான போதுமானதற்ற தாக்கம் காரணமாக 0.7 சதவீதத்தால் குறைவடைந்தன. நெல் உற்பத்தியில் இருந்து கிடைத்த குறைவான பங்களிப்பின் விளைவாக வேளாண்மைத் துறையின் சார்பளவு முக்கியத்துவம் 2003 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19 சதவீதத்திலிருந்து 2004 இல் 18 சதவீதத்திற்கு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. பெரும்போக காலத்தில் வடகீழ் பருவமழை பெய்யத்தவறிய காரணத்தினால் அநுராதபுரம், குருநாகல் மாவட்டங்களில் ஏற்பட்ட வரட்சியும், சிறுபோக காலத்தில் தென்மேற்கு பருவமழை பெய்வதில் ஏற்பட்ட தாமதமும் இந்த வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. எனினும் ஏனைய உபஉணவுப் பயிர்களினதும், காய்கறிகளினதும் உற்பத்திகள் மேம்பாடடைந்தமைக்கு கிடைக்கத்தக்க நீரின் ஆகக்கூடிய பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் வகையில் வேளாண்மையாளர்கள் நெல்லிலிருந்து இத்தகைய பயிர் வகைகளுக்கு மாறிச் சென்றமையே காரணமாகும். காய்கறிகள், உப உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், விலங்கு வளர்ப்பு, கரும்புச் செய்கை, புகையிலை மற்றும் பழங்கள் என்பவற்றினை உள்ளடக்கிய ஏனைய வேளாண்மைப் பயிர் வகைகள் கூட்டப்பட்ட பெறுமதி நியதிகளில் 2003 இல் பதிவு செய்யப்பட்ட 1.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீதத்தினால் விரிவடைந்து வேளையில், மீன்பிடித் துறையில் கூட்டப்பட்ட

அட்டவணை 2.2

**வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (1997-2000=100)**

| விடயம் | 2003 (அ) | 2004 (ஆ) | சதவீத மாற்றம் % 2004/03 |
|---|---|---|---|
| **வேளாண்மையும் மீன்பிடித் தொழிலும்** | 104.6 | 104.1 | -0.4 |
| 1. வேளாண்மை | 104.7 | 104.0 | -0.6 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 103.2 | 101.8 | -1.4 |
| தேயிலை | 105.8 | 107.5 | 1.6 |
| இறப்பர் | 95.4 | 98.3 | 3.0 |
| தெங்கு | 92.3 | 92.1 | -0.2 |
| நெல் | 115.2 | 98.6 | -14.4 |
| ஏனைய பயிர்கள் | 98.5 | 106.3 | 7.9 |
| 1.2 கால்நடை | 117.7 | 123.6 | 5.0 |
| 2. மீன்பிடித்தொழில் | 104.3 | 104.8 | 0.5 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பெறுமதியானது 1.6 சதவீதமான அதிகரிப்பினைக் காட்டியது. பெருந்தோட்ட வேளாண்மையில், தேயிலை உற்பத்தியானது 2003 இன் நடுப்பகுதியில் வெள்ளப்பெருக்குகளினால் விளைவிக்கப்பட்ட சேதங்களிலிருந்து ஓரளவுக்கு மீட்சியடைந்ததுடன் கவர்ச்சிகரமான விலைகளிலிருந்து பயனடைந்து இறப்பர் உற்பத்தி மேலும் அதிகரித்தவேளையில் தெங்கு உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

**ஏற்றுமதி வேளாண்மை:** 2004 இல் பெரும்பாலான ஏற்றுமதிப் பயிர்கள் தேயிலை, இறப்பர் மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்களும் கவர்ச்சிகரமான விலைகளினால் பெருமளவு நன்மையடைந்து திருப்திகரமான முறையில் செயலாற்றின.

தேயிலை உற்பத்தி, 2003 இன் நடுப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகளினால் ஏற்பட்ட பின்னடைவுகளிலிருந்து ஓரளவு மீட்சிபெற்று 1.6 சதவீதத்தினால் 308 மில்லியன் கிலோகிராம்களுக்கு அதிகரித்தது. தாழ்நிலப் பகுதிகளில் வியாபித்திருந்த சாதகமான வானிலை நிலைமைகளை பிரதிபலிக்கும் வகையில் தாழ்நிலத் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மேம்பாடே இந்த மீட்சிக்கான முழுமையான காரணமாக அமைந்தது. இதற்கு மாறாக உயர் மற்றும் மத்திய நில வகைத் தேயிலை உற்பத்தியானது அப்பகுதிகளில் நிலவிய வரண்ட வானிலையின் விளைவாக முறையே 9 சதவீதத்தினாலும், 8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. வெட்டி கிழித்து, சுருட்டப்பட்ட தேயிலை உற்பத்தியானது சார்பளவு விலைகளிலேற்படுகின்ற மாற்றங்கள் மரபுரீதியான தேயிலை உற்பத்திக்கு சாதகமானதாக அமைவதன் விளைவாக தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் 16 மில்லியன் கிலோகிராம்களுக்கு 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

2004 இன் மொத்த தேயிலை உற்பத்தியில் 66 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்ததன் மூலம் தேயிலை சிறு உடமையாளர் துறை தொடர்ந்தும் முன்னிலை

அட்டவணை 2.3

**முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்**

| வகை | அலகு | 2003 (அ) | 2004 (ஆ) |
|---|---|---|---|
| **1. தேயிலை** | | | |
| 1.1 உற்பத்தி | மில்.கி.கி. | 303.2 | 308.1 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000எக்டேயர்கள் | 180 | 180 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000எக்டேயர்கள் | 165 | 165 |
| 1.4 உற்பத்திச் செலவு(இ) | ரூபா/கி.கி. | 135.58 | 158.25 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி. | 149.05 | 180.74 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 221.01 | 249.38 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 935 | 1,137 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 642 | 22 |
| 1.8 மொ.உ.உ.யின் வீதமாக கூட்டப்பட்ட பெறுமதி(ஈ) | | 2.0 | 2.2 |
| **2. இறப்பர்** | | | |
| 2.1 உற்பத்தி | மில்.கி.கி. | 92.0 | 94.8 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு(உ) | எக்டேயர்கள் 000' | 115 | 114 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு(உ) | எக்டேயர்கள் 000' | 86 | 89 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூ / கி.கிராம் | 63.30 | 73.39 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம்(ஆர்.எஸ்.எஸ்.1) | கி.கி.க்கு ரூபா | 102.50 | 110.75 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ.) | கி.கி.க்கு ரூபா | 105.25 | 127.20 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர் | 564 | 820 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர் | 450 | 519 |
| 2.8 மொ.உ.உ வின் % மாக கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) | | 0.6 | 0.7 |
| **3. தெங்கு** | | | |
| 3.1 உற்பத்தி | மில்.காய்கள் | 2,562 | 2,557 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர் | 439 | 439 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 4.90 | 7.50 |
| 3.4 சராசரி விலை | | | |
| உற்பத்தியாளர்விலை | காய்க்கு ரூபா | 9.77 | 9.83 |
| ஏற்றுமதி (க.ஏ.பெ.) (எ) | காய்க்கு ரூபா | 9.98 | 11.03 |
| 3.5 மீள்நடுகை/ கீழ் பயிரிடுகை(ஏ) | எக்டேயர் | 1,226 | 681 |
| 3.6 புதிய பயிரிடுகை(ஏ) | எக்டேயர் | 1,098 | 483 |
| 3.7 மொ.உ.உ வின் % மாக கூட்டப்பட்ட பெறுமதி(ஈ) | | 2.3 | 2.0 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை.
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்.
தெங்கு பயிர்ச்செய்கை சபை.
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
பெருந்தோட்டக் கம்பனிகள்.
இலங்கை மத்திய வங்கி.
இலங்கைச் சுங்கம்

(அ) திருத்தியமைக்கப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பச்சைத்தேயிலை வழங்குபவர்களின் இலாபம் உட்பட.
(ஈ) வளாத்தலையும் பதப்படுத்தலையும் உள்ளடக்கும் ஆனால் வியாபாரத்தை உள்ளடக்காது.
(உ) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினதும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினதும் 2003 இல் செய்யப்பட்ட இறப்பர் நில அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது.
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட பரப்பளவு.
(எ) மூன்று பிரதான தெங்கு உள்ளீடுகள் உற்பத்திகள் மட்டும்.
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டது.

வகிக்கின்றது. சிறு உடமையாளர் துறையின் சராசரி விளைச்சல் பெருந்தோட்டத் துறையின் எக்டேயருக்கான 1,275 கிலோகிறாம்களுடன் ஒப்பிடுகையில் எக்டேயருக்கு 2,448 கிலோகிறாம்களாக விளங்கியது. 2004[1] இன் மதிப்பிடப்பட்ட 'சராசரி தேசிய விளைச்சல் எக்டேயர் ஒன்றுக்கு 1,863 கிலோகிறாம்களாக விளங்கியது. 2004 இல் சராசரி தேயிலை உற்பத்தி செலவு, வளமாக்கி வேளாண்மை இரசாயனப் பொருட்கள் மற்றும் எரிபொருள் போன்ற உள்ளீட்டுப் பொருட்களின் அதிகரித்த விலைகள் மற்றும் 2004 நவெம்பரிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் கீழான பெருந்தோட்டத்துறை கூலி அதிகரிப்புக்கள் என்பன காரணமாக கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.158.25 இற்கு 16 சதவீதத்தால் அதிகரித்தது

இறப்பர் உற்பத்தியானது 2004 இல் உயர்ந்த விலைகளை பிரதிபலிக்கும் வகையில் 95 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 3 சதவீதத்தினால் வளர்ச்சி யடைந்தது. மசகெண்ணெய்யின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பானது பன்னாட்டுச் சந்தையில் செயற்கை இறப்பரின் விலைகளில் அதிகரிப்பினை விளைவித்து அதற்கிணையான அதிகரிப்பினை இயற்கை இறப்பரின் விலைகளிலும் விளைவித்தது. எனினும், குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் இறப்பர் உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் காணப்பட்ட மழை வானிலைமைகளினால் பால்லெடுக்கும் நாட்களில் இழப்பின் காரணமாக 2004 இன் உள்ளார்ந்த உற்பத்தி குறைவடைந்தது. 2004 இல் தட்டை இறப்பர், மற்றும் கிறேப் இறப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைந்த வேளையில் ஒப்பீட்டு ரீதியில் உயர்வான கேள்வியின் காரணமாக லேட்டெக்ஸ் இறப்பரின் உற்பத்தி அதிகரித்தது. தேயிலையைப் போன்றே உற்பத்திச் செலவு 16 சதவீதத்தால் உயர்வடைந்தது. மொத்த உற்பத்தியில் 43 சதவீதமானவை பதனிடப்படாது ஆரம்ப நிலையிலேயே ஏற்றுமதி செய்யப்பட்டன. கைத்தொழிலான இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 68 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 5 சதவீதத்தால் அதிகரித்தது. இவற்றில் 16 சதவீதமானவை இறக்குமதி செய்ய வேண்டியிருந்ததுடன் இது அதிகரித்துவரும் உள்ளூர் கேள்வியினை ஈடுசெய்வதற்காக உற்பத்தியை விரிவாக்குவதற்கான தேவையைச் சுட்டிக்காட்டுகின்றது. இறப்பரின் சராசரி தேசிய விளைச்சல் எக்டேயருக்கு 1,064 கிலோ கிறாம்களாக இன்னமும் உள்ளார்ந்த உற்பத்தி மட்டத்தினைவிட குறிப்பிடத்தக்களவு குறைவானதாக விருந்தது. பரிந்துரைக்கப்பட்ட வளமாக்கி பிரயோகம், மழைக்காப்புக்களை பயன்படுத்துதல் மற்றும் பயிர்களிடையேயான முறையான நடுகை நடைமுறைகளை பின்பற்றுதல் என்பன உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குத் தேவைப்படுகின்றன. கவர்ச்சிகரமான விலைகள் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் என்பனவற்றால் தூண்டப்படும். 2004 இல் இறப்பரின் புதிய நடுகைகளும், மீள்நடுகையும் அதிகரித்தன. 2004 இல் அரசாங்கம் மொனராகலை போன்ற மரபு ரீதியற்ற பகுதிகளிலும் இறப்பர் பயிர்ச்செய்கையினைத் ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையை எடுத்தது.

தெங்கு உற்பத்தி, 2003 இன் 7 சதவீதமான அதிகரிப்பினை தொடர்ந்து 2004 இல் 2,557 மில்லியன் காய்களுக்கு 0.2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது 2003 இன் பிற்பகுதியில் நிலவிய வரட்சியின் காலங்கடந்த தாக்கம் மற்றும் 2004 நடுப்பகுதியிலிருந்து பரவிய வண்டுகளின் தாக்கம் என்பன காரணமாக ஆண்டின் பிற்பகுதியில் முழுமையாக ஏற்பட்டது. இதன் விளைவாக, முதலரையாண்டு காலத்தில் வீழ்ச்சியடைந்திருந்த உடன் காய்களின் உற்பத்தியாளர் விலை 2004 இன் இறுதியில் கணிசமாக உயர்வடைந்தது. தேங்காய்த்துருவல், தேங்காய் எண்ணெய் ஆகிய இரண்டினதும் உற்பத்தி, ஆண்டு முழுவதும் நிலவிய கவர்ச்சிகரமான விலைகளின் காரணமாக ஒவ்வொன்றும் முறையே 19 சதவீதத்தினால் அதிகரித்தன. 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேச ரீதியான உடன் காய் ஏலங்களும், தெங்கு உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளுக்கு இலாபம் தரக்கூடிய விலைகளைப் பெறுவதற்கு உதவிபுரிந்தன. இதேவேளை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் ஏனைய உள்ளீட்டுச் செலவுகளிலேற்பட்ட அதிகரிப்பு என்பவற்றுடன் சார்பளவில் உயர்வடைந்த கூலிச்செலவுகளின் காரணமாக தெங்கின் உற்பத்திச் செலவு 53 சதவீதத்தினால் அதிகரித்தது.

ஏனைய ஏற்றுமதிப் பயிர்களில், கறுவா, கராம்பு, கொக்கோ, கோப்பி, மர முந்திரிகை மற்றும் ஏலக்காய் என்பவற்றின் உற்பத்தி இவ்வாண்டில் அதிகரித்தவேளையில், மிளகு, சாதிக்காய் என்பவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. உலகச்சந்தையில் இலங்கை மிகப்பெரிய கறுவா உற்பத்தியாளராகவும், ஏற்றுமதியாளராகவும் இருந்தபோதிலும் கறுவாவின் கூட்டப்பட்ட பெறுமதி இன்னும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. உத்தேச கறுவா அபிவிருத்தி நிதியம், கறுவா கைத்தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு சிறப்பாக பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களின் விரிவாக்கத்திற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மலர்ச்செடிகள் மற்றும் அலங்கார மலர்கள் துறையானது வேளாண்மைத் திணைக்களம் மற்றும்

1. பெருந்தோட்டத்துறையின் சராசரி விளைவானது பெருந்தோட்டக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட பரப்பளவுகளை அடிப்படையாகக் கொண்டும் சிறு உடமையாளர் விளைவானது தேயிலை சிறு உடமையாளர் நிறுவனத்திடமிருந்தும் பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

ஏற்றுமதி அபிவிருத்திச்சபை என்பவற்றினால் வழங்கப்பட்ட உதவியுடனும் தனியார் தொழில் முயற்சியாளர்களின் தீவிர பங்குபற்றுதலுடனும் கணிசமானளவு விரிவடைந்துள்ளது. மலர்ச்செடிகள் மற்றும் அலங்கார மலர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான உள்நாட்டுச் சந்தையும் வெளிநாட்டுச் சந்தையும் காணப்படுகின்றன. வர்த்தகக் கட்டடங்கள், விடுதிகள் மற்றும் வசிப்பிடங்கள் என்பவற்றுக்கான இயற்கை வனப்பு காட்சிகளை ஏற்படுத்தல் சமூக கொண்டாட்டங்களுக்கான மலர் அலங்காரங்கள் என்பவற்றுக்கான உயர்ந்துவரும் கேள்வி மற்றும் செடிகள் விற்பனை, கண்காட்சிகள் ஊடான சிறு அளவிலான தொழில் முயற்சியாளர்களின் இக்கைத்தொழிலிலான அதிகரித்த பங்குபற்றுதல்கள் என்பன உள்ளூர்ச் சந்தையில் இத்துறை துரிதமாக விரிவடைவதனைக் காட்டுகின்றன. மேலும், இத்துறையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2002 இன் ரூ.776 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2004 இல் ரூ.915 மில்லியனாக விளங்கி கிட்டத்தட்ட 2003 இல் காணப்பட்ட அதே இதே மட்டத்திலேயே காணப்பட்டன. மலர்ச்செய்கைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக 2005 வரவு செலவுத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட உதவிகள் இத்துறையினை மேலும் விரிவுபடுத்துவதற்கு உதவும்.

## உள்நாட்டு வேளாண்மை

முக்கியமாக இலங்கையில் மிகப்பெரிய தனிப் பயிராக பயிர்ச்செய்கை பண்ணப்படும் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2004 இல் உள்நாட்டு வேளாண்மையில் ஒரு பின்னடைவு ஏற்பட்டது. எனினும், பெரிய வெங்காயம், சின்னவெங்காயம் மற்றும் காய்கறிகள் போன்ற ஏனைய களப்பயிர்களின் உற்பத்தியானது வேளாண்மையாளர்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ள நீரிலிருந்து ஆகக்கூடிய நன்மையைப் பெறுவதற்காக நெல்லிலிருந்து இந்தப் பயிர் வகைக்கு மாறியமையினால் அதிகரித்துக் காணப்பட்டது.

நெல் உற்பத்தி முன்னைய ஆண்டின் உச்ச உற்பத்தியான 3,071,000 147 மில்லியன் புசல்கள் மெற்றிக் தொன் களிலிருந்து 2004 இல் விதைக்கப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட 21 சதவீத வீழ்ச்சியைத் தொடர்ந்து 2,628,000 மெற்றிக் தொன்களுக்கு (126 மில்லியன் புசல்கள்) 14.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது எனினும், ஆண்டுக்குரிய சராசரி விளைச்சல் 2001 இல் அடையப்பட்ட எக்டேயருக்கான 3.95 மெற்றிக் தொன் என்ற முன்னைய உச்ச மட்ட வெளியீட்டினைக் கடந்து 9 சதவீதத்தால் ஒரு சாதனை மட்டமான எக்டேயருக்கு 4.09 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து நீர்ப்பாசன நிலைமைகளின் கீழான பயிர்ச்செய்கையின் செறிவினைப் பிரதிபலித்தது. வரட்சி நிலைமைகளின் கீழ் இரு போகங்களிலும் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்புக்களில் ஏற்பட்ட குறைப்பின் காரணத்தினால் 2003/04 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 11.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் சிறுபோகத்தில் உற்பத்தி 18.6 சதவீதத்தினால் முனைப்பாக வீழ்ச்சியடைந்தது.

குறைந்த உற்பத்தி மற்றும் 2004 இல் முதல் மூன்று காலாண்டுகளிலும் குறைவடைந்த அரிசி இறக்குமதி என்பனவற்றின் விளைவாக நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஆண்டு முழுவதும் நெல்லின் பண்ணை அடிமட்ட விலை கவர்ச்சிகரமானதாக இருந்தது. கைவிடப்பட்ட அரிசி மீதான ஒப்பீட்டு ரீதியில் உயர்வான குறித்துரைக்கப்பட்ட

அட்டவணை 2.4

**நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்**


| விடயம் | அலகு | 2003 (அ) | | | 2004 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 602 | 381 | 983 | 521 | 258 | 779 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 560 | 352 | 911 | 469 | 251 | 720 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு | '000 எக்டேயர்கள் | 499 | 317 | 817 | 417 | 226 | 643 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 1,895 | 1,177 | 3,071 | 1,670 | 958 | 2,628 |
| | '000 புசல்கள் | 90,785 | 56,372 | 147,157 | 80,022 | 45,920 | 125,942 |
| விளைச்சல் (இ) | கி.கி./ எக்டேயர்கள் | 3,794 | 3,709 | 3,761 | 4,004 | 4,244 | 4,087 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 301 | 263 | 564 | 527 | 285 | 812 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொன்கள் | - | - | 35 | - | - | 222 |
| (நெல்லிற்குச் சமன்) | '000 மெ.தொன்கள் | - | - | 51 | - | - | 326 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதேவேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகை குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம் இலங்கைச் சுங்கம். இலங்கை மத்திய வங்கி.

இறக்குமதித் தீர்வையிலிருந்து தளர்த்தல் மேற் கொள்ளப்படலாம் என்ற சந்தை எதிர்பார்ப்புக்களின் கீழ் இறக்குமதிகள் தாமதிக்கப்பட்டன. இறுதியில், செத்தெம்பர் நடுப்பகுதியில் தீர்வை தளர்த்தப்பட்டது. இதன் விளைவாக, 2003 உடன் ஒப்பிடுகையில் 2004 இல் சராசரி பண்ணை அடிமட்ட விலை 36 சதவீதத்தினால் கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.16.17 இற்கு

வரைபடம் 2.3
**அரிசி நிரம்பலும் கேள்வியும்**




அதிகரித்தது. நெல்லின் விலைகள் மிக உயர்வாகவிருந்ததால் பெரும்பாலான வேளாண்மை யாளர்கள் போதுமானளவு விதை நெல்லினை வைத்திருக்காமல் அறுடை செய்யப்பட்ட தமது நெல் முழுவதையும் விற்றனர். இது ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் சிறந்த நெல் விலைகள் என்பன 2004/05 பெரும்போகத்தில் பயிர்செய்கைப் பரப்பினை அதிகரிப்பதற்கு வேளாண்மையாளர்களை ஊக்குவித்தமையால் 2004/05 பெரும்போக தரமான விதை நெல்லுக்கான தட்டுப்பாட்டிற்கு வழிவகுத்தது.

வரட்சியின் காரணமாக பயிரிடப்பட்ட பரப்பளவில் வீழ்ச்சி ஏற்பட்டதற்கு மத்தியிலும் முக்கிய களப்பயிர்களின் குறிப்பாக உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சின்னவெங்காயம், குரக்கன், பச்சைப்பயறு, நிலக்கடலை, சோயம் போன்றன வற்றின் உற்பத்தி 2004 இல் அதிகரித்தது. எனினும் வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற முக்கிய விடயங்கள் உள்நாட்டுத் தேவைப்பாட்டில் கணிசமான பங்கினைக் கொண்டிருந்ததுடன் தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்டன. 2004 இல் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் மொத்த நிரம்பலானது 2004 இல் இறக்குமதித் தீர்வைகள் அதிகரிப்பட்டதனைத் தொடர்ந்து இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமையினால் 2003 இனை விடக்குறைவானதாக விளங்கியது. இதேவேளை உள்நாட்டு நுகர்வோர் மற்றும் சுற்றுலாத் துறை இரண்டிலு மிருந்தான கேள்வி உயர்வடைந்தது. ஆகையால் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டதற்கு விலைகளில் வீழ்ச்சி ஏற்படவில்லை.

பெரும்போகம், சிறுபோகம் ஆகிய இரு காலங்களிலும் காய்கறி உற்பத்தி அதிகரித்தது. உயர்நில, தாழ்நில காய்கறிகளின் உற்பத்திகளும் உயர்வடைந்தன. பெரும்போக காலத்தினைத் தொடர்ந்து சந்தை விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், உள்ளீட்டு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்ததன் காரணமாக 2004 இல் உற்பத்தி அதிகரித்த போதிலும் அதற்கிணையாக விலைகள் வீழ்ச்சியடையவில்லை. வாழைப்பழம் (22 சதவீதம்), பாஷன்பழம் (18 சதவீதம்), அன்னாசி (4 சதவீதம்), பப்பாப்பழம் (27 சதவீதம்) என்பனவற்றின் உற்பத்தியை தொடர்ந்து 2004 இல் பழ உற்பத்தி உயர்வடைந்த வேளையில் விலைகள் முன்னைய ஆண்டின் அதே மட்டங்களிலேயே காணப்பட்டன. 2004 இல் உடன் மற்றும் உலர் பழங்களின் இறக்குமதிகள் 24,000 மெற்றிக் தொன்களாக விளங்கி 2003 இனை விட 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. உள்ளூர் பழச்செய்கைக் கைத்தொழிலுக்கு தூண்டுதல் அளிக்கும் வகையில் 2004 நவெம்பரில் இறக்குமதி செய்யப்படும் பழங்கள் மீது மேலதிக தீர்வையொன்று விதிக்கப்பட்டது.

கரும்பு உற்பத்தி, முன்னைய ஆண்டின் 42 சதவீதமான அதிகரிப்பினைத் தொடர்ந்து 2004 இல் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், இவ்வாண்டில் செவனகல மற்றும் பெலவத்தை தொழிற்சாலைகளின் சீனி உற்பத்தி உயர்வடைந்தது. 2002 இல் தனியார் துறை இத்தொழிற்சாலைகளின் தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்றதிலிருந்து கரும்புச் செய்கையின் கீழான நிலப்பரப்பு மற்றும் சீனி உற்பத்தி என்பன தொடர்ந்து அதிகரித்தன. சீனிக் கைத்தொழிலின் அபிவிருத்தியைப் பாதிக்கும் முக்கிய தடைகளாக சார்பளவில் குறைந்த கரும்பு விளைவு வீதம் மற்றும் சீனி பெறும் வீதம் என்பனவற்றினால் விளைவிக்கப்படும் ஏற்பட்ட உயர்ந்த உற்பத்திச் செலவும், குறைந்த இலாபத்தன்மையும் விளங்குகின்றன. ஆகையால் உள்நாட்டுத் தேவையில் கிட்டத்தட்ட 90 சதவீதமானவை தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது.

**கால்நடை வளர்ப்பு:** முக்கியமாக பாற்பண்ணை மற்றும் கோழிவளர்ப்பு கைத்தொழில்களை உள்ளடக்கிய கால்நடை வளர்ப்புத்துறை, இவ்வாண்டில் கலப்பான செயலாற்றத்தினைப் பதிவு செய்தது. 2004 இல் மொத்த பாலுற்பத்தி 162 மில்லியன் இலீற்றர்களுக்கு 3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், மேம்பாடடைந்த சேகரிப்பு வலையமைப்பின் காரணமாக 2004 இல் மொத்த பால் சேகரிப்பு 13 சதவீதத்தினால் அதிகரித்தது. இரு அரச சந்தைப் பங்கேற்பாளர்களினால் செலுத்தப்படும் பாலின் உற்பத்தியாளர் விலைகள்

இவ்வாண்டில் பாற்பண்ணையாளர்களை ஊக்குவிப்பதற்காக இலீற்றர் ஒன்றிற்கு ரூ.15 இலிருந்து, இலீற்றர் ஒன்றிற்கு ரூ.16 ஆகவும், பின்னர் இலீற்றர் ஒன்றிற்கு ரூ.18 ஆகவும் இரு தடவைகள் அதிகரிக்கப்பட்டன. உற்பத்தியை அதிகரிப்பதற்கும், உடன் பால் நுகர்வினைப் பிரபல்யப்படுத்துவதற்குமான அரசின் முன்முயற்சிகளுக்கு இணையாக தனியார் பால் பதனிடும் நிறுவனங்கள், பாலிற்கான சந்தையை விரிவுபடுத்துவதற்காக பல்வேறுபட்ட திரவப்பால் உற்பத்திகளை அறிமுகப்படுத்தின. மேலும், தனியார் துறையானது வளர்ந்துவரும் கேள்வியை ஈடுசெய்வதற்காக உடன் பாலுற்பத்தியை விரிவுபடுத்தவும், பாலினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளைத் தயாரிப்பதற்குமாக பிரதேச மட்டத்தில் பால் பதனிடும் பொறிகளில் முதலீடு செய்தன. அண்மையில் நடாத்தப்பட்ட 2003/04 நுகர்வோர் நிதி சமூகப் பொருளாதார அளவீடானது 1990 களின் நடுப்பகுதி முதல் பாலுற்பத்திப் பொருட்களின் தலைக்குரிய நுகர்வுக்கான அதிகரிப்பினை வெளிக்காட்டியது.

2003 உடன் ஒப்பிடுகையில் 2004 இல் கோழி இறைச்சி உற்பத்தி 94,7 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், முட்டை உற்பத்தி 871 மில்லியனுக்கு 1.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2004 பெப்புருவரியில் கிழக்காசிய நாடுகளில் பரவிய பறவைக் காய்ச்சல் நோயினால் உள்ளூர் நுகர்வோர் அந்த நோய் பற்றிய அச்சத்தின் காரணமாக கோழி இறைச்சியை நுகர்வதற்கு தயக்கம் காட்டியதால் ஆண்டின் முதலரைப் பகுதியில் உள்நாட்டு கோழிப்பண்ணைக் கைத்தொழிலும் மோசமாக பாதிப்படைந்தது. கோழி இறைச்சியின் விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி மற்றும் இறைச்சியை களஞ்சியப் படுத்துவதற்கு போதிய குளிர்சாதன வசதிகள் இல்லாமை என்பன காரணமாக கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது சிறு உடமையாளர்கள் கோழிப்பண்ணைத் துறையினை மோசமாக பாதித்தது. எனினும், அரசாங்கமும் தனியார்த்துறையும் இத்தாக்கங்களைக் குறைப்பதற்காக நுகர்வோருக்கு அறவூட்டும் முகமாக பல்தரப்பட்ட பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தினர். ஒரு பாதுகாப்பு வழிமுறையாக தாய்க் கோழிகளின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட செய்தல் தடையானது 2004 இல் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியின் உள்ளார்ந்த வளர்ச்சியை கட்டுப்படுத்தியது.

**காடாக்கல்:** 2004 இல் காடாக்கல் திணைக்களம் வெளிநாட்டுக் கொடை முகவர்களின் உதவியுடன் காடாக்கல் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு பல செயற்றிட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டது. இச்செயற்றிட்டங்களின் கீழ் மீள் காடாக்கலினை விருத்தி செய்வதற்கு பலவித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பல பெருந்தோட்ட முகாமைத் துவக் கம்பனிகள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படாத அவற்றின் காணிகளை காடாக்கலுக்கென பன்முகப் படுத்தியுள்ளன. பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின்படி இத்தகைய பன்முகப்படுத்தலுக்கென பயன்படுத்தப்பட்ட காணிகளின் பரப்பு 14,079 எக்டேயர்களாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 48 சதவீதமான அதிகரிப்பாகும். இப் பெருந்தோட்டக் காடுகளில் 64 சதவீதத்திற்கும் மேலானவை நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் செறிந்துக் காணப்பட்டன. வர்த்தக ரீதியான பெருந்தோட்டக் காடு வளர்ப்பு நடவடிக்கைகளில் பல முதலீட்டாளர்கள் ஈடுபட்டுள்ளதனால் வர்த்தக ரீதியான தனியார் காடு வளர்ப்பின் கீழ் புதிதாக நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு எதிர்காலத்தில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்துறையில் கூட்டப்பட்ட பெறுமதியை அதிகரிப்பதற்கான வலுவான உள்ளார்ந்த வளம் காணப்பட்டபோதும் அது இன்னமும் பயன்படுத்தப் படவில்லை. 2004 இல் அரச மரக் கூட்டுத்தாபனம் அரச, தனியார் துறையினருக்கு தொடர்ந்தும் மரங்களை வழங்கியது. கூட்டுத் தாபனத்தினால் மொத்தமாக உற்பத்தி செய்யப்பட்ட மரக்குற்றிகள், அரியப்பட்ட பலகை, விறகு என்பன முன்னைய ஆண்டினை விட 168,933 கனமீற்றர்களுக்கு 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**மீன்பிடி:** 2004 இல் மொத்த மீன் உற்பத்தி முன்னைய ஆண்டினை விட 0.5 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தது. இது நன்னீர் மீன் மற்றும் அலங்கார மீன் உற்பத்தியின் 9.6 சதவீத அதிகரிப்பானது கடல் மீன் உற்பத்தியினது 0.6 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். கடல் மீன் உற்பத்தி மொத்த மீன்பிடியில் கிட்டத்தட்ட 90 சதவீத பங்களிப்பினை வழங்கியதுடன் இவற்றில் 60 சதவீதமானவை கடலோர மீன்பிடியினைக் கொண்டிருந்தன. மீன்பிடித் தொழில் 9 சதவீத அதிகரிப்பினை, பதிவு செய்தபோதிலும் குறிப்பாக 2004 இன் பின்னரைப் பகுதியில் பெரும்பாலான கரையோரங்களில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகளினால் கரையோர மீன்பிடித் தொழில் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து கடல் மீன்பிடித் துறையின் மொத்த உற்பத்தியை பாதித்தது. நன்னீரை அடிப்படையாகக் கொண்ட இறால் கைத்தொழில் அண்மைய ஆண்டுகளில் பின்னடைவினைக் கொண்டிருந்ததுடன் முதலீட்டாளர்களுக்கு பாரிய இழப்புக்களையும் ஏற்படுத்தியது. சூழல் ஒழுங்கு விதிகளைப் பின்பற்றாது சட்ட ரீதியற்ற முறையில் இறால் செய்கையில் ஈடுபடுவதானது மாசடை

அட்டவணை 2.5
**மீன் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள் '000

| துணைத்துறை | 2003(அ) | 2004(ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 255 | 253 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 30 | 33 |
| மொத்தம் | 285 | 286 |

மூலங்கள்: ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான முகவர் கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு.
தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர்.
(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறைகள்.

தலுக்கும் நோய்கள் பரவுவதற்கும் வழிவகுப்பதுடன் உற்பத்தி இழப்புக்களுக்கான பொதுக்காரணியாகவும் அமைகிறது. 2005 வரவு செலவுத் திட்டம் உடனடி உட்கட்டமைப்பு புனருத்தாருண வேலைகளுக்கும் இத்துறையின் சூழல் பாதுகாப்புக்குமான நிதிகளை ஒதுக்கியுள்ளது.

தீவில் மூன்றில் இரண்டு கரையோரப் பகுதிகளை தாக்கிய சுனாமி பேரலைகளினால் மீன்பிடித் துறை கடுமையான பாதிப்புக்குள்ளானது. சுனாமியினால் தொழிலிலீடுபட்டிருந்த கிட்டத்தட்ட 80 சதவீதமான கடற்றொழிலாளர்கள் பாதிப்படைந்ததுடன் 75 சதவீதத்திற்கும் அதிகமான மீன்பிடிப் படகுகள் அழிக்கப்பட்டோ அல்லது சேதமடைந்தோ காணப்பட்டன. இதற்கு மேலாக பெரும் எண்ணிக்கை யான மீன்பிடி வள்ளங்களும் மீன்பிடி கருவிகளும் அழிக்கப்பட்டன. 12 மீன்பிடித் துறைமுகங்களில், அலை தாங்கிகள், கட்டடங்கள், பொறிகளும் கருவிகளும் உட்பட 10 துறைமுகங்கள் கடுமையாக சேதமடைந்தன. இதற்கு மேலாக பனிக்கட்டிப் பொறிகள், இறங்கு துறை முகங்கள், சந்தைகள் மற்றும் மீன்பிடிச் சமூகங்களின் வீடுகள் போன்ற அரச மற்றும் தனியார் பொது வசதிகள் என்பனவும் அழிவடைந்தன. ஆகையால், இந்த அனர்த்தத்தின் முழுமையான தாக்கம் 2005 இல் முதலில் கேள்வியிலும், நீண்ட காலத்தில் நிரம்பலிலும் பக்கத்தாலும் உணரப்படும். இத்துறையின் முழுமையான மீட்சியானது மீட்சி செயன்முறையின் வேகம் மற்றும் செயற்றிறன் என்பவற்றிலேயே தங்கியிருக்கும்.

## கைத்தொழில் வெளியீடு

சுரங்கமகழ்தலும், கல்லுடைத்தலும், தயாரிப்பு, கட்டடவாக்கமும் மின்வலுவும் மற்றும் நீர் ஆகிய நான்கு துறைகளை உள்ளடக்கியுள்ள கைத்தொழில் துறை 2004 இல் 5.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழிற் துறையின் பங்கு 2003 இல் காணப்பட்ட 26 சதவீத மட்டத்திலேயே தொடர்ந்து விளங்கியது. கைத்தொழில் துறை 2004 இன் மொத்த வளர்ச்சிக்கு 26 சதவீதம் பங்களிப்புச் செய்தது. நான்கு துணைத் துறைகளுள் மிகப்பெரிய துறையான தயாரிப்புத்துறை மொ.உ.உற்பத்தியின் 16 சதவீதத்திற்கு வகைகூறி 2004 இன் மொத்த வளர்ச்சிக்கு 16 சதவீதத்தை பங்களிப்புச் செய்ததுடன், இது 2003 இன் பங்களிப்பை விட உயர்ந்து காணப்பட்டது. கட்டடவாக்கத் துறையும் 2004 இன் சிறந்த செயலாற்றத்துடன் குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்தது. மின்வலு மற்றும் நீர்த்துறை வரட்சியால் பாதிக்கப்பட்டு 2.5 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.9 சதவீத வளர்ச்சியுடன் சிறப்பாகச் செயலாற்றியது.

**தயாரிப்பு :** தொழிற்சாலைக் கைத்தொழிலில் மிகப்பெரிய துறையான தயாரிப்புத்துறை 2003 இன் 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.1 சதவீதத்தால்


அட்டவணை 2.6
**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி (1990 இன் நிலையான விலைகளில்)**

| வகை | ரூபா மில்லியன் | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | 2003 | 2004(அ) | 2003 | 2004(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 50,656 | 52,912 | 6.3 | 4.5 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 86,247 | 93,062 | 2.7 | 7.9 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,547 | 1,610 | 5.5 | 4.1 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3,810 | 3,882 | 4.5 | 1.9 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 43,100 | 45,098 | 5.0 | 4.6 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 17,311 | 18,631 | 6.1 | 7.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 2,254 | 2,455 | 4.6 | 8.9 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 10,079 | 10,512 | 6.7 | 4.3 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 5,046 | 5,207 | 6.9 | 3.2 |
| மொத்தம் | 220,050 | 233,369 | 4.6 | 6.1 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வரைபடம் 2.4
**கைத்தொழில் உற்பத்திகளின் உள்ளமைப்பு - 2004**




விரிவடைந்தது. இத்துணைத்துறை, 2004 இல் கைத்தொழிலின் மொத்த வளர்ச்சிக்கு 59 சதவீதப் பங்களிப்பைச் செய்தது. முதலரைப்பகுதியில் வளர்ச்சி மிதமாக இருந்தபோதிலும் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வலுவாக மீட்சியடைந்தது. தனியார்த் துறைக் கைத்தொழில்கள், 2004 இன் தொழிற்சாலைக் கைத்தொழில் துறையின் வெளியீட்டில் 96 சதவீதத்துக்கு வகைகூறியது. தனியார் துறைக் கைத்தொழில்களின் இரு துணை வகைகளான முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லாத கைத்தொழில்கள் முறையே 7.5 சதவீதத்தினாலும், 4.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்து மொத்த தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டுக்கு முறையே 55 சதவீதத்தையும், 45 சதவீதத்தையும் பங்களிப்புச் செய்தன.

2004 இல் தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்பு (90 சதவீதத்திற்கும் மேல்) முக்கிய ஒன்பது கைத்தொழில் வகைகளினுள் நான்கு முக்கிய வகைகளான புடவைகள், ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள்; உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள்; இரசாயனங்கள், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருட்களிலிருந்து பெறப்பட்டன. இக்கைத்தொழில்கள், பேரண்டப் பொருளாதார மீட்சி, அதிகரித்த உள்நாட்டு நுகர்வோர்க் கேள்வி, குறைந்த வட்டிவீத அமைப்பு, போர்நிறுத்தம் தொடர்ந்திருந்தமை மற்றும் தொலைத் தொடர்பூட்டல்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் துறைமுகப் பணிகள் போன்ற அடிப்படைக் கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுங்க நடைமுறைகளின் இலகுபடுத்தல் என்பவற்றால் நன்மையடைந்தன. உற்பத்தி திறனிலான மேம்பாடு, உற்பத்திச் செலவின் குறைப்பு மற்றும் செலாவணி வீதத்தின் பெறுமானத் தேய்வு என்பன ஏற்றுமதிகளிலான போட்டித்தன்மைக்கு உதவியளித்தன. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் வகையும் முக்கியமாக உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பை பிரதிபலிக்கும் வகையில் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. 2003 இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து வளர்ச்சி உத்வேகத்தை பெற்ற உள்நாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்ட கைத்தொழில்களின் வளர்ச்சி 2004 இலும் தொடர்ந்தது. இவ்வளர்ச்சியானது சகல கைத்தொழில் வகைகளிலும் காணப்பட்டது. பாரியளவிலான பொருளாதாரச் செயற்பாடு, வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து எழுகின்ற புதிய கேள்வி, தீவிரமான விளம்பரப்படுத்தல் மற்றும் நுகர்வோர் விருப்புத் தேர்வுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன கைத்தொழில் பொருட்களுக்கான கேள்வியைத் தூண்டின.

புடவைகள், தைத்த ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் துறை 7.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, உண்மை நியதிகளில் மொத்த வளர்ச்சிக்கு 51 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. முழு வளர்ச்சியும் தைத்த ஆடைகள் துறையிலிருந்தே பெறப்பட்டது. பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்துடன் தைத்த ஆடைகள் கைத்தொழில்கள், கடுமையான பன்னாட்டுப் போட்டிக்கு மத்தியிலும் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட மேம்பாடுகள் காரணமாக 9.9 சதவீதத்தால் விரிவடைந்தன. கடந்த இரு தசாப்தங்களாக தொழிற்பாட்டிலிருந்த பல்புடை நூழிலை உடன்படிக்கையின் கீழான புடவைகள் மற்றும் தைத்த ஆடைகளின் அனுமதிப்பங்கு முறைமை 2005 சனவரி 1 இலிருந்து முடிவுக்கு வந்தது. ஆகக்குறைந்தது ஒரு தசாப்தத்திற்கு முன்பே இது அறிவிக்கப்பட்டமையினால் அனுமதிப்பங்கு இல்லாத சந்தையில் போட்டியை எதிர்கொள்வதற்கான மீள் ஒழுங்குபடுத்தல் செய்முறை இலங்கையில் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டது. உற்பத்திப் பொருளில் சிறப்புத் தன்மை பெறல், கொள்வனவு செய்தலும் இணைவும், செயன்முறையிலான மேம்பாடுகள், தொழில்நுட்ப அபிவிருத்திகளும் தேர்ச்சி அபிவிருத்தி, முக்கியத் துவமிக்க கூட்டணிகளை விருத்தி செய்தல், மூலப் பொருட்கள் மற்றும் துணைப் பொருட்களின் கைத்தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தும் ஆற்றல்களை மேம்படுத்தல் எனடபன வாயிலாக மீள் ஒழுங்குபடுத்தல் இடம்பெற்றது. இதன் விளைவாக, இக்கைத்தொழிலினால் விலை, தரம் மற்றும் விரைவான வழங்கலின் மூலம் பன்னாட்டுச் சந்தைகளில் உயர்ந்த நற்பெயரை உருவாக்கக் கூடியதாக இருந்தது.

பன்னாட்டு தொழிலாளர் நியமங்களை பின்பற்றுவதன் காரணமாக தைத்த ஆடைகள் துறை, 2004 பெப்புருவரியிலிருந்து பொதுமைப்படுத்தப் பட்ட முன்னுரிமைகள் முறைமையின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பெறப்பட்ட சிறப்புத் தீர்வை சலுகைகளிலிருந்தும் 2004 இல் நன்மையடைந்தது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிடமிருந்து பெறப்பட்ட தைத்த ஆடைகளின் அனுமதிப்பங்கு 2004 இல் இரு மடங்காக அதிகரித்தது. இந்தியாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள அனைத்தையு முள்ளடக்கிய பொருளாதார ஒத்துழைப்பு உடன் படிக்கை மற்றும் பாகிஸ்தான் மற்றும் பிம்ஸ்றெக் வுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பவற றிலிருந்து தைத்த ஆடைகள் கைத்தொழில் மேலும் நன்மையடையும். அண்மைய சுனாமிப் பேரழிவை கருத்திற் கொண்டு, நிவாரணத்தை வழங்கும் நடவடிக்கையாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய இரண்டும் அவற்றின் சந்தைகளில் இலங்கை உற்பத்திகளுக்கு கூடிய நுழைவை வழங்குவதற்கு தற்போது ஆலோசித்து வருகின்றன.

உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளின் வெளியீடு 2004 இல் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், உணவு பதனிடல், குடிபானங்கள் மற்றும் வெறியக் குடிவகைகளிலான மேம்பட்ட செயலாற்றத்தால் உந்தப்பட்டு மொத்த வளர்ச்சிக்கு 17 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. பதனிடப்பட்ட இறைச்சி உற்பத்திகள், விசுக்கோத்துக்கள், பால் உற்பத்திகள், கோதுமை மா பதனிடல், பழங்கள் மற்றும் காய்கறி பதனிடல், தேயிலை பதனிடல், வெறியக் குடிவகை, பியர் மற்றும் விலங்குத்தீன் உற்பத்தி என்பவற்றில் வளர்ச்சி காணப்பட்டது. இக்கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு, அதிகரித்த தலைக்குரிய வருமானம், சுற்றுலாக் கைத்தொழிலிலான பெருமளவு அதிகரிப்பு, அதிகரித்த நுகர்வோர் கொடுகடன், வடக்கு மற்றும் கிழக்கில் அதிகரித்த வர்த்தகச் செயற்பாடுகள், விநியோக வலையமைப்பி லேற்பட்ட விரிவாக்கம் மற்றும் தீவிரமான சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் என்பன உதவின.

தொழிற்சாலைக் கைத்தொழில்களினுள், மூன்றாவது மிகப்பெரிய துறையான இரசாயனங்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களால் முதன்மை வகிக்கப்பட்டு சார்புரீதியில் 2004 இல் உயர் வளர்ச்சியைக் காட்டின. இத்துறை தொழிற்சாலைக் கைத்தொழிலின் மொத்த வளர்ச்சிக்கு 15 சதவீத பங்களிப்பைச் செய்தது. ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலின் சிறப்பான செயலாற்றம், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான இந்தியாவுக்கான அதன் தீர்வையற்ற நுழைவு, ஆசிய பசுபிக் மற்றும் சார்க் பிராந்தியங்களில் புதிய சந்தைகளில் நுழைதல், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளில் ஏற்கனவேயிருக்கும் சந்தைகளிலிருந்தான அதிகரித்த கேள்வி என்பவற்றால் ஏற்பட்டதாகும். ஊர்திகள் தொகுதியிலேற்பட்ட அதிகரிப்பு மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் போக்குவரத்துச் செயற்பாடுகளிலேற்பட்ட முன்னேற்றம் என்பன ரயர்கள் மற்றும் ரியூப்புக்களுக்கான உள்நாட்டுக் கேள்வியை அதிகரித்தன. உள்நாட்டுக் கைத்தொழிற் தேவையின் 16 சதவீதம் இறக்குமதி செய்யப்பட்ட இது இயற்கை இறப்பரின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 72 சதவீதமாக விளங்கி அதிகரித்துச் செல்லும் உள்நாட்டுக் கேள்வியை எடுத்துக் காட்டியது.

2004 இல் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகளின் வெளியீடு 7.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து தொழிற்சாலைக் கைத்தொழில்களின் மொத்த வளர்ச்சிக்கு 10 சதவீதம் பங்களிப்புச் செய்தது. இவ்வளர்ச்சியானது மட்பாண்டங்கள், பட்டை தீட்டப்பட்ட வைரங்கள், சீமெந்து மற்றும் கூரைத் தகடுகளின் உற்பத்தியால் உந்தப்பட்டதுடன் பின்னைய இரண்டும் கட்டடவாக்கத்திலிருந்து எழுந்த கேள்வியினை பிரதிபலிப்பதாகவிருந்தன. இவ்வுற்பத்திகளுக்கான கேள்வி, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலான மீள் நிர்மாண செயற்பாடுகளுடன் மேலும் வளர்ச்சி யடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. சாப்பாட்டு மேசைப் பொருட்கள், அழகுசாதன அணிகலன்கள் மற்றும் மட்பாண்ட ஓடுகள் போன்ற மட்பாண்ட கைத்தொழிலான முக்கிய துணைத் துறைகளும் புதிய வெளிநாட்டுச் சந்தைகளில் நுழைந்தமையாலும், பொருட்களின் தரத்திலான தொடர்ச்சியான முன்னேற்றத்தாலும் வளர்ச்சியடைந்தன.

உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளிலான வளர்ச்சியானது, வேளாண்மைப் பொறி, நீர்ப்பம்பிகள், உருக்குத் தளபாடம், சமையலறைத் தளபாடங்கள், என்பவற்றின் அதிகரித்த உற்பத்தி உந்து ஈருருளிப் பாகங்களை ஒருங்கிணைத்தல், மற்றும் கப்பல்கள் மற்றும் படகுகளின் தயாரிப்பும் திருத்தங்களும் மற்றும் அலுமினியப் பொருட்கள், வெளிச்சப் பொருத்திகள் மற்றும் மின்குமிழ்களின் உற்பத்தி என்பனவற்றிலிருந்து எழுந்தது. அலுமினியப் பொருட்கள், கம்பிகள், மின்குமிழ்கள் மற்றும் வெளிச்சப் பொருத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வி கட்டடவாக்கக் கைத்தொழிலில் ஏற்பட்ட விரிவாக்கத்துடன் வளர்ச்சியடைந்த வேளையில் கிராமிய மின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள்,

அட்டவணை 2.7
**முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாபவிகிதம் (அ)**

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூ.மில்லியன்) | | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூ.மில்லியன்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2003(ஆ) | 20043(இ) | 20033(ஆ) | 20043(இ) | 20033(ஆ) | 20043(இ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 71,441 | 79,071 | 83,264 | 92,590 | 14.2 | 14.6 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 18,816 | 21,305 | 22,400 | 25,424 | 16.0 | 16.2 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,349 | 1,489 | 1,542 | 1,713 | 12.5 | 13.1 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 4,391 | 4,719 | 4,950 | 5,356 | 11.3 | 11.9 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 27,354 | 30,531 | 31,478 | 35,255 | 13.1 | 13.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 17,615 | 19,608 | 20,554 | 23,041 | 14.3 | 14.9 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,953 | 2,232 | 2,250 | 2,592 | 13.2 | 13.9 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 11,476 | 12,644 | 13,100 | 14,567 | 12.4 | 13.2 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 2,857 | 3,115 | 3,214 | 3,519 | 11.1 | 11.5 |
| மொத்தம் | 157,251 | 174,714 | 182,752 | 204,058 | 14.0 | 14.4 |

(அ) 480 முதலீட்டுச்சபையல்லா தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவலினை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) திருத்தப்பட்டது.
(இ) தற்காலிகம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பாவனைப் பொருட்கள் மற்றும் சமையலறைப் பாவனைப் பொருட்களுக்கான கேள்வியைத் தூண்டின.

கைத்தொழில் வெளியீட்டில் 4 சதவீதத்துக்கு மட்டும் வகைகூறிய அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீடு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தடங்கலற்ற உற்பத்தியுடன் 2004 இல் 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 90 சதவீதத்திற்கும் மேலாக வகைகூறும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு 2004 இல் 5.9 சதவீதத்தால் அதிகரித்தது. 2004 இல் உயர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்த ஏனைய அரச துறைக் கைத்தொழில்களர்க வரையறுக்கப்பட்ட லங்கா பொசுபேற்று லிமிடெட்டும் (7.4 சதவீதம்), வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட்டும் (4.3 சதவீதம்) விளங்கின.

மொத்த உற்பத்திச் செலவுக்கான உற்பத்தியின் தொழிற்சாலைப் பெறுமதி விகிதமாக மதிப்பிடப்படும் தொழிற்சாலைக் கைத்தொழில் துறையின் இலாப விகிதம் 2004 இல் சிறிதளவால் அதிகரித்தது. தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் உள்நாட்டுக் கேள்வி ஏற்றுமதிகளிலான குறிப்பிடத்தக்க மேம்பாடு மற்றும் ரூபாவின் பெறுமானத் தேய்வு என்பன வருமானத்திலேற்பட்ட அதிகரிப்புக்கு உதவின. எரிபொருள் மற்றும் ஏனைய பொது வசதிகளின் அதிகரித்த விலைகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருளின் அதிகரித்த செலவு என்பன காரணமாக 2004 இல் உற்பத்திச் செலவு அதிகரித்த போதிலும் வருமான அதிகரிப்பை விட குறைவாகவே காணப்பட்டது.

தொழிற்சாலைக் கைத்தொழிலில் தயாரிப்புத் துறையின் மொத்த கூலிச்செலவு 2004 இல் 12 சதவீதத்தால் அதிகரித்த போதிலும், ஏனைய உள்ளீட்டுச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரித்த செலவு காரணமாக மொத்த உற்பத்திச் செலவில் அதன் பங்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்திச் செயற்பாடுகளை வெளி மூலங்களுக்கு வழங்குவதன் மூலமும், மேலதிக நேரக் கொடுப்பனவைக் கட்டுப்படுத்தியதன் மூலமும் தொழிலாளர் செலவு கட்டுப்படுத்தப்பட்டது. பெற்றோலியம் மற்றும் வாயுச் செலவுகள் உயர்வாகக் காணப்பட்ட போதிலும், மொத்த உற்பத்திச் செலவில் மின்வலுச் செலவின் பங்கு, உற்பத்தியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பலதரப்பட்ட மின்வலு சேமிப்பு நடவடிக்கைகள் காரணமாக சிறிதளவால் மட்டுமே அதிகரித்தது. முக்கியமாக வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதங்கள் மற்றும் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்திலான மேம்பாடு என்பன காரணமாக மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக வட்டிச் செலவுகள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. மனித மணித்தியாலம் ஒன்றுக்கு கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதியிலான மாற்றமாக மதிப்பிடப்படும் தயாரிப்புத் துறையின் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2004 இல் 2.6 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வுற்பத்தித் திறன் மேம்பாடு சகல கைத்தொழில் வகைகளிலும் காணப்பட்டதுடன், இது புதிய தொழில் நுட்பத்தின் பாவனை, தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் 2004 இல் காணப்பட்ட குறைந்த அளவிலான கைத்தொழில் பிணக்குகள் என்பவற்றினால் விளைவிக்கப்பட்டது.

அட்டவணை 2.8
**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)**
**(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)**

உள்நாட்டுச் செலவு (சதவீதம்)

| வகை | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2003 | 2004 | 2003 | 2004 | 2003 | 2004 | 2003 | 2004 | 2003 | 2004 |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 3.1 | 3.3 | 9.8 | 9.7 | 37.1 | 37.8 | 1.5 | 1.5 | 51.5 | 52.3 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 4.2 | 4.2 | 14.8 | 14.6 | 13.8 | 13.2 | 2.4 | 2.4 | 35.2 | 34.4 |
| 3. மர, மர உற்பத்திகள் | 8.9 | 8.9 | 15.4 | 15.8 | 33.6 | 33.1 | 4.0 | 4.0 | 61.9 | 61.8 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3.5 | 3.4 | 12.0 | 12.9 | 18.6 | 18.2 | 3.8 | 3.7 | 37.9 | 38.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 5.2 | 5.9 | 12.8 | 12.3 | 30.4 | 29.2 | 3.7 | 3.2 | 52.1 | 50.6 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 18.1 | 18.9 | 16.1 | 15.2 | 27.9 | 28.4 | 2.3 | 2.3 | 64.4 | 64.8 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 9.1 | 9.9 | 10.2 | 11.1 | 34.9 | 35.0 | 3.5 | 3.2 | 57.7 | 59.2 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 3.9 | 4.5 | 10.8 | 11.3 | 25.8 | 26.2 | 3.6 | 3.3 | 44.1 | 45.3 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 4.5 | 4.9 | 12.6 | 12.1 | 33.9 | 34.1 | 1.8 | 1.8 | 52.8 | 52.9 |
| மொத்தம் | 5.5 | 5.9 | 11.9 | 11.7 | 30.7 | 30.7 | 2.4 | 2.2 | 50.5 | 50.5 |

(அ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**பெருந்தோட்டப் பயிர்களின் பதனிடல்:** தயாரிப்புத்துறையினுள், தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சி காரணமாக பெருந்தோட்டப் பயிர்களின் பதனிடல் சிறிதளவால் வளர்ச்சியடைந்திருக்கையில், தெங்குப் பதனிடல், இவ்வாண்டின் பிற்பகுதியில் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டதற்கு மத்தியிலும் தேங்காய்த்துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய்யின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக பெருமளவில் அதிகரித்தது.

**சிறு கைத்தொழில்கள்:** சிறு கைத்தொழில்கள் துணைத்துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்த உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவால் சுருக்கமடைந்தது. நாட்டில் பெருமளவு பரந்து காணப்படும் சிறு கைத்தொழிலான நெல் குற்றல் கைத்தொழில், குறைந்த நெல் அறுவடை காரணமாக பாதிப்புக்குள்ளாயிருக்கையில் கயிறு, தேங்காய்ச்சிரட்டை மற்றும் உலர்த்திய தேங்காயுடன் தொடர்பான பொருட்களின் சிறு அளவு உற்பத்தி இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வீழ்ச்சியடைந்தது. தைத்த ஆடைகள் மற்றும் கைத்தறி கைத்தொழில் பெரிய மற்றும் நடுத்தர அளவான தைத்த ஆடைகள் கைத்தொழில்களின் மேம்பாடடைந்த செயலாற்றத்துடன் முன்னேற்றமடைந்திருக்கையில், மர ஆலைகள், சிறு கல்லுடைத்தல் உற்பத்திகள் ஓடுகள், செங்கற்கள், சீமெந்து கற்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள் என்பன கட்டடவாக்கக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியால் நன்மையடைந்தன.

**கட்டடவாக்கம்:** கட்டடவாக்கத்துறை முன்னைய ஆண்டின் 5.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2004 இல் 6.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்விரிவாக்கம் பெரும்பாலும் சுற்றுலா விடுதித் துறையில் ஏற்பட்ட புத்தாக்கம் மற்றும் விரிவாக்கத்

அட்டவணை 2.9
**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறை கைத்தொழில்களிலான தொழிலாளர் உற்பத்தித் திறன் சுட்டெண் (அ)**

1995=100

| வகை | 2003 | 2004 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 126.7 | 129.4 | 2.1 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 105.9 | 109.5 | 3.4 |
| 3. மர, மர உற்பத்திகள் | 98.0 | 100.7 | 2.8 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 98.8 | 101.4 | 2.6 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 130.1 | 134.7 | 3.5 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 109.7 | 112.0 | 2.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 98.4 | 100.9 | 2.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 116.5 | 120.0 | 3.0 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 105.3 | 107.9 | 2.5 |
| மொத்தம் | 113.3 | 116.3 | 2.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

தாலும் தொடர்மாடித் தொகுதிகள் மற்றும் தொடர்மாடி வீடுகள் உள்ளிட்ட வீடமைப்பு, நிர்மாணத்திலான அதிகரித்த செயற்பாட்டாலும் ஏற்பட்டது. நீர் வழங்கல், வீதிகள், மின்வலு மற்றும் துறைமுகத்துறை அபிவிருத்தி என்பனவற்றிலான நடைமுறையிலிருக்கும் வெளிநாடுகளால் நிதியிடப்படும் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களும் இத்துறையின் வளர்ச்சிச் செயலாற்றத்துக்குப் பங்களிப்புச் செய்தன. இவ்வளர்ச்சியானது கட்டடப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதிகள், அதிகரித்த விலைகளுக்கு மத்தியிலும் சீமெந்து மற்றும் ஏனைய கட்டடவாக்கப் பொருட்களின் அதிகரித்த விற்பனை மற்றும் வங்கித்தொழில் துறையால் பகிர்ந் தளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்களிலும் பிரதிபலிக்கப்பட்டது. குடியிருப்பதற்கான வீடுகளுக்கான கேள்வியானது நிதியியல் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான கடன் பொதிகள் மூலம் தூண்டப்பட்டது. வதிவிட வீடுகள், மற்றும் தொடர்மாடி வீட்டலகுகளின் விலைகள் அதிகரித்துச் செல்லும் கேள்வி மற்றும் கட்டடப் பொருட்களின் செலவு என்பன காரணமாக அதிகரித்தன. கட்டடவாக்கப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட விலைச்சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் கட்டடவாக்கச் செயற்பாடுகளிலான விலைகள் 18 சதவீதத்தால் அதிகரித்திருப்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

**மின்வலு மற்றும் நீர் வாயுத்துறை:** மின்வலு, நீர் மற்றும் வாயுத்துறை முன்னைய ஆண்டின் 21.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2004 இல் 2.5 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. மின்வலு உருவாக்கம் மற்றும் மின்வலுவுக்கான கேள்வி என்பன வீட்டுத்துறை மற்றும் வர்த்தகத் துறையிலிருந்தான விரிவடைந்த கேள்வி காரணமாக முறையே 5.6 சதவீதத்தாலும், 7.4 சதவீதத்தாலும் அதிகரித்தன. 2004 ஆம் ஆண்டளவில் நாட்டில் உள்ள குடியிருப்புக்களில் ஏறத்தாழ 75 சதவீதமானவை மின்வலு இணைப்பிற்கான வாய்ப்பைக் கொண்டிருந்ததனை நுநிச அளவீடு 2003/04 பதிவு செய்தது. மின்வலுவுக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு, முன்னைய ஆண்டை விட நீர் மின்வலு உருவாக்கம் 10.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையால் வெப்ப மின்வலு உருவாக்கத்தை 18.1 சதவீதத்தால் அதிகரித்ததன் மூலம் ஈடுசெய்யப்பட்டது. 2003 இன் 56 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் மொத்த மின்வலுவில், 63 சதவீதம் வெப்பவலுவால் உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக, மின்வலு துணைத் துறையிலான பெறுமதி கூட்டல், உலர் வானிலை நிலைமைகளின் கீழ் குறிப்பிடத்தக்களவு உருவாக்கச் செலவுகளுடனான வாடகைக்கமர்த்தப்பட்ட வெப்ப மின்வலு உள்ளடங்கலான வெப்ப மின்வலுவின் அதிகரித்த பயன்பாடு காரணமாக 3.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வரட்சி நிலைமைகள் காரணமாக இலங்கை மின்சபையால் உருவாக்கப்பட்ட நீர் மின்வலு இவ்வாண்டில் 13.7 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்த வேளையில், இலங்கை மின்சபையால் உருவாக்கப்பட்ட வெப்ப மின்வலு 14.3 சதவீதத்தால் அதிகரித்தது. தனியார் வெப்ப மற்றும் நீர் மின்வலு உற்பத்தியாளர்கள் இவ்வாண்டில் அவர்களின் மின்உருவாக்கத்தை அதிகரிக்கக் கூடியதாக இருந்தபோதிலும், மேலதிகக் கேள்வியானது வாடகைக்கமர்த்தப்பட்ட வெப்ப மின்வலு மூலமே ஈடுசெய்யப்பட்டது. குழாய் நீரின் சேகரிப்பு, சுத்திகரித்தல் மற்றும் பகிர்ந்தளிப்பை உள்ளடக்கும் நீர் துணைத்துறை முன்னைய ஆண்டின் 1.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. நுநிச அளவீடு 2003/04, 1990 களின் நடுப்பகுதிகளிலிருந்து குழாய் நீரை அவர்களின் வீடுகளினுள்ளேயே பெறக்கூடிய குடியிருப்பாளர்களின் பங்கில் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது.

**சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்:** சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துறை 7.9 சதவீதத்தால் விரிவடைந்தது. சுரங்கமகழ்தல் துணைத்துறை, இரத்தினக்கற்கள் அகழ்வு மற்றும் ஏனைய அகழ்வு நடவடிக்கைகளிலான சிறந்த செயலாற்றத்துடன் இவ்வாண்டில் சிறப்பாகச் செயலாற்றியது. பெறுமதி கூட்டல் நியதிகளில் மிகப்பெரிய துறையான இரத்தினக்கல் அகழ்வுத்துறை அதிகரித்த ஏற்றுமதி கேள்வியிலிருந்து நன்மையடைந்து 2004 இல் வலுவாகச் செயலாற்றியது. எனினும், காரீயம், பொசுபேற்று மற்றும் கனிப்பொருள் மணல் தொடர்பான சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளும் குறிப் பிடத்தக்களவில் அதிகரித்தன. கல்லுடைத்தல் துணைத்துறை 6.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து கட்டடவாக்கக் கைத்தொழிலில் கட்டடப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வியை பிரதிபலிக்கின்றது.

**பணிகளிலான வெளியீடுகள்:** 2003 இனைப் போன்றே பணிகள் துறையிலான வளர்ச்சி 2004 இன் வளர்ச்சிக்கான முக்கிய உந்து சக்தியை வழங்கியது. 2003 இன் வளர்ச்சியிலிருந்து சிறிதளவு வீழ்ச்சியடைந்த பணிகள் துறை 7.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொத்த வளர்ச்சியின் பெரும்பங்கிற்கு பங்களிப்புச் செய்தது. பலதரப்பட்ட பணிகள் துணைத்துறைகளிலான பெறுமதி கூட்டலிலேற்பட்ட அதிகரிப்பு இவ்வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கியது.

**மொத்த விற்பனையும் சில்லறை வர்த்தகமும், சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துறை:** மொத்த விற்பனையும் சில்லறை வர்த்தகமும் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துறை முன்னைய ஆண்டின் 7.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில்

2004 இல் 6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வீழ்ச்சி, முக்கியமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மைப் பொருட்கள் சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளிலான குறைந்த வளர்ச்சியாலும் 2003 இன் 11 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் இறக்குமதி வர்த்தகத்தின் 9 சதவீதம் கொண்ட சார்புரீதியான குறைந்த வளர்ச்சியாலும் ஏற்பட்டது. இறக்குமதி வர்த்தக வளர்ச்சியின் அமைப்பு உள்நாட்டு பொருளாதார விரிவாக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டது. நுகர்வுப் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி அளவு நியதிகளில், முறையே 3.9 சதவீதமாகவும், 6.6 சதவீதமாகவும் காணப்படுகையில், முதலீடுகளிலான விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 18.4 சதவீதம் கொண்ட உயர் வீதத்தால் வளர்ச்சியடைந்தன. விலைகளிலேறப்பட்ட உயர் அதிகரிப்புக்கு மத்தியிலும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி அளவுகள் செழிப்பாக வளர்ச்சியடைந்து, முக்கியமாக கைத்தொழில் மற்றும் பணித் துறைகளிலிருந்தான உள்ளீடுகளுக்கான அதிகரித்த கேள்வியை பிரதிபலித்தன. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் உணவு மற்றும் குடிபானங்களின் மொத்த இறக்குமதிகள் உயர் விலைகள் காரணமாக அளவு நியதிகளில் வீழ்ச்சியடைந்திருக்கையில் ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் செழிப்பாக வளர்ச்சியடைந்தன. ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறை புடவைகள் மற்றும் தைத்த ஆடைகளால் முன்னிலை வகிக்கப்படும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் விரிவாக்கத்திலிருந்து முக்கியமாக நன்மையடைந்து 2004 இல் 7.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டின் 3.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2004 இல் 9.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. வேளாண்மை ஏற்றுமதிகளும் ஏற்றுமதி வர்த்தகத்தின் வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்து அனைத்து பெருந்தோட்டப் பயிர்களினதும் ஏற்றுமதி அளவுகளிலேற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன. 2003 உடன் ஒப்பிடுகையில் 2004 இல் உள்நாட்டு வர்த்தக துணைத் துறையானது சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியிலேற்பட்ட, குறிப்பாக அரிசி உற்பத்தியில் பொதுவான வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. புதிய வகைப்படுத்தலின், கீழ் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துறையுடன் உள்ளடக்கப்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத்துறை 2004 இல் 15.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2002 தொடக்கத்திலிருந்து அமுலுக்குவந்த போர்நிறுத்தத்திற்குப் பின்பு சுற்றுலா வருகைகளிலேற்பட்ட அதிகரிப்புடன் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்த இத்துணைத்துறை 2004 இல் சுற்றுலா வருகைகள் 566,202 இற்கு 13.1 சதவீதத்தால் அதிகரித்ததை தொடர்ந்து மேலும் விரிவடைந்தது. 2004 இல் சுற்றுலா விடுதியிலான சராசரி தங்கும்வீதம் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 53 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 59 சதவீதத்திற்கு அதிகரித்தது. தரமிடப்பட்ட சகல சுற்றுலா விடுதிகளினதும் வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 10.9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்திருக்கையில், உள்நாட்டு விருந்தினர் இரவுகள் மிகக் குறைந்தளவிலான வளர்ச்சியைக் காட்டியது. இத்துறையின் பெறுமதி கூட்டல் தரமுயர்த்தல் மற்றும் இயலளவு விரிவாக்கம் என்பனவற்றிற்காக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் காரணமாக அதிகரித்தது.

**போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறை:** போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 2003 இன் 10.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2004 இல் 13.7 சதவீதத்தால் அதிகரித்தது. இத்துறை அதிகூடிய துறைவாரியான வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், இது தொலைத் தொடர்பூட்டல் மற்றும் சரக்கு கையாளல் துணைத்துறைகளிலான குறிப்பிடத்தக்க செயலாற்றத்தால் உந்தப்பட்டதாகும். கடந்த சில ஆண்டுகளாக உயர் வீதத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைந்த தொலைத் தொடர்பூட்டல் துறை 32 சதவீதத்தால் மேலும் விரிவடைந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தேக்கமுற்றுக் காணப்பட்ட நிலையான தொலைபேசி இணைப்பைக் கொண்ட உள்நாட்டு வாடிக்கையாளர் களின் எண்ணிக்கை ஆண்டு முழுவதும் விரிவடைந்து 12.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. செல்லிடத் தொலைபேசிப் பாவனை, 2003 உடன் ஒப்பிடுகையில் 52 சதவீதத்தால் அதிகரித்ததுடன் 2004 இறுதியில் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 2.1 மில்லியனை விஞ்சியது. எனினும், இணையத்தளம் மற்றும் மின்அஞ்சலின் பயன்பாடு நடப்பாண்டில் மிதமாக விளங்கி, இப்பணிகளுக்கான அடக்கப்பட்டிருந்த கேள்வி இதுவரையில் பெருமளவிற்கு பூர்த்தி செய்யப்பட்டதை எடுத்துக்காட்டுகிறது.

சரக்கு கையாளல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பாரியளவு களஞ்சியப்படுத்தல் துணைத்துறையினுள் துறைமுகப் பணிகள் 2004 இல் 13.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து கடல்வழிச் சரக்கு கையாளல் நடவடிக்கைகளிலேற்பட்ட விரிவாக்கத்தைப் பிரதிபலித்தது. கொழும்புத் துறைமுகம், 2004 இல்

முன்னெப்பொழுதும் இல்லாத ஆகக்கூடிய வருடாந்த கொள்கலன் தொகுதியான 2.22 மில்லியன் இருபது அடிக்குச் சமமான அலகுகளைக் கையாண்டு 13.3 சதவீத அதிகரிப்பினை பதிவு செய்தது. ஜெயா கொள்கலன் முனைக்கோடி மற்றும் சவுத் ஏசியா கேற்வே ரேமினல் ஆகிய இரண்டிலுமான மேம்பாடடைந்த செயலாற்றம், துறைமுகப் பணிகளிலான இச்செயலாற்றத்துக்கு சமமாகப் பங்களிப்புச் செய்தன. யுனிற்றி கொள்கலன் முனைக்கோடி திறக்கப்பட்டதனைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்தின் கையாளல் கொள்கலன் இயலளவு ஆண்டிற்கு 250,000 இருபது அடிக்குச் சமமான அலகுகளால் அதிகரித்தது. மொத்த சரக்குக் கையாளலில் வெளியீட்டில் வழமையாக மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறும் மாற்றிக் கப்பலேற்றல் அளவு 13.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருக்கையில், உள்நாட்டுக் கொள்கலன் கையாளல் 17 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் இவ்வாண்டில் வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை 1.6 சதவீதத்தால சிறிதளவு வீழ்ச்சியடைந்து பாரிய கப்பல்களுக்கு நகர்ந்து செல்வதனை பிரதிபலிக்கிறது. இதேவேளை, வான் சரக்கு அளவுகள் 26 சதவீதத்தால் விரிவடைந்தன.

பொருளாதாரத்தில் மிகப்பெரிய பணிகள் துறைகளில் ஒன்றாக விளங்கும் போக்குவரத்துத் துணைத்துறை முன்னைய ஆண்டின் 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வதிகரிப்பானது பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தின் இணைந்த செயலாற்றத்தின் விளைவாகும். வீதி வழியான சரக்குப் போக்குவரத்து 3.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, உள்நாட்டு உற்பத்தி மற்றும் பன்னாட்டு வர்த்தகத்திலான அதிகரிப்புடன் இணைந்ததாக பொருட் போக்குவரத்து நடவடிக்கைளில் ஏற்பட்ட மேம்பாடுகளைப் பிரதிபலிக்கின்றது. இலங்கைப் புகையிரதப் பகுதியின் செயலாற்றம் மந்தமடைந்து காணப்பட்டது. பொதுப் போக்குவரத்து வகையில் தனியார் பேரூந்து வகையின் வளர்ச்சிச் செயலாற்றம் சிறிதளவால் மேம்பட்டிருக்கையில் கொத்தணி பேரூந்துக் கம்பனிகளின் செயலாற்றம் வீழ்ச்சியடைந்தது. வான் பயணத் துணைத்துறையில் சிறீலங்கன் எயர் லைன்சினால் பறக்கப்பட்ட மொத்த பயணிகள் கிலோமீற்றர் இவ்வாண்டில் 20 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், உள்நாட்டு வானூர்தி நிறுவனங்களால் பறக்கப்பட்ட பயணிகள் கிலோமிற்றர் வீழ்ச்சியடைந்தது. போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து வடக்குக்குப் பயணிப்பதற்கான அடக்கி வைக்கப்பட்டிருந்த உள்நாட்டுக் கேள்வி படிப்படியாக குறைவடைந்ததன் பின்பு உள்நாட்டு வான் பயணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. இவ்வீழ்ச்சிக்கு, இவ்வாண்டின் பிற்பகுதியில் மூன்று உள்நாட்டு வானூர்தி நிறுவனங்களில் ஒன்று தொழிற்படாமை காரணமாக அமைகின்றது. மோட்டார் வாகனப் பதிவாளரால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, உந்து உருளிகள் மற்றும் இரட்டை நோக்குகளுக்கான ஊர்திகளின்பதிவுகள் வீழ்ச்சியடைந்திருக்கையில், முச்சக்கர வண்டிகள், பேரூந்துகள் மற்றும் உந்து ஈருருளிகளின் பதிவுகள் அதிகரித்தன.

**நிதியியல் பணிகள், உண்மைச் சொத்து மற்றும் வியாபாரப் பணிகள்:** நிதியியல் பணிகள், உண்மைச் சொத்து மற்றும் வியாபாரப் பணிகள் துறையானது வங்கித்தொழில், காப்புறுதியும் ஏனைய சகல நிதியியற் பணிகளும், உண்மைச் சொத்து, குடியிருப்புக்களின் சொத்துரிமை, வாடகைக்கு விடல் மற்றும் முன்னைய வகைப்படுத்தலில் பணிகளில் (வே.எ.கு) உள்ளடக்கப்பட்ட ஏனைய சகல வியாபாரப் பணி நடவடிக்கைகளையும் உள்ளடக்கும் நிதியியற் பணிகள், உண்மைச் சொத்து மற்றும் வியாபாரப் பணிகள் துறை, 2003 இன் 8.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இல் 5.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு கடந்த ஆண்டில் உயர் வளர்ச்சியை பதிவு செய்ததன் பின்னர் வங்கித்தொழில் துணைத்துறை மெதுவாக வளர்ச்சியடைந்ததே முக்கிய காரணமாகும். 2003 இல் வட்டி வீதங்கள் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. இதற்கு நேர்மாறாக, 2004 இல் வட்டி வீதங்கள் மாற்றங்களெதுவுமின்றி தாழ்ந்த வீதங்களில் காணப்பட்டன. இதனால், வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வளர்ச்சி 20 சதவீதமாக அதிகரித்து காணப்பட்ட போதிலும் பிரதான வங்கித் தொழில் செயற்பாடுகளிலிருந்து உழைத்த தேறிய வட்டி வருமானத்தின் வளர்ச்சி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்பட்டது. மேலும், பிணையங்களின் வர்த்தகத்திலிருந்தான இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வட்டியல்லா வருமானமும் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில், காப்புறுதி, குத்தகை மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துணைத் துறைகள், வங்கித் தொழில் துணைத் துறையை விட சிறப்பாகச் செயலாற்றின. நிதியத்தை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகள் மற்றும் கட்டண அடிப்படையிலான பணிகளில் வலுவான வளர்ச்சியை பதிவு செய்த நிதியியல் பணிகள் துறையிலான கூட்டப்பட்ட பெறுமதி வளர்ச்சிக்கு பெருமளவிற்கு பன்முகப்படுத்தப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உதவின. பொது மற்றும் உயிர் காப்புறுதி ஆகிய இரு உற்பத்திகளிலிருந்தான காப்புறுதிக் கட்டுப்பணங்களில் ஏற்பட்ட ஆயுள் வளர்ச்சி, இவ்வளர்ச்சிக்கு மேலும் பங்களிப்புச் செய்தது.

அட்டவணை 2.10
**திரண்ட கேள்வி**

| விடயம் | நடைமுறைச் சந்தைவிலைகளில் (ரூ.மில்லியன்) | | | நிலையான விலைகள்(1996) விலைகள் (ரூ.மில்லியன்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003(அ) | 2004(ஆ) | 2002 | 2003(அ) | 2004(ஆ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 1,353,428 | 1,481,164 | 1,706,823 | 880,725 | 935,238 | 981,236 |
| (% மாற்றம்) | 14.2 | 9.4 | 15.2 | 6.6 | 6.2 | 4.9 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 334,804 | 388,757 | 507,189 | 227,250 | 263,497 | 294,288 |
| (% மாற்றம்) | 8.1 | 16.1 | 30.5 | 5.8 | 16.0 | 11.7 |
| **மொத்த உள்நாட்டுக் கேள்வி** | **1,688,232** | **1,869,921** | **2,214,012** | **1,107,975** | **1,198,735** | **1,275,524** |
| **(% மாற்றம்)** | **13.1** | **10.8** | **18.4** | **6.4** | **8.2** | **6.4** |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 570,833 | 632,907 | 738,687 | 374,115 | 394,284 | 425,160 |
| (% மாற்றம்) | 8.6 | 10.9 | 16.7 | 6.3 | 5.4 | 7.8 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 677,180 | 741,667 | 923,258 | 513,732 | 566,367 | 618,985 |
| (% மாற்றம்) | 10.4 | 9.5 | 24.5 | 11.2 | 10.2 | 9.3 |
| தேறிய வெளிநாட்டுக் கேள்வி | (106,347) | (108,760) | (184,571) | (139,617) | (172,083) | (193,825) |
| **இ. மொத்தக் கேள்வி** | **1,581,885** | **1,761,161** | **2,029,441** | **968,358** | **1,026,652** | **1,081,699** |
| **(% மாற்றம்)** | **12.6** | **11.3** | **15.2** | **4.0** | **6.0** | **5.4** |

(அ) திருத்தப்பட்டுள்ளது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

விளம்பரப்படுத்தல் பணிகள், தனியார் பாதுகாப்புப் பணிகளும் சுகாதாரப் பணிகளும் மற்றும் கணனி மென்கல அபிவிருத்திச் செயற்பாடுகளை உள்ளடக்கிய வியாபாரப் பணி செயற்பாடுகள் துணைத்துறை மிதமான வீதமொன்றில் வளர்ச்சியடைந்தது.

**பொது நிருவாகம், ஏனைய அரசப் பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனிப் பிரத்தியேகமான பணிகள்:** பொது நிருவாகம், ஏனைய அரச பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனிப்பிரத்தியேகமான பணிகள் 2004 இல் 3.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. பொது நிருவாகத்திலான வளர்ச்சியானது குறிப்பாக 2004 இன் நான்காம் காலாண்டில் 42,000 வேலையற்ற பட்டதாரிகளை அரச துறைக்கு சேவைக் கமர்த்தியதால் பெரும்பாலும் ஏற்பட்டது. ஏனைய சமுதாய, சமூக மற்றும் பிரத்தியேக பணிகள் துணைத்துறை, நலக்கவனிப்புப் பணிகள் போன்ற வற்றுக்கான அதிகரித்த கேள்விக்கு இசையும் வகையில் தனியார் நலக்கவனிப்பு தொழில் துறை வலுவாக தொடர்ந்து விரிவடைந்தமையினால், 2003 இன் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.1 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது.

## 2.4 செலவினம்

உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகளினால் உருவாக்கப்படும் திரண்ட கேள்வியானது, பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறைகளின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தின் கூட்டுத்தொகையான மொத்த உள்நாட்டுச் செலவினத்தால் அளவிடப்படுகிறது. 2004 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு திரண்ட கேள்கி ரூ.2,214 பில்லியனென மதிப்பிடப்பட்டது. இது 2003 உடன் ஒப்பிடுகையில் 18.4 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. 2003 இற்கான உள்நாட்டு கேள்வியில் இதனையொத்த அதிகரிப்பு 10.8 சதவீதமாக விளங்கியது. எனினும், மொத்த உள்நாட்டுச் செலவு 2003 இன் 8.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2004 இல் உண்மை நியதிகளில் 6.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது தனியார் துறையின் உண்மை நுகர்வு மற்றும் முதலீட்டில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியினால் ஏற்பட்டதாகும். மொத்த உள்நாட்டுச் செலவினதும் தேறிய இறக்குமதிகளினதும் கூட்டுத்தொகையான, சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.2,029 பில்லியனென மதிப்பிடப்பட்டதுடன் இது 15.2 சதவீதங் கொண்ட அதிகரிப்பாகும்.

### நுகர்வு

நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வுச் செலவினம் ரூ.1,707 பில்லியனென மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 2003 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 15.2 சதவீத அதிகரிப்பாகும். இது சராசரி விலை மட்டத்திலான 9.8 சதவீதங் கொண்ட அதிகரிப்பையும் உண்மை நுகர்விலான 4.9 சதவீதங் கொண்ட அதிகரிப்பையும் பிரதிபலிக்கின்றது. மொத்த நுகர்வில்,

தனியார் நுகர்வுச் செலவினம் 2003 இல் பதிவு செய்யப்பட்ட 10.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14.9 சதவீதத்தால் அதிகரிக்கையில் அரச நுகர்வு 2003 இன் சிறியளவு வீழ்ச்சியைத் தொடர்ந்து 18.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இதனால், மொத்த நுகர்வில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு 2003 இல் பதிவு செய்யப்பட்ட 91 சதவீதத்திலிருந்து 90 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தனியார் நுகர்வுச் செலவினத்தில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மீதான செலவினம் 13.7 சதவீதத்தினால் அதிகரித்திருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணி யல்லாப் பணிகள் மீதான செலவினம் 17.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

1993 இன் தேசிய கணக்குகள் முறைமையை அடிப்படையாகக் கொண்டு, 2002 இலான தனியார் நுகர்வு செலவினத்தின் மீள்ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு இசையும் வகையில், தனியர் நுகர்வுச் செலவினத் திற்கான அடிப்படை ஆண்டிற்கு 2004 இல் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டது. இத் திருத்தமானது மிக அண்மிய வீட்டுத்துறை செலவின அளவீடான நுநிஅ 2003/04 இன் அடிப்படையாக கொண்டமைந்துள்ளது. 1997 இல் மேற்கொள்ளப்பட்ட முன்னைய அடிப்படைத் திருத்தங்களுடன் ஒப்பிடுகையில் 2004 இல் நுகர்வு அமைப்பில் சில வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வாழ்க்கை தரங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளிலான மேம்பாடுகளுடன், உணவு மற்றும் குடிபானங்கள் போன்ற அடிப்படைத்தேவைகள் மீதான தனியர் நுகர்வுச் செலவினத்தின் சார்புரீதியிலான பங்கு ஏனைய பணிகள் துறைகளுக்கு மாற்றமடைந்துள்ளது.

அண்மைய காலங்களில் அவதானிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியிலிருந்து தோன்றிய பொருளாதாரச் நலன்களிலான முன்னேற்றங்களுக்கு அமைவாக தக்கவைத்துக் கொண்டு, 2004 இலும் உணவு மற்றும் வெறியக் குடிவகையல்லாத குடிபானங்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு 32.6 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. இவ்வகை மீதான பெயர ளவுச் செலவினம், உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 9.0 சதவீதத்தால் அதிகரித்ததெனினும் உண்மை நியதிகளில் மேம்பாடெதனையும் காட்டவில்லை. விலை அதிகரிப்புக்களுக்கு மத்தியிலும், வெறியக் குடிவகைகள், புகையிலை மற்றும் போதைப்பொருள் மீதான பெயர ளவுச் செலவினம் வீழ்ச்சியடைந்ததன் மூலம் உண்மை நுகர்வு பெருமளவில் வீழ்ச்சி யடைந்தமையைப் பிர திபலித்தது. பெயரளவுச் செலவினம் வீழ்ச்சியடைந்து தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு வீழ்ச்சியடைந்த ஒரேயொரு ஏனைய துறையாக போக்குவரத்து விளங்கியது. கடந்த ஆண்டில் ஆகக்கூடிய வளர்ச்சியான 48 சதவீதத்தினைப் பதிவு செய்த போக்குவரத்து மீதான தனியார் நுகர்வுச் செலவினம், 2004 இல் ஏறக்குறைய

அட்டவணை 2.11

**நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு**

| வகை | தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு % | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2002 | 2003(அ) | 2004(ஆ) (இ) | 2003 | 2004 |
| 1. உணவு, வெறியமல்லாக் குடிவகை | 37.4 | 34.3 | 32.6 | 1.6 | 9.0 |
| 2. வெறியக் குடிவகையும் புகையிலை மற்றும் போதைப்பொருள் | 5.3 | 5.1 | 4.4 | 6.1 | (1.6) |
| 3. புடவையும் காலணியும் | 5.8 | 5.6 | 6.0 | 5.7 | 24.6 |
| 4. வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் பணிகள் | 14.3 | 14.1 | 16.1 | 9.3 | 31.7 |
| 5. வீட்டுச் சாதனங்களும் திருத்தங்களும் | 4.7 | 4.4 | 5.0 | 4.6 | 30.2 |
| 6. நலம் | 3.6 | 3.6 | 3.7 | 10.0 | 19.1 |
| 7. போக்குவரத்து | 10.5 | 14.0 | 12.1 | 47.9 | (0.9) |
| 8. தொலைத் தொடர்பூட்டல் | 1.8 | 2.2 | 2.4 | 33.1 | 22.4 |
| 9. களியாட்டமும் பொழுதுபோக்கும் | 3.2 | 3.0 | 3.5 | 2.5 | 33.7 |
| 10. கல்வி | 1.3 | 1.2 | 1.6 | 6.0 | 49.0 |
| 11. உணவகங்களும் விடுதியும் | 1.3 | 1.2 | 1.4 | 4.4 | 28.5 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் (ஈ) | 10.9 | 11.2 | 11.3 | 14.1 | 15.4 |
| மொத்தத் தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 10.5 | 14.9 |

(அ) மதிப்பிடப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.
(இ) நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீடு 2003/ 2004 இனை அடிப்படையாகக் கொண்டது.
(ஈ) தனியாள் கவனிப்பு, தனியாள் பொருட்கள், சமூகப் பாதுகாப்பு, காப்புறுதி நிதியியல் பணிகள் மற்றும் வே.எ.கு மற்றைய பணிகள் உட்பட.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## இலங்கையில் மாற்றமடைந்துவரும் வாழ்க்கை முறைகள்

### 1. அறிமுகம்

இலங்கை மத்திய வங்கியால் எட்டாவது நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு (நுநிசஅ 2003/ 04), வடமாகாணத்தில் உள்ள கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிர்ந்த முழு நாட்டையும் உள்ளடக்கி, ஒத்தோபர் 2003 இலிருந்து ஒத்தோபர் 2004 வரை நடாத்தப்பட்டது[1]. இவ்அளவீட்டின் பாரிய சாதனை யாதெனில் 20 ஆண்டுகளின் பின் இவ்அளவீடு வடக்கு மற்றும் கிழக்கின் பெரும்பகுதியை உள்ளடக்கியிருந்தமையாகும். 1953 இல் ஆரம்பமன பன்நோக்குள்ள குடியிருப்பாளர் அளவீட்டுத் தொடர்கள், நாட்டின் முக்கிய சமூக பொருளாதார அபிவிருத்திகள் மீதான தொடர்ச்சியான தகவல் தொடர்களை வழங்குகின்றது. இவ்அளவீட்டில் கண்டறியப்பட்டவைகள், 1996/ 97 இல் நடாத்தப்பட்ட முன்னைய அளவீட்டின் பின்னர் நாட்டில் மாற்றமடைந்துவரும் வாழ்க்கை முறைகளுக்கு சான்றளிக்கின்றது.

### 2. கண்டறிதல்கள்[2]

➢ **குடும்ப அலகொன்றில் உள்ள ஆட்கள் மற்றும் தங்கியிருப்போரின் சராசரி எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகிறது.**

கடந்த 40 ஆண்டுகளில், அனைத்து மூன்று துறைகளிலும் குடும்ப அலகின் அளவு கிட்டத்தட்ட 6 ஆட்களிலிருந்து 4-5 ஆட்களுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இக்காலப்பகுதியில் குடும்ப அலகொன்றினை வருமானம் பெறுவோர்களின் எண்ணிக்கை பொதுவாக அதிகரித்திருக்கையில், நகர மற்றும் கிராமியத் துறைகளில் அதிகரித்தும் பெருந்தோட்டத் துறையில் வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன. பொதுவாக குடும்ப அலகொன்றில் வருமானம் பெறுமொருவரில் தங்கியிருப்பவர்களில் விகிதமும் வீழ்ச்சியடைந்தது. குடித்தொகை மூப்படைவதால் குறைந்த வயதுடைய தங்கியிருப்போரை கூடிய வயதுடைய தங்கியிருப்போர் குறிப்பிடத்தக்களவு மெதுவான வீதத்தில் பிரதியீடு செய்தனர். குடும்ப அலகு குடித்தொகையிலான பால் விகிதம் (பெண் ஒருவருக்கு ஆண்கள்) மெதுவான ஆனால் உறுதியான வீழ்ச்சியைக் காட்டியது.

➢ **வீடமைப்பின் தரம் மற்றும் வீடுகளுக்கான பணிகள் மற்றும் பொதுவசதிகளை அடையும் வாய்ப்பு என்பன முன்னேறி வருகின்றன.**

வீடமைப்பு மேம்பாடடைந்ததுடன் 80 சதவீதத்துக்கும் மேற்பட்டவை நிரந்தர மதில்கள், தரைகள் மற்றும் கூரைகளைக் கொண்டிருந்தன. அத்துடன் குடியலகுகள் மின்வலுவைப் (75%), சுத்தமான நீர் (62%) மற்றும் சுகாதாரமான, மலசலகூட வசதிகள் (77%) என்பனவற்றுடனான வீட்டு அலகுகளும் அதிகரித்தன. எனினும், சமையலுக்கான வலுவின் முக்கிய மூலமாக விறகு (83%) தொடர்ந்தும் விளங்கியது. மேம்பாடுகளுக்கு மத்தியிலும், பெருந்தோட்டத்துறையில் வீடமைப்பு நிலைமைகள் தொடர்ந்தும் மோசமாகக் காணப்பட்டன. மின்வலுவைப் பெறும் வாய்ப்பு ஊவா மாகாணத்தில் மிகக் குறைவாகக் (57%) காணப்படுகையில் சுத்தமான நீர் மற்றும் சுகாதாரப் பணிகளை பெறும் வாய்ப்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோசமாகக் காணப்பட்டது.

குடும்ப அலகுகளின் 70% இற்கும் மேலானவை வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பவற்றை கொண்டிருக்கையில் 30% குளிரூட்டிகளைக் கொண்டிருந்தன. மோட்டார் போக்குவரத்து மற்றும் தொலைபேசி வசதிகள் கிடைக்கும் வாய்ப்பு 15% மற்றும் 5% இலிருந்து முறையே 22% மற்றும் 25% இற்கு அதிகரித்தன. இதிலும், காலப்போக்கிலான முன்னேற்றங்களுக்கு மத்தியிலும் பெருந்தோட்டத்துறை பின்தங்கியே காணப்பட்டது. வீடமைப்பு நிலைமைகள் மற்றும் பணிகளையும் பொதுவசதிகளையும் அடையும் வாய்ப்புக்கள் வருமான மட்டங்களுடன் வியக்கத்தகு வகையில் மேம்பாடடைந்ததுடன் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மேல்மாகாணத்தில் குறிப்பிடத்தக்களவில் சிறந்து விளங்கின.

➢ **கல்வியைப் பெறும் வாய்ப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எனினும் முறைசார் கல்வி முறைமையில் நலிவடைந்து செல்லும் நம்பகத்தன்மை சகல மட்டங்களிலுள்ள மாணவர்களை தனியார் பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்லச் வழிவகுத்துள்ளது.**

படிப்பறிவு வீதம் 90% இற்கும் மேலாகக் காணப்பட்டது. வயது மூப்படைந்த குடித்தொகையினுள் (25 வயதும்

---

1. 2001 இன் குடித்தொகை கணக்கெடுப்பு பாதுகாப்பு நிலைமை காரணமாக கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால், இம்மாவட்டங்களுக்கான மாதிரியைத் தெரிவுசெய்வதற்கு குடும்ப அலகு வரையமைப்பு இல்லாமையால் நுநிசஅ இம் மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கவில்லை. இது நாட்டிலுள்ள மதிப்பிடப்பட்ட 4.8 மில்லியன் வீட்டு அலகுகளில் 2 சதவீதத்தை மட்டுமே உள்ளடக்கவில்லை.
2. இங்கு அறிக்கையிடப்பட்ட கண்டறியப்பட்டவைகளுக்கு சான்றளிக்கும் புள்ளி விபரங்கள் புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணைகள் 9 இலும் 10 இலும் தரப்பட்டுள்ளன.

**சிறப்புக் குறிப்பு 6 (தொடர்ச்சி)**

அதற்கு மேற்பட்டதும்) வயது கூடக்கூட படிப்பறிவு வீதம் வீழ்ச்சியடைந்ததுடன், இது ஆண்களை விட பெண்களின் சகல வயதுத் தொகுதிகளிலும் மிகக் குறைவாகவே காணப்பட்டது. படிப்பறிவு வீதம் நகரத் துறையில் மிகக் கூடுதலாகவும், பெருந்தோட்டத் துறையில் மிகக் குறைவாகவும், மத்திய, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலுள்ள பெண்களுக்கானது சார்பு ரீதியில் குறைவாகவும் காணப்பட்டது. துறைகளிடையேயும் பாலினிடையேயும் இளைஞர்கள் மற்றும் இளம் வயதினருள் (5-25) வயது காணப்பட்ட உயர்ந்த மற்றும் கூடியளவு சமமான வீதங்கள் பல காலமாக இருந்துவந்த சமமான கல்வி வாய்ப்புக்களை சிறப்பாக எடுத்துக்காட்டின.

குடித்தொகையில் கல்வியைப் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இறுதி அளவீட்டின் பின்னர், இரண்டாந்தரக் கல்வியிலான குறிப்பிடத்தக்க மேம்பாட்டுடன் முதனிலை பாடசாலை மட்டத்தில் அல்லது அதற்குக் குறைவான மட்டத்தில் கல்வியிலான கற்போரின் பங்கு வீழ்ச்சியடைந்தது (44% இலிருந்து 38% இற்கு). இரண்டாம் நிலைக் கல்விக்குப் பின் தொடர்ந்து கற்போர் 21%மாக காணப்பட்டனர். பெண்களிடையேயான கல்வி மட்டங்கள் மேம்பாடடைந்தன. எனினும், கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களில் பாடசாலை செல்லாத பெண்களின் பங்கு 14-17% இல் மாற்றமின்றிக் காணப்பட்டது.

பாடசாலைக்குச்செல்லும் மாணவர்களிடையே, கடந்த அளவீட்டின் 35% உடன் ஒப்பிடுகையில் 50% தனியார் பிரத்தயேக வகுப்புக்களுக்குச் சென்றனர். பிரத்தியேக வகுப்பிற்கு செல்வது கல்வி மட்டத்துடன் இணைந்து முதனிலை வகுப்புக்களிலான 40% இலிருந்து இரண்டாம் நிலை வகுப்புக்களின் பின் 70% இற்கு அதிகரித்தது.

- **தொழிலின்மை படித்த இளைஞர்களிடையே ஒரு முக்கிய பிரச்சனையாகக் காணப்படுவதுடன் இது ஆண்களை விட பெண்களிடையே பெரும் பிரச்சனையாக காணப்படுகிறது. தொழிலற்றோரில் பெரும்பாலானோர் எழுதுவினைஞர் வேலைகளை விரும்புகையில், ஆகக் குறைந்த முன்னுரிமை வேளாண்மை மற்றும் மீன்பிடியிலுள்ள வேலைகளுக்கு காணப்பட்டது.**

தொழிற்படை பங்கேற்பு வீதம் அதே அளவில் மாறாது காணப்பட்டதுடன், ஆண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதம் பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதத்தை விட இரண்டு மடங்குகளாக காணப்பட்டதுடன் இவ்விகிதம் வயதுப் பிரிவுகளின் அதிகரிப்புடன் அதிகரித்துச் செல்கிறது. குறைவான தொழிற்படை பங்கேற்பு வீதத்திற்கு மத்தியிலும், பெண்களிடையேயான தொழிலின்மை வீதம் ஆண்களிடையேயான தொழிலின்மை வீதத்தினை விட இருமடங்கு அதிகமானதாகும். இது சகல வயது வகைகளிடையே வேறுபட்ட அளவில் அதிகரித்துக் காணப்பட்டது. தொழிலற்றோர் குழுவில், இப்பங்கானது உயர்ந்த வருமான குடும்ப அலகுகளில் கூடிய கல்வி கற்ற இளம் வயதினருள் விசேடமாக பெண்களின் பெரும்பங்குடன் உயர்வாகக் காணப்பட்டது. தொழிலற்றோரிடையே 22% எழுதுவினைஞர் வேலைகளை எதிர்பார்த்தனர். வேளாண்மை மற்றும் மீன்பிடியிலுள்ள வேலைகளுக்கு கிட்டத்தட்ட 1% சதவீதமானோர் மட்டுமே விருப்பினை வெளிக்காட்டினர்.

தொழில்நிலை கட்டமைப்பில் வேளாண்மைத் துறை 33% இனை, கைத்தொழில் 25% இனையும், பணிகள் துறை எஞ்சிய 42% இனையும் பதிவு செய்தன. நாட்டில் ஏற்படும் பொதுவான பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்து செல்லும் வகையில் பல காலமாக வேளாண்மையிலிருந்து கைத்தொழிலுக்கும் குறிப்பாக பணிகளுக்கும் நகர்ந்து செல்வது தொடர்ந்து இடம் பெற்றது. ஓய்வடைந்த பின்பு முறையான சமூக பாதுகாப்பு நன்மைகள் எதையும் வழங்காத முறைசாராத் துறையில் கிட்டத்தட்ட 70% மானோர் தொழில் புரிந்தனர். இதில் கூலி வருமானம் பெறுவோர் 57% இற்கு வகைகூறுகையில், சுயதொழில் புரிவோர், தொழில் வழங்குவோர், மற்றும் கூலி செலுத்தப்படாத குடும்பத் தொழிலாளர்கள் போன்ற கூலி பெறாதோர் எஞ்சியவற்றிற்கு வகை கூறினர். தொழில் நிலையிலான கூலியற்ற தொழிலாளர்களின் பங்கு வேளாண்மையில் அதிகூடியதாக விளங்கியது.

- **வருமானத்தின் சகல பஞ்ச பிரிவுகளிலும் மற்றும் துறைகளிலும் குடும்ப அலகுகளின் வருமானம் அதிகரித்துள்ளது. இதுவரை, பொதுவான கட்டமைப்பு மாற்றமுறாது தொடர்ந்து இருந்தபோதிலும், வருமானப் பகிர்ந்தளிப்பு ஆகக் கூடிய செல்வந்தர்களை நோக்கி மேலும் அதிகரித்துள்ளது.**

உண்மை நியதிகளில் (இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் சுருக்கப்பட்ட) குடும்ப அலகு வருமானம் வருடாந்தம் 2.4 சதவீதத்தால் அதிகரித்தது. உண்மை மாற்றம் ஒவ்வொரு

**சிறப்புக் குறிப்பு 6 (தொடர்ச்சி)**

வருமானப் பிரிவுகளிலும் 3% இலிருந்து 26% வரை அதிகரித்தன. வருமானப் பகிர்ந்தளிப்பு குறிப்பிடத் தக்களவில் மாற்றமடையவில்லை. கினி குணாகம் (0.46) 1996/97 அளவீட்டிலிருந்து சிறிதளவால் அதிகரித்த துடன், இது 1986/87 இன் அளவிலேயே காணப்பட்டது. தலைக்குரிய வருமானம் ஊவா மாகாணத்தில் (ரூ.2,570) மிகக் குறைவாகவும், அதற்கடுத்ததாக சபரகமுவ மாகாணமும் (ரூ.2,894) கிழக்கு மாகாணமும் (ரூ. 2,905) காணப்பட்டன. இது மேல் மாகாணத்தில் (ரூ.5,999) நாட்டின் சராசரியை (ரூ.3,969) விட கணிசமானளவு உயர்வாக இருந்தது.

வருமானக் கட்டமைப்பு கடந்த அளவீட்டிலிருந்து மிகச் சிறியளவிலேயே மாற்றமடைந்திருந்தது. தொழில் மூலம் பெறும் வருமானம் 64% இற்கு வகை கூறுகையில் கணிக்கப்பட்ட வாடகை பெறுமதி (9%), உள்நாட்டிலிருந்தும் (6%) வெளிநாட்டிலிருந்தும் (6%) நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து வரும் வருமான மாற்றல் என்பன சார்புரீதியில் உயர் பங்குகளுக்கு வகைகூறின. பெருந்தோட்டத் துறையில், கடந்த அளவீட்டின் பின்னர் தொழில் மூலம் பெறும் வருமானத்தின் சார்பு ரீதியிலான பங்கு 84% இலிருந்து 77% இற்கு வீழ்ச்சியடைந்ததுடன், இது உள்நாட்டு வருமான மாற்றலால் பிரதியீடு செய்யப்பட்டது. வருமான அமைப்பு வருமான மட்டங்களுடன் வேறுபட்டது. தொழில் மூலம் பெறும் வருமானத்தின் பங்கு ஆகக் குறைந்த வருமானப் பிரிவிலிருந்து ஆகக் கூடிய வருமான பிரிவுக்கு 73% இலிருந்து 62% இற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில், கணிக்கப்பட்ட வாடகை, வெளிநாட்டிலிருந்தான மாற்றல்கள் மற்றும் முதலீட்டு வருமானம் என்பனவற்றின் பங்கு அதிகரித்தன. ஓய்வூதியங்கள் மற்றும் உள்நாட்டு தனியார் மாற்றல்களின் பங்குகள் மத்திய வருமான மட்டங்கள் வரை அதிகரித்து பின்பு வீழ்ச்சியடைந்தன. ஓய்வூதியங்கள் தவிர்ந்த அரச மாற்றல்களின் பங்கு வருமான மட்டங்களுடன் வீழ்ச்சியடைந்த போதிலும் இது, வருமானத்தின் அதிகூடிய வருமானப் பிரிவு வரை அரச மாற்றல்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

- **வருமான மட்டங்களின் அதிகரிப்புடன், நுகர்வானது உணவிலிருந்து தொடர்பூட்டல், கல்வி, களியாட்டம், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகளுக்கு நகர்ந்துள்ளது.**

இரண்டு அளவீட்டு காலப்பகுதிகளிடையே, உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் 48% இலிருந்து 38% இற்கு வீழ்ச்சியடைந்ததுடன், இது உணவு அல்லாத பல வகைகளின் செலவினத்தினால் பிரதியீடு செய்யப்பட்டது. உண்மையில், உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் உண்மை நியதிகளில் வீழ்ச்சியடைந்துள்ளது. தாழ்ந்த தளத்தினைக் கொண்டிருந்த போதிலும் ஆகக்கூடிய வருடாந்த சராசரி உண்மை அதிகரிப்புக்களை தொடர்பூட்டல் (21%) மற்றும் கல்வி (11%), என்பனவும் அவற்றைத் தொடர்ந்து களியாட்டம் மற்றும் கலாச் சாரம் (10%), தளபாடங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பேணல் (6.5%), வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் (6%) என்பனவும் பதிவு செய்தன. குடும்ப அலகுகளின் செலவினம் உண்மை நியதிகளில் வருடாந்தம் 2.5% ஆல் அதிகரித்துள்ளது.

துறைகளினுள், வேறுபட்ட மட்டங்களில் மாற்றங்களின் போக்கு பொதுவான மாற்றங்களுக்கு ஒத்ததாக விளங்கியதுடன், பெருந்தோட்டத் துறையின் உணவு மற்றும் உடை போன்ற அடிப்படைத் தேவை களுக்கான செலவினத்தின் பங்கு சார்பு ரீதியில் உயர்வாகக் காணப்பட்டது.

உணவு மற்றும் வெறியக் குடிவகைகள் மீதான செலவின் பங்குகள் வருமானம் உயர்வுடன் வீழ்ச்சியடைந்திருக்கையில், சார்பு ரீதியில் தொடர்ந்து உறுதியாக விளங்கிய புடவையும், வீட்டுப் பாவனைப் பொருட்களின் மற்றும் பேணல் தவிர்ந்த பெரும்பாலான ஏனைய வகைகளின் பங்கு அதிகரித்தது. கல்வி மீதான செலவினப் பங்கு 3% இற்கும் மேலாக அதிகரித்த ஆகக்கூடிய பஞ்ச பகுதிவரை 2% அளவில் தொடர்ந்து உறுதியாக விளங்கியது.

முக்கிய உணவுப் பொருட்களின் நுகர்வு குறிப் பிடத்தக்களவில் மாற்றமடையவில்லை. அரிசி மற்றும் தேங்காயின் தலைக்குரிய நுகர்வு அதே அளவிலேயே தொடர்ந்திருக்கையில், கோதுமை மா ,பாண் மற்றும் சீனியின் நுகர்வு வீழ்ச்சியடைந்தது. தலைக்குரிய பாண் நுகர்வில் ஏற்பட்ட வீழ்ச்சி மிகவும் குறிப் பிடத்தக்கதாகவும் சகல துறைகளிலும் காணப்பட்டது. தலைக்குரிய நியதிகளில் மீன், இறைச்சி மற்றும் காய்கறிகளின் நுகர்வு சிறிதளவால் அதிகரித் திருக்கையில் குடிவகை மற்றும் சிகரெட்டுக்களின் நுகர்வு வீழ்ச்சியடைந்தது.

- **முக்கியமாக நுகர்வுச் செலவினத்தை நிதியிடு வதற்கே குடும்ப அலகுகள் கடன்பெற்றன. முறை சார்ந்த நிதியியல் துறை நிறுவனங்களின் விரிவாக்கமானது, குடும்ப அலகுகள் அவற்றின் கடன்பட்டியலை பல்லினப்படுத்த உதவியது. இதேவேளை, கடன் வழங்குனர்களின் பங்கு வீழ்ச்சியடைகிறது.**

**சிறப்புக் குறிப்பு 6 (தொடர்ச்சி)**

அதிகூடிய எண்ணிக்கையான கடன்கள் (58%) தொடர்ந்தும் நுகர்வுக்காகவே பெறப்பட்டன. எனினும், தொகை நியதிகளில் அதிகூடிய பங்குகள் வியாபாரம் மற்றும் வர்த்தகம் (27%) மற்றும் வீடமைப்புக் (21%) என்பனவற்றுக்கானதாக இருக்கையில், வைபவங்கள் உள்ளிட்ட நுகர்வுக் கடன்கள் 20% இற்கு வகைகூறின. எனினும், 1996/97 இலிருந்து 2003/04 வரை கடன்களின் பொதுவான அமைப்பில் தெளிவான நகர்வு எதுவும் இருக்கவில்லை.

முறைசார் துறையிலுள்ள கடன் வழங்கும் நிறுவனங்கள் மொத்தக் கடன்வழங்கலில், 61 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தன. நிறுவன (43%) மற்றும் நிறுவனம் அல்லாத (57%) மூலங்களிலிருந்து எடுக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் எதுவித நகர்வும் இருக்கவில்லை. எனினும், வர்த்தக வங்கிகளிடமிருந்து எடுக்கப்பட்ட தொகைகள் வீழ்ச்சியடைந்ததுடன் (51% இலிருந்து 34%), இவை ஏனைய நிதி நிறுவனங்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களால் பிரதியீடு செய்யப்பட்டன.

### 3. முடிவுரை

அளவீட்டின் பெறுபேறுகள், பிராந்திய பொருளாதார வேறுபாடுகள் மீதான ஏனைய கண்டறிதல்களை பூர்த்தி செய்கின்றன. மேல்மாகாணம் நாட்டின் பொதுவான பொருளாதாரச் செயற்பாடு மற்றும் அபிவிருத்திக்கான அதன் பங்களிப்புடன் இணைந்த சிறந்த கல்வி, தொழில்நிலை மற்றும் வருமானம் ஈட்டும் வாய்ப்புக்கள் என்பன காரணமாகின. ஏனைய மாகாணங்களைவிட கூடிய வாழ்க்கைத் தரங்களை பிரதிபலித்தது. மறுபுறம், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்கள் மட்டுப்படுத்தப் பட்ட பொருளாதாரச் செயற்பாடு மற்றும் வாய்ப்புடன் பெரும்பாலான சமூக பொருளாதார குறிகாட்டிகளில் பின்தங்கி காணப்பட்டன. ஏனைய 6 மாகாணங்களும் ஒன்றுக்கொன்று முழுமையாக வேறுபட்ட இவ்விரு முனைகளுக்கிடையே காணப்பட்டன. வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் குடிப்பரம்பல் அமைப்பு மற்றும் வாழ்க்கை நிலைமைகள் என்பன 20 ஆண்டு கால உள்நாட்டுக் குழப்பத்தின் பாதகமான தாக்கத்தைப் பிரதிபலித்தன. நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்டத் துறை ஆகிய மூன்று துறை களிடையேயான வரலாற்று ரீதியாக தொடர்ச்சியாக இருந்துவரும் வேறுபாடுகள் இப்பிராந்திய வேறுபாடுகளில் பிரதிபலிக்கப்பட்டன. நுநிசஅ 2003/04 இன் பெறுபேறுகள், அண்மைய ஆண்டுகளில் அடுத்தடுத்து பதவிக்குவந்த அரசுகளின் கொள்கை வகுப்பாளர்களால் முக்கியமாக எடுத்துக்காட்டப்படும் இப்பிராந்திய வேறுபாடுகளை களைவதற்கான தேவை மற்றும் நாட்டின் அனைத்து பாகங்களிலிருக்கும் குடிமக்களுக்கு பொருளாதார விருப்பத் தேர்வுகளை வழங்கக்கூடிய வருமானத்தை உருவாக்கும் வாய்ப்புக்களை உருவாக்கல் என்பவற்றை மீண்டும் வலியுறுத்துகிறது.

ஒரு சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன், அதன் சார்பு ரீதியிலான பங்கு ஏறக்குறைய 2 சதவீதப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்திருந்தது. இவ்வாண்டின் பிற்பகுதியில் விதிக்கப்பட்ட உயர் இறக்குமதித் தீர்வைகள் மற்றும் இதனைத் தொடர்ந்து ஊர்திகளின் விலைகள் அதிகரித்தமை என்பன இவ்வகையில் மிகப்பெரிய தனி விடயமாக விளங்கும் ஊர்திக் கொள்வனவுகள் மீதான நுகர்வோர் செலவினத்தைக் கட்டுப்படுத்தின. பெயரளவு நியதிகளில், ஏனைய சகல வகைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 15 இற்கும், 49 சதவீதத் திற்குமிடையே மாறுபடும் வீதங்களில் அதிகரித்ததுடன், தனியார் நுகர்வுச் செலவினத்தில் அவற்றின் பங்குகளை அதிகரித்து 2004 இலான உண்மை பொருளாதார வளர்ச்சி மற்றும் உயர்விலை மட்டங்கள் என்பவற்றை பிரதிபலித்தன. சகல செலவின வகைகளினுள் ஆகக்கூடிய வளர்ச்சி வீதம் கல்வியினால் பதிவு செய்யப்பட்டது. இவ்வளர்ச்சிக்குப் பின்பும் 2 சதவீதத் திற்கும் குறைவான மிகச் சிறிய பங்கையே கல்விச் செலவினம் கொண்டுள்ளது. இவ்வளர்ச்சியானது நுநிச 2003/04 அளவீட்டின் கண்டறிதல்களினால் காணப்பட்டவாறு அனைத்து கல்வி மட்டங்களிலுமான தனியார் பிரத்தியேகக் கல்வி மீதான அதிகரித்த செலவு மற்றும் அண்மைய ஆண்டுகளில் தனியார் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை விரிவடைந்தமை என்பவற்றை பிரதிபலிக்கின்றது. பொழுதுபோக்கும் களியாட்டமும், வீடமைப்பு மற்றும் பொது வசதிப் பணிகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பணிகள், உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் வகைகள் பெயரளவு நியதிகளில் 28 இற்கும், 34 சதவீதத்திற்குமிடையே வளர்ச்சியடைந்தன. வீடமைப்பு மற்றும் பொது வசதிப் பணிகள் மீதான தொடர்பான பங்கு, வீடுகளின் திருத்தங்கள், வாடகைகள், மின்வலு மற்றும் நீர் மீதான அதிகரித்த செலவிடல் காரணமாக 2004 இல் 2 சதவீதப் புள்ளிகளால் 16 சதவீதத்திற்கு

அதிகரித்தது. தொடர்பூட்டல் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2003 இனை விட குறைந்த வீதத்தில் அதிகரித்து, கடந்த சில ஆண்டுகளில் மிக விரைவாக வளர்ச்சியடைந்த தொடர்பூட்டல் சந்தையிலான குறிப்பாக தொலைத்தொடர்பூட்டல் துறையிலான வளர்ச்சியிலேற்பட்ட படிப்படியான வீழ்ச்சியை எடுத்துக் காட்டக்கூடும். நலம் மீதான தனியார் நுகர்வுச் செலவானது அவ்வாறான பணிகளிலான முன்னைய பகுதிகளில் குறிப்பிட்ட விரிவாக்கத்திற்கு அமைவாக அதிகரித்திருந்தது.

சம்பளங்கள் மற்றும் கூலிகள் அதே போன்று பொருட்கள் மற்றும் பணிகள் மீதான அதிகரித்த செலவினம் காரணமாக 2004 இல் அரச நுகர்வுச் செலவினம், 18.3 சதவீதத்தால் அதிகரித்தது. ஆண்டும் தொடக்கத்திலான சம்பள அதிகரிப்பு, ஊதியங்கள் மீதான உயர் செலவுகளைப் பிரதிபலித்திருந்த வேளையில் ஆண்டின் இறுதியளவில் அரசின் பட்டதாரி வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச துறைக்கு 42,000 பட்டதாரிகளைச் சேர்த்துக் கொண்டமையும் இதற்குப் பங்களிப்புச் செய்தது.

## முதலீடு

2004 இல் நுகர்வை விடவும் அதிகரித்துக் காணப்பட்ட முதலீடு, பொருளாதார வளர்ச்சிக்கான தூண்டுதலை அளித்தது. நடைமுறைச் சந்தை விலைகளிலான முதலீட்டுச் செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) ரூ.507 பில்லியனென மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 2003 இனை விட 30.5 சதவீதங் கொண்ட அதிகரிப்பாகும். உண்மை நியதிகளில், முதலீட்டுச் செலவினம் 11.7 சதவீதம் அதிகரித்திருக்கையில், 2003 இல் தொடர்பான வளர்ச்சி 16 சதவீதமாகும். முதலீடு/மொ.உ.உ விகிதம் 2003 இன் 22.1 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு மேலும் மேம்பாடடைந்தது. அளவு நியதிகளில், முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளிலேற்பட்ட 18.4 சதவீத அதிகரிப்பானது, முதலீட்டுக் கேள்வி நுகர்வுக் கேள்வியை விட சிறப்பாகச் செயலாற்றி 2004 இன் வளர்ச்சிக்கு தூண்டுதலை வழங்கியதனை தெளிவாக எடுத்துக் காட்டி யது. முதலீட்டுச் செலவினத்திலான மீட்சியானது, மொத்த முதலீட்டில் 91 சதவீதத்திற்கு வகை கூறிய 2004 இல் 32.7 சதவீதத்தால் விரிவடைந்த தனியார் முதலீட்டுச் செலவினத்துடன் தனியார் துறையினால் வழிப்படுத்தப் பட்டதாகும். தனியார் துறை முதலீடு/மொ.உ.உ விகிதம் 2003 இன் 19.8 சதவீதத்திலிருந்து 2004 இல் 22.7 சதவீதத்திற்கு தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. பாரிய முதலீடுகள், தைத்த ஆடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும், 2005 இல் பல்புடை நூழிலை உடன்படிக்கை கட்டம் கட்டமாக அகற்றப்படுவதனால் ஏற்படும் சவால்களுக்கு தயார்படுத்துவதற்குமென இக்கைத்தொழிலில் மேற் கொள்ளப்பட்டன. போர்நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்பு சுற்றுலா வருகைகளிலேற்பட்ட மீட்சி,

அட்டவணை 2.12

**இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு என்பவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழில் நிலை எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2003(அ) | 2004 (ஆ) | 2003(அ) | | | 2004 (ஆ) | | | 2003 (அ) | 2004(ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| **முதலீட்டுச்சபை** | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 601 | 524 | 81,135 | 67,750 | 148,885 | 87,527 | 53,151 | 140,678 | 69,396 | 49,141 |
| பிரிவு 17இன் கீழ் | 419 | 294 | 77,689 | 66,861 | 144,550 | 69,604 | 52,261 | 121,865 | 64,521 | 41,012 |
| பிரிவு 16இன் கீழ் | 182 | 230 | 3,446 | 889 | 4,335 | 17,923 | 890 | 18,813 | 4,875 | 8,129 |
| பிரிவு 17இன்கீழ் பெறப்பட்ட முதலீடுகள் | 216 | 228 | 44,291 | 49,346 | 93,637 | 36,536 | 31,037 | 67,573 | 41,320 | 34,860 |
| வர்த்தகத் தொழிற்பாடுகள்(இ) | 1,766 | 1,867 | 186,782 | 90,699 | 277,481 | 208,696 | 110,770 | 319,466 | 431,050 | 437,698 |
| பிரிவு 17இன் கீழ்(இ) | 2,137 | 2,194 | 150,011 | 129,534 | 279,545 | 157,007 | 137,988 | 294,995 | 368,867 | 380,519 |
| பிரிவு 16இன் கீழ்(இ) | 1,516 | 1,556 | 136,251 | 119,771 | 256,022 | 143,042 | 128,216 | 271,258 | 336,959 | 348,300 |
| **கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு** | 621 | 638 | 13,760 | 9,763 | 23,523 | 13,965 | 9,772 | 23,737 | 31,908 | 32,219 |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 1,588 | 1,604 | வி.கி. | வி.கி. | 113,977 | வி.கி. | வி.கி. | 115,498 | 278,397 | 279,012 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை


மூலங்கள்: இலங்கை முதலீட்டுச்சபை
கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

பொழுதுபோக்கு கைத்தொழிலான அதிகரித்த முதலீட்டுக்குக் காரணமாக இருந்தது. இங்கு பல சுற்றுலா விடுதிகள் புத்தாக்கம் செய்யப்பட்டு, விரிவாக்கப்பட்டோ அல்லது தரமுயர்த்தப்பட்டதுடன் கூடிய தொகையை செலவழிக்கும் சுற்றுலாப் பிரயாணிகளை கொண்ட சிறப்பு சந்தைக்கு பணியாற்றுவதற்கென புதிய பல சிறியளவிலான சிறப்புச் சுற்றுலா விடுதிகள் 2004 இல் திறக்கப்பட்டன. தொலைத்தொடர்பூட்டல், போக்குவரத்து, தகவற் தொழில்நுட்பம், அச்சடித்தல் மற்றும் கட்டடவாக்கக் கைத்தொழில்களும் 2004 இல் புதிய முதலீடுகளை ஈர்த்துக் கொண்டன.

2004 இல் இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் நியதிகளில் 13 சதவீதத்தால் அதிகரித்தன. அரசின் பிரதான முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமான முதலீட்டுச்சபை, ரூ.140.7 பில்லியன் கொண்ட முதலீட்டுக் கடப்பாட்டுடன் முதலீட்டுச்சபை சட்டத்தின் பிரிவுகள் 16 மற்றும் 17[2] இன் கீழ் 524 செயற்றிட்டங்களுக்கும் ஒப்புதலளித்தது. இம் முதலீட்டு கடப்பாடானது பிரிவு 17 இன் கீழான செயற்றிட்டங்களினது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கூறுகளில் ஏற்பட்ட குறைப்பின் முழுமைக் காரணத்தால் 2003 உடன் ஒப்பிடுகையில் 5.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2004 இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 228 இற்கு சிறிதளவால் அதிகரித்தபோதிலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு கூறுகளிலான வீழ்ச்சி காரணமாக ஒப்பந்தச் செய்யப்பட்ட முதலீட்டின் பெறுமதி, 28 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய நிச்சய மற்ற அரசியல் தன்மை காரணமாக இக்காலப்பகுதியில் முதலீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் முதலீட்டுச் சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட பெரும் கடுமையான தேர்வு செய்தல் செயற்பாடுகளாலும் பகுதியளவில் ஏற்பட்டது. முன்னைய ஆண்டில் கைச்சாத்திடப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட உடன்படிக்கைகளிலான முதலீட்டின் பெறுகையுடன் முதலீட்டுச்சபைச் செயற்றிட்டங்களால் பெறப்பட்ட முதலீடுகளின் மொத்த பெறுமதி 2004 இல் 15 சதவீதத்தால் ரூ.319,466 மில்லியனுக்கு அதிகரித்தது. இதேவேளை, 2004 இல் பிரிவு 17 இன் கீழான 40 புதிய செயற்றிட்டங்களின் உள்ளடக்கத்துடன் வர்த்தக ரீதியான தொழிற் பாட்டிலிருக்கும் செயற் றிட்டங்களிலான முதலீட்டின் அதிகரிப்பு 6 சதவீதமாக காணப்பட்டது.

2004 இல் பிரிவு 16 இனதும் 17 இனதும் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட 524 செயற்றிட்டங்களினுள், 235 வெளிநாட்டவர் களுடையதாகவும் 170 கூட்டுத்தொழில் முயற்சியாகவும் இருக்கையில் 119 இலங்கையருக்கு சொந்தமாக காணப்பட்டது. ஒப்புதலளிக்கப்பட்ட உள்நாட்டு முதலீட்டுக் கூறில், பணிகள் மற்றும் வேளாண்மைத்துறை 76 சதவீதத்தை உள்வாங்கி யிருக்கையில் கைத்தொழில் துறை எஞ்சியதை உள்வாங்கியது. ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற் றிட்டங்களிலான முதலீட்டின் உள்நாட்டுக் கூறில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் இலங்கையர்களுக் கிடையேயான இணைந்த கூட்டு தொழில் முயற்சிகளில் கூட்டிணைப்பில் ஏற்பட்ட குறைப்பினால் ஏற்பட்டதாகும்.

வரைபடம் 2.5
**ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள்**




2\. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவானது நாட்டின் சாதாரணமான சட்டங்களின் கீழ் மட்டுமே தொழிற்படுவதற்கு வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலுக்கு அனுமதியளிக்கின்றது. அதாவது அத்தகைய தொழில் நிறுவனங்களுக்கு உள்நாட்டு அரசிறை, சுங்கம், செலாவணிக் கட்டுப்பாடு ஆகிய சட்டங்கள் ஏற்புடையதாக இருக்கும். முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17, குறித்துரைக்கப்பட்ட தகைமை பெறுவதற்கான நியமங்களைத் திருப்திப்படுத்தும் கம்பனிகளுக்கு சிறப்புச் சலுகைகளை வழங்குவதற்கு முதலீட்டுச்சபைக்கு அதிகாரமளிக்கிறது. அத்தகைய சலுகைகளை வழங்கும் பொறிமுறையாக உடன்படிக்கை விளங்குவதுடன், இது முதலீட்டுச்சபை ஒழுங்கு விதிகளுக்கமைய இனங்காணப்பட்ட சட்டங்களைத் திருத்தி விலக்களிப்பு செய்கின்றது. இச்சட்டங்கள் உள்நாட்டு அரசிறை, சுங்கம், செலாவணிக் கட்டுப்பாடு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

2004 இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட மொத்த முதலீட்டில், கைத்தொழிற்றுறை 36 சதவீதத்தை உள்வாங்கியதுடன் எஞ்சியவை பணிகள் மற்றும் வேளாண்மைத் துறைகளினால் உள்வாங்கப்பட்டன. கைத்தொழிற் துறையினுள், புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோற் பொருட்கள் வகை முதலீட்டில் பெரும்பங்கை ஈர்த்ததுடன், இதனையடுத்து உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகை விளங்கியது. 2004 இல் வர்த்தக ரீதியான தொழிற்பாட்டை ஆரம்பித்த 40 செயற்றிட்டங்களில் 35 கைத்தொழில் துறையினுள் காணப்பட்டன. 2004 இறுதியில், முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 16 இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டு வர்த்தக ரீதியான தொழிற்பாட்டிலிருந்த 638 செயற்றிட்டங்களுள், 233 கைத்தொழிற் துறையிலும் 405 பணிகள் துறையிலும் காணப்பட்டன.

2004 இறுதியில், கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட 1,604 தொழில் முயற்சிகளில் கிட்டத்தட்ட 1,120 தொழில் முயற்சிகள் 88 சதவீத முதலீட்டுப் பங்கு கொழும்பு மாவட்டத்திலும் 7 சதவீத முதலீட்டுப் பங்கைக் கொண்ட 228 தொழில்முயற்சிகள் கம்பகா மாவட்டத்தில் அமைந்திருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி,

அட்டவணை 2.13
**நிலையான (1996) விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | சதவீதப் பங்கு | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|
| | 2003(அ) | 2004(ஆ) | 2003(அ) | 2004(ஆ) |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொ.உ.உற்பத்தி | 64.4 | 63.6 | 6.0 | 5.4 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினது இறக்குமதிகள் | 35.6 | 36.4 | 10.2 | 9.3 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 7.5 | 6.8 |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 58.7 | 57.7 | 6.2 | 4.9 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 16.4 | 17.3 | 16.9 | 12.2 |
| அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை | 14.5 | 15.5 | 13.8 | 14.1 |
| அரசு | 2.0 | 1.8 | 46.0 | -0.9 |
| இருப்புக்களின் மாற்றம் | 0.1 | 0.0 | -50.4 | -87.6 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 24.8 | 25.0 | 5.4 | 7.8 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 7.5 | 6.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி
(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

இவ்விரு மாவட்டங்களும் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளின் 84 சதவீதத்திற்கும் மொத்த முதலீட்டின் 95 சதவீதத்திற்கும் வகைகூறின.

இவ்வாண்டில் கைத்தொழிற் துறைக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன், இவ்வாண்டில் நிலவிய குறைந்த வட்டி வீதங்களால் நன்மையடைந்து 2004 செத்தெம்பருடன் முடிவடைந்த 12 மாதகாலப் பகுதியில் ரூ.50 பில்லியனுக்கு 19.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. வழங்கப்பட்ட கொடுகடனில் அநேகமானவை தயாரிப்புத்துறையின் முக்கிய மூன்று வகைகளான பெற்றோலியம், குடிபானங்கள் மற்றும் தைத்த ஆடை துறைகளுக்கு வழங்கப்பட்டது. எனினும், இரண்டு பிரதான அபிவிருத்தி நிதிநிறுவனங்களால் வழங்கப்பட்ட நீண்ட மற்றும் நடுத்தர தவணைக் கொடுகடன் 2004 இல் 8.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

தொடர்ந்து அதிகரித்துவந்த அரச முதலீட்டுச் செலவினம் ரூ.45 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 2003 உடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகளில் 11 சதவீதங் கொண்ட அதிகரிப்பாகும். அரச முதலீடுகள், முக்கியமாக வீதி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் (தெற்கு நெடுஞ்சாலைச் செயற்றிட்டம் மற்றும் வீதி வலையமைப்பு மேம்படுத்தல் செயற்றிட்டம் உட்பட), நீர்ப்பாசனம், மின்வலு, நீர் வழங்கல், வானூர்தி நிலையம் மற்றும் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பவற்றில் கவனம் செலுத்தின. நலம், கல்வி மற்றும் குறிப்பாக வேளாண்மைத் துறையிலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பில் வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறை அபிவிருத்திக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதனால் இத்துறையிலான அரச முதலீடு முக்கியமாக நீர்ப்பாசனச் செயற்றிட்டங்கள், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும், மீன்பிடி அபிவிருத்தி, மற்றும் பயிர் நடுகையும் மீள்பயிரிடல் செயற்றிட்டங்கள் என்பவற்றின் மீது செறிந்திருந்தது.

### மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

நாடொன்றில் உள்ள மொத்த மூலவளங்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ள மொ.உ.உற்பத்தி (உள்நாட்டு மூலவளங்கள்) மற்றும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் இறக்குமதிகள் (வெளிநாட்டு மூலவளங்கள்) என்பவற்றை உள்ளடக்குகிறது. இது நடைமுறைச் சந்தை விலைகளில், ரூ.2,952 பில்லியனென மதிப்பிடப்பட்டுள்ளதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதங் கொண்ட அதிகரிப்பாகும். இவ்அதிகரிப்பானது, உள்நாட்டு மூலவளங்களிலேற்பட்ட ரூ.268 பில்லியன் (15.2 சதவீதம்) அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டு மூலவளங்களில் ஏற்பட்ட ரூ.182 பில்லியன்

அதிகரிப்பு (24.5 சதவீதம்) என்பவற்றினால் தோற்றுவிக்கப்பட்டது. உண்மை நியதிகளில், மூலவளங்களின் கிடைப்பனவு 6.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து முன்னைய ஆண்டைவிட சிறிது குறைவாக விளங்கியது. இது உள்நாட்டு மூலவளங்களின் 5.4 சதவீத உண்மை வளர்ச்சியையும், 9.3 சதவீதத்தால் அதிகரித்த பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளையும் உள்ளடக்குகிறது. 2003 இல் தொடர்பான வளர்ச்சி வீதங்கள் முறையே 6.0 சதவீதமாகவும், 10.2 சதவீதமாகவும் விளங்கின. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்களின் சார்புரீதியிலான பங்குகளில் சிறு மாற்றம் காணப்பட்டது.

மூலவளங்களின் பயன்பாட்டைப் பொறுத்த மட்டில், நுகர்வு 58 சதவீதத்தை ஈர்த்துக்கொண்டதுடன் உண்மை நியதிகளில் 4.9 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. கடந்த இரு ஆண்டுகளில் உண்மை நியதிகளில், நுகர்வு முறையே 6.6 சதவீதத்தாலும், 6.2 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தமையினால் இது நுகர்வின் வளர்ச்சியில் வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டுகிறது. நிலையான மூலதன உருவாக்கத்துக்கான மூலவளங்களின் பயன்பாடு 2004 இல் உண்மை நியதிகளில் 12.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து 2003 இன் வளர்ச்சியை விடக் குறைவாக இருந்தபோதிலும், முதலீட்டுச் செயற்பாடுகளின் தொடருகின்றமையை பிரதிபலிக்கின்றது. பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிக்கான மூலவளங்களின் பயன்பாடு 2003 இல் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வீதத்தால் வளர்ச்சியடைந்து உலகளாவிய கேள்வியிலான மீட்சியைப் பிரதிபலிக்கின்றது. நுகர்வுப் பங்கினை குறைவடையச் செய்த முதலீட்டுச் செலவினத்தின் வளர்ச்சியானது, மூலதன உருவாக்கத்தின் பங்கை 16.5 சதவீதத்திலிருந்து 17.3 சதவீதத்திற்கு மேம்படுத்தியது. மூலதன உருவாக்கத்தின் சார்பு ரீதியிலான பங்கு 2000 இல் காணப்பட்ட மட்டத்துடன் ஒப்பிடுகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ச்சியாக மோசமடைந்ததுடன் உண்மையான முதலீடானது பொருளாதாரத்தில் 8 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சி வீதத்தை எய்துவதற்குத் தேவையான மொ.உ.உ இன் 30 சதவீத முதலீட்டை விட மிகக் குறைவாகவே காணப்படு வதனால் இதுவொரு வரவேற்கத்தக்க அபிவிருத்தியாக அமைகிறது. பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகளின் சார்பு ரீதியிலான பங்கு மாற்றமின்றிக் காணப்பட்டது.

### சேமிப்புக்கள்

தனியார் மற்றும் அரச சேமிப்புக்களை உள்ளடக்கிய உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.323 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், முன்னைய

அட்டவணை 2.14

**நடைமுறைச் சந்தை விலைகளில் முதலீடும் தேசிய சேமிப்பும்**

ரூ.மில்லியன்

| விடயம் | 2003(அ) | 2004(ஆ) |
|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 1,761,161 | 2,029,441 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 279,997 | 322,619 |
| 3. வெளிநாட்டில் இருந்தான தேறிய காரணிவருமானம் | -16,535 | -20,688 |
| 4. வெளிநாட்டில் இருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 116,308 | 136,607 |
| 5. தேசிய சேமிப்புக்கள் (2+3+4) | 379,770 | 438,537 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 2) | 15.9 | 15.9 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 5) | 21.6 | 21.6 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15.2 சதவீதங் கொண்ட அதிகரிப்பாகும். இவ்அதிகரிப்பு 18.5 சதவீதத்தால் அதிகரித்த தனியார் சேமிப்புக்களிலேற்பட்ட மேம்பாட்டால் மட்டுமே ஏற்பட்டது. தனியார் துறை சேமிப்புக்களின் வளர்ச்சிக்கான தூண்டுதல், கம்பனித்துறை சேமிப்புக்களிலிருந்து பெறப்பட்டமைக்கு அவற்றின் அதிகரித்த இலாபத் தன்மையே காரணமாகும். முன்னைய இரு ஆண்டுகளாக மேம்பாடடைந்த அரச துறையிலான குறைந்த சேமிப்புத்தன்மை 2004 இல் மோசமடைந்து அரசின் மீண்டெழும் செலவினத்திலான அதிகரிப்பை பிரதிபலிக்கின்றது. தனியார் துறை சேமிப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பானது அரசதுறை குறைச் சேமிப்புக்களை ஈடுசெய்வதற்கு தேவைப்படுவதற்கும் மேலானதாக இருந்தது. எனினும் உள்நாட்டுச் சேமிப்பு விகிதம் (உள்நாட்டுச் சேமிப்புக்கள்/மொ.உ.உ) 15.9 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள், தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் என்பனவற்றின் கூட்டுத்தொகையாகிய தேசிய சேமிப்புக்கள் ரூ.439 பில்லியனுக்கு 15.9 சதவீதத்தால் அதிகரித்தன. தேசிய சேமிப்புக்களிலான வளர்ச்சி சந்தை விலையிலான மொ.உ.உற்பத்தி சமனாக வளர்ச்சியடைந்தமையினால் தேசிய சேமிப்பு விகிதமும் (தேறிய சேமிப்புக்கள்/மொ.உ.உ) 21.6 சதவீதத்தில் காணப்பட்டது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் தொடர்ந்தும் எதிர்க்கணியமாக விளங்கி, வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ரூ.20.7 பில்லியனுக்கு மேலும் மோசமடைந்தது. எனினும், தொழிலாளர்களின் பணஅனுப்பல்களை உள்ளடக்கிய

தேறிய தனியார் மாற்றல்கள் உயர் வீதத்தில் ரூ.137 பில்லியனுக்கு மேம்பாடடைந்ததன் மூலம் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் எதிர்க்கணியத் தாக்கத்தை முழுமையாக தணித்தது. தேறிய தனியார் மாற்றல்கள் தற்பொழுது மொ.உ.உ. இன் 7 சதவீதமளவிற்கு வகை கூறுகின்றன.

## 2.5 பிரச்சனைகளும் கொள்கைகளும்

கடந்த சில தசாப்தங்களாக வர்த்தக கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட முரணானதும் ஒழுங்கற்றதுமான மாற்றங்கள், வேளாண்மைத் துறையிலான முதலீட்டு விரிவாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான முக்கிய தடையாக தொடர்ந்து காணப்படுகின்றன. ஒரே நேரத்தில் எய்துவதற்குக் கஷ்டமான வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் வேளாண்மையாளர்களுக்கு பாதுகாப்பை வழங்கல் ஆகிய இரண்டு நோக்கங்களைக் கருத்திற் கொண்டு 2004 இலும் கூட குறிப்பிடப்பட்ட சில வேளாண்மைப் பொருட்கள் மீதான வர்த்தகக் கொள்கை பல தடவைகள் திருத்தியமைக்கப்பட்டன. முக்கிய உணவுப் பண்டங்கள் மீதான குறித்துரைக்கப்பட்ட தீர்வைகள் குறைக்கப்பட்டு பின் உயர்த்தப்பட்டன. அல்லது கூட்டப்பட்டு பின் குறைக்கப்பட்டன. இத்தீர்மானங்கள் உற்பத்தி யாளர்களையும் இறக்குமதியாளர்களையும் கொண்ட சந்தைக்கு முரணான சமிக்ஞைகளை வழங்கி யிருக்கையில், அவை பொருத்தமற்ற நேரத்தில் மேற்கொள்ளப்பட்டமையினால் விலை அழுத்தத்தையும் வழங்கல் பற்றாக்குறைகளையும் ஏற்படுத்தின. வேளாண்மைத் துறையின் மேம்பாட்டுக்கான முக்கிய தேவையாக உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோருக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத, ஒழுங்கற்ற தீர்வை மாற்றங்கள் காரணமாக குறுகிய கால வழங்கல் நிலைமையைத் திரிபுபடுத்தாத சந்தையை அடிப்படை யாகக் கொண்டதும், முரணற்றதும் மற்றும் நன்கு வரை யறுக்கப்பட்ட நீண்டகால வர்த்தகக் கொள்கை காணப்படுகிறது. உண்மையில் ஒழுங்கற்ற வர்த்தகக் கொள்கைகள், நீண்ட காலத்தில் உதவுவதற்கு இலக்கிடப்பட்ட தொகுதியினருக்கு பெரும்பாலும் தீங்கினையே விளைவிக்கின்றன.

குறிப்பிட்ட சில துறைகளுக்கு உதவுதொகைகள் வழங்குவதனூடான அரச தலையீடுகள் மற்றும் ஏனையோருக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட விலைகளை வழங்கும் சந்தைத் தலையீடுகள் என்பன இலங்கையில் நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டுவரும் பிரச்சனை யாகும். வளமாக்கி உதவுதொகை, இலாபமற்ற பொருளாதாரச் செயற்பாடுகளை ஊக்குவிக்கக் கூடியதால், இது பொதுவான பொருளாதாரத்துக்கு எதிர்க்கணியப் பெறுமதி கூட்டலை உருவாக்கும்.ஒரு வகைவளமாக்கி மீதான உதவுதொகை (உ+ம் யூரியா) உள்ளீடுகளின் செலவு அமைப்பை திரிபுபடுத்துவதுடன் பொருத்தமற்ற போதிலும் உதவுதொகையளிக்கப்பட்ட வளமாக்கியை பெருமளவில் பயன்படுத்துவதற்கு வேளாண்மையாளர்களை ஊக்குவித்து வேளாண்மைத் துறையின் மொத்தக் காரணி உற்பத்தியாக்கத்தினைக் குறைக்கின்றது. உத்தரவாதமளிக்கப்பட்ட விலையுடன் தெரிந்தெடுக்கப்பட்ட வேளாண்மைப் பயிர்களுக்கான கொள்வனவு செய்யும் முகவராக அரச சந்தையில் தலையீடு செய்வது, எதனை உற்பத்தி செய்வது என்ற வேளாண்மையாளர்களின் தீர்மானங்களில் தாக்கங்களை ஏற்படுத்தி சந்தை சமிக்ஞைகளை திரிபுபடுத்தி இறுதியில் வேளாண்மைத் துறையில் வினைத் திறனற்ற மூலவள ஒதுக்கீட்டுக்கு இட்டுச்செல்லும். மேலும், இச் செயற்பாடுகள், நீண்ட காலத்திற்கு தாக்குபிடிக்க முடியாத வரவு செலவுத் திட்டச் சுமையை உருவாக்குவது மட்டுமன்றி, உற்பத்தி யாளர்களுக்கும் நுகர்வோருக்கும் நன்மைகளை வழங்கும் தனியார் துறை வேளாண்மைப் பதனிடல், பொதி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளின் அபிவிருத்தியையும் ஊக்கமிழக்கச் செய்யும். 2004 இலும் அரசு அவ்வாற ான உதவு தொகைகளை தொடர்ந்து வழங்கியதுடன் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக சந்தையில் தலையிட்டது. 2004 இல் வளமாக்கி உதவுதொகைக் மொத்தக் கடப்பாடு வரவு செலவுத் திட்டத்தின் ஆரம்ப ஒதுக்கீடான ரூ.2.0 பில்லியனிலிருந்து ரூ.5.3 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, உள்ளீட்டு விலைகளின் தாக்கத்திலிருந்து வேளாண்மையாளரை மேலும் பாதுகாப்பதற்காக 2004 யூலையிலிருந்து வளமாக்கி மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரியின் நீக்கத்துடன் அரசிறையும் வீழ்ச்சியடைந்தது. அரசிறையிலும் செலவினத்திலும் மீதான மீதும் அவ்வாறான கொள்கைகளின் குறுகிய கால மற்றும் நீண்ட கால விளைவுகளூடாக பொருளாதாரத்தில் அவை தோற்று விக்கக்கூடிய திரிபுத் தாக்கமானது இத்துறையில் நலவுரித்துக்களை கொண்டுள்ளவர்களால் எப்பொழுதும் தெளிவாக விளங்கிக் கொள்ளப்படாத போதிலும், அவ்வாறான கொள்கைகளுக்கு பிரசித்தமான அனுசரணை கிடைக்கின்றது. நலவுருத்துக்களைக் கொண்டுள்ளவர்களுக்கான அவ்வாறான பாதகமான விளைவுகள் பற்றிய பொது விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வது அத்தியாவசியமாகிறது. ஏனெனில் இதனால் எடுக்கப்படும் தீர்மானங்கள் முழுப் பொருளாதாரத் திற்கும் உச்ச நன்மை பயப்பனவாக அமையக்கூடும்.

சுனாமிப் பேரழிவு மற்றும் மீன்பிடித் துறை மீதான அதன் பாதகமான தாக்கத்திற்குப் பின்பு,

அதிகரிக்கப்பட்ட உற்பத்தியாக்கத்தினூடாக நுகர்வோருக்கு குறைந்த விலையில் கடலுற்பத்திகள் கிடைப்பதனை மேம்படுத்தும் வேளையில் மீன்பிடிச் சமூகத்திற்கு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வருமானங்களை வழங்கக்கூடிய நவீனமானதும் இயக்கவாற்றல் மிக்கதுமான துறையாக மீன்பிடிக் கைத்தொழிலை மீள்ஒழுங்குபடுத்தி மீளக்கட்டியெழுப்பி முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பமாக பேரழிவைப் பயன்படுத்தி தேசிய மீன்பிடி கொள்கைச்சபை அதன் அண்மைய கொள்கை முன்மொழிவுகளை மீளாய்வு செய்ய வேண்டும்.

சுருங்கக்கூறின், விரைவாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியால் நெறிப்படுத்தப்பட்ட வேளாண்மையிலான மேம்பாடு, இலங்கையில் இன்னமும் ஏற்படவில்லை என்பதனை அண்மைக் காலத்திலான வேளாண்மைத் துறையின் செயலாற்றம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இது, உயர் தகைமையுள்ள விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி அலுவலர்களில் பெருமளவினர் வேளாண்மைத் திணைக்களத்தில் தொழில்புரிவதற்கு மத்தியிலும் நிகழ்ந்துள்ளது. தவிர்க்க முடியாத விளைவு யாதெனில், நாட்டின் நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த வேளாண்மைச் செறிவு மற்றும் தனிச்சிறப்புத் தன்மை என்பன அமைப்பு ரீதியான மாற்றத்துக்குள்ளாகாமல் இலங்கையின் தனிச் சிறப்புத்தன்மை ஒரு சில பயிர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வானிலை நிலைமைகள், மோசமான நீர் முகாமைத்துவம், பழைமை வாய்ந்த காணிச் சட்டங்கள் மற்றும் பன்னாட்டுப் பண்ட விலைகள் என்பவற்றால் பாதிப்படையக் கூடிய நெல், தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய சில களப்பயிர்களில் தங்கியிருத்தல் உற்பத்தியாளர் இடர்நேர்வுகளை அதிகரித்து அவர்களின் வருமானத்தைக் குறைக்கின்றது. இதன் விளைவாக வருமானத்தைப் பாதுகாத்து இத்துறைக்கு உதவுதொகைகளை வழங்குவதற்காக அவ்வப்போதைக்கு மேற்கொள்ளப்படும் குறுகிய கால அரச தலையீடு பொருளாதாரத்துக்கு குறிப்பாக இறைத்திரட்சிக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய முக்கிய தாக்கங்களை விளைவிக் கிறது. மேலும், துறை சார்ந்த சிறந்த ஊக்குவிப்புக்கள் மற்றும் உதவு தொகைகள், என்பன வேளாண்மைத் துறையிலும் அதுபோல் முழுப் பொருளாதாரத்திலும் சமனற்ற திரிபடைந்ததுமான அபிவிருத்திகளை ஏற்படுத்துகின்றன. உண்மையில், நாடு சுதந்திர மடைந்ததிலிருந்து இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க அரச மூலவளங்களின் பாய்ச்சல் மற்றும் அண்மைய ஆண்டுகளில் அரசதுறை வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கு அனுசரணையளித்தல் ஆகியவற்றுக்கு மத்தியிலும் இத்துறையின் வளர்ச்சி வீதம் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக குறைந்த சராசரி அளவில் மாறுபட்டு தளம்பலுற்றுக் காணப்படுகிறது. தொழிலீடுபட்டுள்ள தொழிற்படையில் ஏறத்தாழ 30-35 சதவீதமானோர் வேளாண்மைத்துறையில் காணப்பட்ட போதிலும் நுநிச 2003/04 அளவீடானது தொழிலற்றோரில் 1 சதவீதமானோர் மட்டுமே இத்துறையில் தொழில்புரிய விரும்பினர் என கண்டறியப் பட்டுள்ளது. உண்மையில் வேளாண்மையிலான தொழிலாளர் உற்பத்தித்திறன் (ஊழியர் ஒருவருக்கான மொ.உ.உ) ஏனைய இரண்டு துறைகளிலான உற்பத்தித் திறன்களிலான அரைவாசியை விட குறைவாகக் காணப்பட்டதுடன் தேசிய சராசரியை விட வெகுவாக குறைவடைந்து காணப்படுகிறது. இதன் விளைவாக, ஏனைய இரண்டு துறைகளும் விரைவான வீதத்தில் வளர்ச்சியடைந்து அண்மைய தசாப்தங்களில் பொருளாதாரத்துக்கு கணிசமானளவில் பெருமளவு பங்களிப்புச் செய்தன. நுகர்வோருக்கு நியாயமான விலையில் பொருட்கள் கிடைப்பதனை இயலச் செய்வதற்காக பன்னாட்டு சந்தைகளுடன் போட்டியிடும் அதேவேளை, உற்பத்தித் திறன் மேம்பாடுகள் மீது கவனத்தைச் செலுத்தக் கூடியதும், காணி மற்றும் நீரின் கிடைப்பனவின் நடைமுறைகளுக்கு தீர்வு காணக் கூடியதும், வேளாண்மைத் தொழிலாளருக்கு போதிய வருமானத்தை வழங்கக்கூடியதுமான நவீனமானதும் நீடித்து நிலைத்திருக்கக்கூடியதுமான வளர்ச்சிப் பாதைக்கு மரபுவழி முறைகளிலிருந்து மாறிச் செல்வதற்கான நியாயமான, தெளிவான, நிலையான கொள்கையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டாலன்றி வேளாண்மைத்துறை விரும்பப்படும் மட்டத்திற்குக் கீழேயே தொடர்ந்து தொழிற்படும். இந்தப் பின்னணியில், காணிச்சந்தை, நீர் முகாமைத்துவமும் பயன்பாடும், விதைக் கொள்வனவு, விரிவாக்கப் பணிகள், உதவு தொகைகள் மற்றும் தீர்வை சார்ந்த முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கும் எடுத்தியம்புவதற்கும் தெளிவான கொள்கைகளை உருவாக்குவதற்குமான தேவையை குறைத்து மதிப்பிட முடியாது. இல்லையேல், வேளாண்மைத் துறையிலான தற்போதைய தொழிலாளர் வழங்கல் மற்றும் முதலீடு என்பன வேறுதுறைகளுக்கு நகரலாம்.

ஏனைய நாடுகளின் வேளாண்மையுடன் இலங்கையின் வேளாண்மைத் துறையை போட்டி மிக்கதாக செய்வதற்கு உற்பத்தித் திறனை உயர்த்து வதற்கான அவசர தேவையொன்று காணப்படு கின்றது. நடாத்தப்பட்ட அடிப்படையான ஆராய்ச்சிகளை சில புதிய கண்டுபிடிப்புக்களை தோற்றுவித்துள்ள போதிலும் இலங்கைக்கு அருகிலுள்ள நாடுகள் அந்நாடுகளிலுள்ள பல பயிர்களின் விளைச்சல்

மட்டங்களை இலங்கையினதைக் காட்டிலும் அதியுயர்வாக அதிகரிக்கச் செய்து இத்துறையில் இலங்கையை விட மிக விரைவாக முன்னோக்கிச் சென்றுள்ளனர். இலங்கையும் உலகில் எங்கேனும் ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி என்பனவற்றை பின்பற்றுவதனூடாக உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான அணுகுமுறையொன்றை பின்பற்ற வேண்டும்.

அண்மைய சாதனைகளுக்கு மத்தியிலும், கைத்தொழிற்றுறை பலதரப்பட்ட தடைகளால் பாதிப்படைகிறது. அவற்றினுள் போதுமானதற்ற உட்கட்டமைப்பு வசதிகள், அதிகரித்த வலுச்சக்தி செலவு அரசதுறை தொழில்முயற்சிகளை மீள்ஒழுங்குபடுத்துதில் போதுமானளவு முன்னேற்றமின்மை நெகிழ்வற்ற தொழிலாளர் சந்தை மற்றும் செயலற்றுப் போவதற்குரிய உரிய சட்டம் இல்லாமை என்பன விளங்கின. நேரம் எடுக்கும் அறிக்கையிடும் தேவைப்பாடுகள் மற்றும் சுமையான ஒப்புதலளித்தல் நடைமுறைகள் போன்ற குறிப்பிட்ட சில செயற்பாடுகளிலான சில ஒழுங்குவிதிகள் வியாபாரக் கொடுக்கல் வாங்கல் செலவுகளை அதிகரித்துள்ளன. நீதிமன்ற நடைமுறைகளிலான நீண்ட தாமதங்கள், ஏற்கனவே இருக்கும் சட்டங்களிலான சிக்கல் மற்றும் நாட்டில் போதுமான வர்த்தக நீதிமன்றங்கள் இல்லாமை என்பன வழக்காடல் செலவுகளை அதிகரித்துள்ளன. தொழிலாளர் சந்தையில் நெகிழ்ச்சித் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் 2003 இல் தொழில் சட்டங்கள் பலவற்றிற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் முக்கிய திருத்தங்களின் தீவிர அமுல்படுத்தல் தற்போதும் பரிசீலனையின் கீழேயே இருந்துவருகிறது. குறிப்பாக, வேலையிலிருந்து நீக்கப்படும் தொழிலாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவின் கணிப்பீட்டுக்கான சூத்திரம் 2005 மார்ச்சில் இறுதியாக்கப்பட்டபோதும் தொழில் தருநர்களின் கரிசனைகளுக்கு இது போதியளவில் தீர்வு காணவில்லையாதலினால் எதிர்கால முதலீட்டின் மீதான இவற்றின் தாக்கம் நிச்சயமற்றதாகக் காணப்படுகின்றது. கைத்தொழிற் கழிவால் உருவாக்கப்படும் சுற்றாடல் மாசுபடுத்தல் மற்றும் பாதுகாப்பதற்கு உரிய சட்ட ஏற்பாடுகள் இல்லாமை என்பனவும் கரிசனைக்குரிய விடயங்களாக விளங்குகின்றன.

இத்துடன், கைத்தொழிற்றுறைச் செயற்பாட்டில் 50 தொடக்கம் 60 சதவீதம் வரை மேல் மாகாணத்தில் செறிந்திருப்பதனை மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் காட்டுகின்றன. இங்கு கைத்தொழிலில் முதலீட்டில் இதனையும் விட கூடியளவு பங்கு செறிந்துக் காணப்பட்டது. இத்துறையில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய உயர் வளர்ச்சியை எய்துவதற்கு தொழில்நிலை மற்றும் வருமானம்பெறும் வாய்ப்புக்களில் ஏற்கனவே இருக்கும் பிராந்திய வேறுபாடுகளைக் குறைப்பதற்காக கைத்தொழில் அமைவிடத்தை பூகோள ரீதியாகப் பன்முகப்படுத்துவதற்கான அவசரத் தேவையொன்று காணப்படுகிறது. இப்பின்னணியில் இலங்கை உயர் வளர்ச்சிப் பாதையில் நகர வேண்டுமாயின் கைத்தொழில் துறையில் ஏற்கனவேயிருக்கும் தடைகள் நீக்கப்படுவது அவசியமானதாகும்.

அண்மைய காலத்தில் பொருளாதார வளர்ச்சியை தூண்டிய விசையாக பணிகள் துறை விளங்குகின்றது. இத்துறையில் தொழிலாளர் உற்பத்தித் திறன் உயர்வானதாக விளங்கி வேளாண்மையிலான தொழிலாளர் உற்பத்தித் திறனைக் காட்டிலும் இரு மடங்கு அதிகமானதாக விளங்கியது. குறிப்பாக, வெளிநாட்டு வர்த்தகம், தொலைத்தொடர்பூட்டல், துறைமுகப் பணிகள், சுற்றலா விடுதிகளும் உணவகங்களும் மற்றும் தனியார்க் கல்வி, நலம், விளம்பரப்படுத்தல், வியாபாரப் பணிகள் போன்ற பிரத்தியேகப் பணிகள் ஆகிய துறைகள் அதிகரித்துச்செல்லும் நுகர்வோர் வருமானங்கள் மற்றும் மாற்றமுறும் விருப்புத் தேர்வுகள் என்பவற்றிலிருந்து தோற்றம்பெறும் கேள்வியை பிரதிபலிக்கும் வகையில் வளர்ச்சியடைகின்றன. இத்துறைகளில் பெரும்பாலானவை சந்தை விசைகளின் கீழ் செழிப்பாக வளர்ச்சியடைந்தன. தாராளமயமாக்கல் மற்றும் துறைமுகங்கள், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் இறக்குமதி வர்த்தகம் போன்ற முக்கிய துறைகள் அரச தனியுரிமைகளிலிருந்து மாறிச் சென்றதைத் தொடர்ந்து அத்துறைகள் சந்தை விசைகளுக்கு நன்கு பதிலிறுத்து இயக்கவாற்றலைக் காட்டியுள்ளன. அண்மைக் காலத்தில் பணிகள் துறையிலான அவ்வாறான சாதகமான படிப்பினைகளிலிருந்து கற்பதற்கான காலம் வந்துள்ளது. குறிப்பிட்ட பொருளாதாரச் செயற்பாடுகளினது வெற்றியிலான அரசப் பங்கின் மீளாய்வானது அதன் ஈடுபாட்டை, வசதிப்படுத்தல் பங்கிற்கு மட்டுப்படுத்தி சகல துறைகளிலும் வளர்ச்சியை நெறிப்படுத்துவதற்கு சந்தை விசைகளையும் தனியார் துறையையும், அனுமதிப்பதற்கான தெளிவாக தேவை மற்றும் நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான சூழலை உருவாக்கக்கூடிய சூழல் பொதுமக்கள் நலம், பொதுமக்கள் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் சட்டமும் ஒழுங்கும் போன்ற தேசிய முன்னுரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் நடைமுறைக்கிடப்படுவதனை உறுதிப்படுத்தல் என்பவற்றை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

2004 இல் தலைக்குரிய வருமானம் வரலாற்றில் முதற் தடவையாக ஐ.அ.டொலர் 1,000 (இலங்கை ரூ.100,000) இனை தாண்டியது. தேசிய மட்டத்திலான தலைக்குரிய வருமானம் இத்தடையைத் தாண்டியபோதிலும், மாகாண ரீதியான வருமானப் பகிர்ந்தளிப்பிலான வேறுபாடு கரிசனையை ஏற்படுத்துகின்றது. இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட (புள்ளி விபரப் பின்னிணைப்பு அட்டவணை 3) 2003 ஆம் ஆண்டுக்கான மாகாண ரீதியான மொ.உ.உ மதிப்பீடுகளின் படி மேல்மாகாணம் தனித்து மொத்த மொ.உ.உற்பத்தியின் 45 சதவீதத் திற்கு வகைகூறிய வேளையில் வடக்கு, கிழக்கு ஊவா, மற்றும் சபரகமுவ மாகாணங்கள் வறுமைகூடிய வறிய மாகாணங்களாக தோற்றம் பெற்றன. உண்மையில், மேல்மாகாணம் மட்டுமே தலைக்குரிய வருமானமான ஐ.அ.டொலர் 1,000 இனை விஞ்சியிருப்பதனையும் சில மாகாணங்களில் தலைக்குரிய வருமானங்கள் இன்னமும் ஐ.அ.டொலர் 500 மட்டத்துக்குக் கீழேயே இருப்பதையும் மாகாண ரீதியான பகுப்பு எடுத்துக்காட்டுகிறது. மேல்மாகாணத்திலான பொருளாதாரச் செயற்பாட்டின் உயர் செறிவானது மேல்மாகாணத்திற்குக்கூட எதிர்காலத்தில் நன்மை பயக்கமாட்டாது. ஏனெனில் அதிகரித்துச்செல்லும் குடித்தொகை, சுற்றாடல் கரிசனைகள் மற்றும் அவை சார்ந்த பிரச்சனைகள் என்பன இம்மாகாணத்தில் அடையப்பட்ட பொருளாதாரச் சாதனைகளைக் பாதிப்புக்குள்ளாக்கலாம். இப்பிராந்திய வேறுபாடுகள் பொதுவான உயர் பொருளாதார வளர்ச்சி எய்தப்படுவதனை நேரடியாகப் பாதிப்பது மட்டுமல்லாது நாட்டின் சமூக மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மீதான அவற்றின் உள்ளார்ந்த தாக்கத்தினூடாக மறைமுகமாகப் பாதிப்பதால் இப்பிரச்சனையில் கவனஞ் செலுத்துவது மிக முக்கியமானதாகும்.

2002 இன் முற்பகுதியிலிருந்து போர்நிறுத்த உடன்படிக்கையால் உருவாக்கப்பட்ட சூழலுக்கான முதலில் நுகர்வோர் நம்பகத்தன்மை மற்றும் பின்னர் முதலீட்டாளர் நம்பகத் தன்மை ஆகிய பொருளாதாரத்தின் பிரதிபலிப்பானது வளர்ச்சிக்கான நாட்டின் உள்ளார்ந்த வளத்தினை தெளிவாக வலியுறுத்தியது. இவ்உள்ளார்ந்த வளத்தை அடையும்பொருட்டு இரு முக்கிய துறைகள் மேலதிக முன்னேற்றத்தை வேண்டிநிற்கின்றன. முதலாவதாக, இயலளவு விரிவாக்கத்தை நோக்கி தற்போதைய முதலீட்டு மட்டம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, அரிதான மூலவளங்களின் வினைத்திறன் மிக்க பயன்பாட்டை நோக்கி பொதுவான உற்பத்தித் திறன் மேம்படுத்தப்பட வேண்டும். உள்நாட்டுச் சேமிப்பு குறைந்த வீதத்தில் காணப்படுவதனால் உயர் முதலீட்டை நிதியிடுவதற்கு வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் மிகவும் அத்தியாவசியமானதாகும். எனவே, முதலீட்டுச் சூழல் தொடர்ந்தும் எழுச்சி பெற்றிருப்பது முக்கியமாகிறது. 2004 இல் முதலீட்டிலேற்பட்ட அதிகரிப்பு வரவேற்கத்தக்க அபிவிருத்தியாக இருந்தபோதிலும், 8 சதவீதத்திற்கும் கூடுதலான விரும்பத்தக்க ஆண்டு வளர்ச்சியை எய்துவதற்குத் தேவையான முதலீட்டு விகிதம், உண்மையிலேயே மொ.உ.உற்பத்தியின் 30 சதவீதமளவிற்கும் குறைவாகவே காணப்பட்டது. அவ்வாறான உயர் மட்ட முதலீட்டை அடைதல், முதலீட்டாளர் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் பல காரணிகளில் இறுதியாகத் தங்கியிருக்கும். உள்நாட்டுக் குழப்பத்துக்கு நீடித்துநிற்கும் சமாதானத்தை ஏற்படுத்துதல், அமைப்பு ரீதியான தடைகளை நீக்குவதற்கான சீர்திருத்தங்களின் விரைந்த அமுலாக்கம், கூடியளவு இறை ஒழுங்குமுறை உள்ளடங்கலான மதிநுட்பம் வாய்ந்த பேரண்ட பொருளாதார முகாமைத்துவம், அரசியல் உறுதிப்பாடு, மேம்பாடடைந்த உட்கட்டமைப்பு வசதிகள், குறிப்பாக மின்வலுவும் வீதிகளும் மற்றும் பொருளாதாரக் கொள்கையில் நிச்சயமற்ற தன்மைகளைக் குறைத்தல் என்பன நாட்டின் எதிர்கால உள்ளார்ந்த வளத்தை அதிகரிக்கும் முக்கிய காரணிகளாகும்.

சுனாமிப் பேரழிவு முழு உலகினதும் நன்மதிப்பை இலங்கைக்கு ஏற்படுத்தியது. அவ்வாறான மனித அனர்த்தமானது நாடு, இன, சமய, அரசியல், தனியார் மற்றும் அரச பிரிவுகளிடையே நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கும் மீளமைப்பதற்கும் மீளக்கட்டியெழுப்புவதற்கும் ஒன்றுபடுவதற்குமான சந்தர்ப்பமொன்றை வழங்கியுள்ளது. இலங்கையை உயர்வானதும் நீடித்து நிலைத்திருக்கக்கூடியதுமான வளர்ச்சியை நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பம் திரும்பவும் தவறவிடாதிருக்கப்பட வேண்டுமாயின், இச்சந்தர்ப்பத்தில் போர் நிறுத்தத்திலிருந்து வளர்ச்சியடைந்த முதலீட்டாளர் நம்பிக்கையைப் பேணுவதற்கான தெளிவான கொள்கைக் கடப்பாடு அத்தியவசியமாகத் தேவைப்படுகிறது.